

Dr பரமநாதன் விக்கினேஸ்வரா
ஈராண்டு நினைவாக



கலாநிதி த.கலாமணி

# அணிந்துரைகள்

கலாநிதி த. கலாமணி

# அணிந்துரைகள்

டாக்டர் பரமநாதன் விக்கினேஸ்வரா அவர்களின்
ஈராண்டு நினைவாக வெளியிடப்படுகின்றது.

**கலாநிதி த.கலாமணியின் அணிந்துரைகள்**

த.கலாமணி

முதற்பதிப்பு: 2024 பங்குனி

© த.கலாமணி

வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 124

விலை: 500.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Kalanithy Tha.Kalamany Aninthuraikal

T.Kalamany

First Edition: 2024 March

© T.kalamany

Layout : K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 124

Price: 500.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-55-9

ஜீவநதி வெளியீடு – 332



மலர்வு : 13.11.1930
நிறைவு 22.02.2022

டாக்டர் பரமநாதன் விக்கினேஸ்வரா
அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு
நாளை முன்னிட்டு இந்நூல்
வெளியிடப்படுகிறது.

## முன்னுரைகளுக்கு எல்லாம் முன்னுரை வரைந்த கலாநிதி த. கலாமணி

இலக்கியப்பணியை ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் செய்த கலாநிதி தம்பிஐயா கலாமணியின் வாழ்வும் பணியும் காலங்காலமாக போற்றப்பட வேண்டும்.

தமிழ் உலகிற்கு அவர் ஆற்றிய இலக்கிய, நாடகப் பணி வரலாற்றில் முக்கியமானது. தலைமுறை தலைமுறையாக செய்யவேண்டிய நாடக வழி முறைகளையும், அதனால் கிடைக்கிற பிரதிபலன்கள் அனைத்து மக்களிடம் கிடைக்க வேண்டுமென்கிற ஆர்வம்தான் கலாநிதி தம்பிஐயா கலாமணியின் வாழ்நாள் சாதனையாக மிளிர்கிறது.

இந்த தொகுப்பில் உள்ள முன்னுரைகளை ஒன்று சேர்த்து நூலாக வெளிவர வேண்டும் என்பது முன்னுரைகளுக்கு எல்லாம் முன்னுரையாக விளங்கும் என்பதில் திடமாக நம்புகிறேன். “கலாநிதி கலாமணி அணிந்துரைகள்” எனும் இந்தத் தொகுப்பானது நீண்ட காலமாக அவர் எழுதிய விஞ்ஞானபூர்வமான முன்னுரைகளின் தொகுப்பு நூலாகும்.

பல்வேறு காலகட்டங்களில் அமரர் கலாநிதி கலாமணி எழுதிய முன்னுரைகள் ஒரு நூலின் உள்ளடக்கத்தை, தெளிவான பார்வையை வாசிக்கும் வாசகர்களுக்கு உத்வேகமூட்டியது. ஒரு நூலுக்கு பல நூறு புத்தகங்களிலிருந்து தரவுகள் எடுக்கப்பட்டாலும், ஆசிரியரின் கருத்தை அப்படியே சொல்லவேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்து முன்னுரை வரைவதில் அமரர் கலாநிதி கலாமணியின் எழுத்து வண்ணம் அழகானதாகும்.

அதனாலேயே நான் தொகுத்த “கல்லறை மேலான காற்று” கவிதைத்தொகுதிக்கு முன்னுரை எழுத அவரிடம் வினவிய போது, இக்கவிதை தொகுதிக்கு முன்னுரை ஒன்று அவசியம்தானா என்பது

இன்னமும் வினாவாகவே என்னிடம் உள்ளது என ஆசான் கலாமணியின் வார்த்தைகள் இன்னமும் என் மன நினைவுகளில் பதிந்துள்ளது.

வடமராட்சியில் கடந்த 1987 "ஒப்பரேஷன் லிபரேஷன்" போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவு களையும் முதலாவதாக ஆண்டு நினைவு கூர்வாகக் கொண்டு வெளியான கவிதை தொகுப்பே அந்நூலாகும்.

இப்படித் தான் எங்கள் இலக்கிய நட்பு முகிழ்ந்தது. காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1988 போர்க் காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்ட மாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பான

"கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பு வெளியாகியது.

இக்கவிதை தொகுதியின் முன்னுரையில் "விமர்சனமாக அமையக் கூடாதென்பதனால் கவிதைகள் பற்றி தனித்தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்தமன்று எனினும் இக்கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டும் பொதுப்பண்பைத் தம்மகத்தே எனக்கூறுதல் சாலப் பொருந்தும். வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் இதற்கு ஓர் இடமுண்டு" என எழுதியுள்ளார் ஆசான் கலாமணி.

வடமராட்சியின் மூத்த விருட்சமாக என்றும் விளங்கும் கலாமணி ஆசான் படைத்த படைப்புக்கள் பல. அவற்றுள் அம்மாவின் உலகம், இலக்கியமும் உளவியலும், இளையோர் இசை நாடகம், ஏனிந்தத் தேவாசுர யுத்தம், நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள், தெளிதல், பாட்டுத்திறத்தாலே, அரண், தரிசு, இலக்கியமும் உளவியலும் ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

அல்வாய் மண்ணின் அகல்விளக்காக ஒளிவீசிய ஆசான் மண்வாசனை வீசும் எழுத்தை தன் உயிராக நேசித்தவர்.

அவர் என்றும் புதிய தலைமுறைகளுக்கான வழிகாட்டியாய் இருப்பார். அவரின் எழுத்துக்கள் என்றும் உயிர்ப்பின் சுவாசமாகும்.

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

# பொருளடக்கம்

1. ஆர் எஸ் ஆனந்தனின்
"இருளைக் காட்டும்"
2. சித்திரா சின்னராஜனின்
"வல்லைவெளி"
3. அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
"ஆளுமைக் கொள்கைகள்"
4. ஷெல்லிதாசனின்
"நகரவீதிகளில் நதிப்பிரவாகம்"
5. க.திலகநாதனின்
"அரங்கு"
6. கொற்றை பி.கிருஷ்ணானந்தனின்
"கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக் கதைகள்"
7. கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன் ஞ எம்.யூ.எம்.சபீரின்
"உசாத்துணையிடல் பாணிகள்"
8. கனகசபை பாஸ்கரனின்
"கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கணிப்பீடு"
9. ஜங்கரன் விக்கினேஸ்வராவின்
"கல்லறை மேலான காற்று"
10. கலாநிதி செல்வ ரூபி ஸ்கந்தராஜாவின்
"வகுப்பறைக் கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்"
11. கலாநிதி தேவராசா முகுந்தனின்
"முன் பள்ளிக் கல்வி"
12. கி.நடராசாவின்
"திருக்குறள் – உரை விளக்கம்"
13. பொலிகை ச.திருப்பதியின்
"காதோடு வாய் புதைத்து"
14. கவிஞர் அல்வாயூர் மு.செல்லையாவின்
"வளர்பிறை"

15. பொலிகை ஜெயாவின்
"பறி கொடுத்த பின்னும் வாழத் துடிப்பவர்கள்"
16. நடிகநாதமணி மு. செ.விவேகானந்தனின்
"சிறுவர் பாடல்"
17. க.சின்னராஜனின்
"தண்ணீர்"
18. மிஷாந்தி செல்வராஜாவின்
"மூன்றாம் முத்தம்"
19. கந்தர்மடம் அ.அஜந்தனின்
"மனமெனும் கூடு"
20. தெணியானின்
"பனையின் நிழல்"
21. சின்னத்தம்பி இன்பரூபனின்
"நாடகம் – நாடகக் கலைஞர்கள்"
22. ஏ.எஸ்.சற்குணராஜாவின்
"சித்திரக்கலை"
23. தாட்சாயணியின்
"ராணியம்மா"
24. கலாநிதி செ. திருநாவுக்கரசுவின்
"எண்ணங்களும் வண்ணங்களும்"
25. ஏழுமலைப்பிள்ளையின்
"சதுரங்க வேட்டை"
26. எம்.எஸ்.கமலநாதனின்
"மன உயிர்ப்புகள்"
27. கவிகலியின்
"இன்னுமொரு தேசம்"
28. இ.இராஜேஸ்கண்ணனின்
"போர்வைக்குள் வாழ்வு"
29. த.ஜீவராஜாவின்
"தமிழ் இலக்கியச் சாரம்"
30. க.பேர்ணாட்டின்
"இலங்கையின் கல்விப் போக்குகள்"
31. சோ.கிருஸ்ணதாஸின்
"அட்சரகணிதம்"
32. கண.எதிர்வீரசிங்கத்தின்
"சிறுவர் கவிச்சரம்"

33. கலைஞான வாரிசு மாணிக்கம் செல்லத்தம்பி அவர்களின்
கலை உலக வாழ்வு
34. மா.சின்னராசாவின்
**"ஞானதீபம்"**
35. பேராசிரியர் மா.கருணாநிதியின்
**"நினைக்கப்பட வேண்டிய ஆளுமை அமரர் க.மார்க்கண்டு அவர்களின் சிறு வரலாறு"**
36. வே.தணிகாசலத்தின்
**"தணியாத தாகம்"**
37. ஜே.எஸ்.ராஜ் இன்
**"உயிர்த்தெழும் வலிகள்"**

பின்னிணைப்பு 1 பின்னட்டைக்குறிப்புகள்

1. சதாசிவம் அமிர்தலிங்கம் - "நவீன கல்விப் பிரயோகங்கள்"
2. வெ.துஷ்யந்தனின் - "வெறிச்சோடும் மனங்கள்"
3. செல்லக்குட்டி கணேசனின் - "அடையாளம்"
4. இராஜகிருபனின் "இரவின் எதிரிப்பூக்கள்"
5. இராஜினிதேவி சிவலிங்கத்தின் பல்துறைசார் கட்டுரைகள்
6. அல்வாய் மனோகராக் கவிஞர்கள் கவிதைகள்
7. அ.பௌநந்தியின் "இன்னபடி முரணிலை"

பின்னிணைப்பு -2

1. நோயாளிகளின் நம்பிக்கையாய் விளங்கிய மருத்துவர் விக்கினேஸ்வரா!

# ஆர்.எஸ்.ஆனந்தனின்
# "இருளைக் காட்டும்"

*கூத்துக் கலைஞர் அண்ணாவியார் ஆனந்தன் அவர்கள் தமது முதலாவது சிறுகதைத் தொகுப்பு நூலின் பிரதியை எடுத்துவந்து "இதற்கு அணிந்துரை எழுதித் தாருங்கள்" என்று கேட்டபோது மகிழ்ந்தேன். கலைஞர் ஆனந்தன் மீது எப்போதும் எனக்குத் தனி மதிப்பு உண்டு. எமது பிரதேசத்தில் பாரம்பரியமாக ஆடப்பட்டு வந்த நாட்டைக்கூத்து மரபை இன்றும் பேணி வருபவர் இவர். கலாபூஷணவிருது பெற்றவர்.*

*ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வடமராட்சியின் "அறிவோர்கூடல்" நிகழ்வில் "செட்டி வர்த்தகன்" என்னும் பாரம்பரிய நாட்டைக் கூத்தை அதன் மரபு கெடாமல் தயாரித்து அண்ணாவியம் செய்தும் நெறியாள்கை செய்தும் அரங்கேற்றியிருந்தார். அன்று இந்நாட்டைக் கூத்தைப் பலர் கண்டு களித்தனர். கூத்தில் பார்வையாளர்களும் இரண்டறக் கலந்து கொண்ட அற்புதம் அன்று நிகழ்ந்தது. கூத்துக்கலைஞர்கள் சொல்லிக் கொண்டிருந்த சில வார்த்தைகளை பார்வையாளர்களும் மீளொலித்து கூத்தர்களுக்கு சிறு வெகுமதி வழங்கி மகிழ்ச்சியை வெளிப்படுத்தி கூத்து அரங்கின் பங்காளர் ஆகினர்.*

*கலைஞர் ஆனந்தன் நவீன கலைகளை, நுட்பங்களை அறிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டி வருபவர். சினிமா, நெறியாள்கை குறித்த பயிற்சி நெறியொன்றில் இணைந்து தமிழகத்தில் பயிற்சி பெற்றார். சிறுகதைகளைப் படைப்பதில் இன்று அதிக ஈடுபாட்டைக் காட்டி வருகிறார். இவரின் சிறுகதைகளுக்கு அண்மைக் காலங்களில் பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் கிடைத்து வருகின்றன.*

கூத்தரங்கக் கலையின் ஆற்றுகைக் கலைஞர் ஒருவரின் சமூகப்பார்வையை அவரின் எழுத்தாய் அமைந்த படைப்புகளில் பார்க்க முனைவது சற்று வித்தியாசமானது. ஏனெனில் பிற படைப்பாளிகள் சமூக ஊடாட்டங்களினூடு தாம் கண்டு, கேட்டு அறிந்தவற்றையும் தமது அனுபவங்களையும் படைப்புகளாகத் தருகின்ற வேளையில் ஆற்றுகைக் கலைஞன் ஒருவன் குறித்த பாத்திரங்களாகவே அரங்கத்தில் வாழ்ந்து அக் கதாமாந்தரின் குணாதிசயங்களையும் சிறப்புகளையும் தன் நடிப்பின் மூலமும் அங்க அசைவுகள் மூலமும் பார்வையாளரின் நெஞ்சங்களில் தொற்ற வைப்பவன். இதனால் கூத்துக்கலைஞருக்கும் பார்வையாளருக்கும் இடையே “ஒத்துணர்வு” (empathy) ஏற்படுகின்றது. இந்த ஒத்துணர்வை ஆற்றுகைக் கலைஞரின் எழுத்துப் படைப்பும் வாசகர்களிடத்து ஏற்படுத்துமா என்று பரிசீலிக்க வேண்டும் என்ற ஆவலும் இத்தொகுப்பைக் கையிலெடுக்கும்போது என்னுள் ஏற்பட்டது.

“இருளைக் காட்டும் ஒளிகள்” என்ற இச்சிறுகதைத் தொகுப்பின் தலைப்பே சற்று வித்தியாசமாகப்பட்டது. வழமையாக “இருளை அகற்றும் ஒளிகள் இருள் சூழ்ந்த ஒளிகள்” என்பன போன்ற தலைப்பாக அமையாமல் இருளைக்காட்டும் ஒளிகள் என அமைந் திருப்பது நூலாசிரியரின் பார்வைத்தளத்தைப் பரிசீலிக்க வைக் கின்றது. அதற்கான விளக்கத்தைத் தருவதாக முதலாம் பக்கத்திலேயே நூலாசிரியர் தந்த சிறுகுறிப்பும் காணப்படுகின்றது.

இவை

என் கற்பனையின் குழந்தைகளல்ல;

என்னை இடறவைத்த இந்த சமுதாயத்தின்

இருண்ட பாதைகள்.

இவ்வாறு எழுதிச் செல்வதனூடாக தனது நூலிலுள்ள சிறுகதைகளின் சாரத்தை இத்தொகுப்பின் தலைப்பின் மூலமே தெரிவித்தும் விடுகிறார். ஏனெனில், இருளைக்காட்டும் ஒளிகள் என்ற பெயரில் எந்த ஒரு சிறுகதையும் இத்தொகுப்பில் இடம்பெறவில்லை. எனவே, இத்தொகுப்பிலுள்ள அனைத்துச் சிறுகதைகளுமே இருண்மையைக் காட்டும் ஒளிக்கீற்றுக்கள் தான் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

சிறுகதை என்பது ஒரு “செட்டான” இறுக்கமான புனைவு வடிவம் என்று சொல்வர் “சிறுகதை என்பது வெறுமனே கதை சொல்லல் அன்று” என்ற புரிதல் ஏற்பட்டு பல காலம் ஆயிற்று.

ஆயினும், இன்றும் சிறுகதைகள் என்று வெளிவருபவற்றுள் பல, கதைகளே. இதற்கு கதைகள் எழுதுபவர்களைக் குறைகூறிப் பயனில்லை. இவ்வாறு கதைகள் எழுதுபவர்களின் வாசிப்பின் விரிவு பற்றியே சந்தேகம் எழுகிறது.

சிறுகதை என்பதை கதை என்பதிலிருந்து வேறுபடுத்துவது அதன் சித்திரிப்பே. சித்திரிப்புக்குள் உரிப்பொருள், கதைப்பின்னல், உருவம், மொழி, நடை என்பன போன்றவற்றை சித்திரிப்பு முறைமையே வெளிக்கொண்டு வருகிறது. சித்திரிப்பு முறைமை யாலேயே நாம் வாசிக்கும் நல்ல சிறுகதைகள் வாசகர்களாகிய எங்களில் பதிவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. புதுமைப்பித்தன், கு.ப.ரா, ஆதவன், ஜெயமோகன்... என்று படைப்பாளிகள் பலரும் கண்முன்னே வருகின்றனர்.

சித்திரிப்பு என்று வருகின்ற போது, வ.வே.சு ஐயரின் "குளத்தங்கரை அரசமரம்" ஞாபகத்திற்கு வருகின்றது. தமிழின் முதலாவது சிறுகதை அது. அக்கதையை சித்திரித்த முறையிலேயே அது முதலாவது தமிழ்ச் சிறுகதையாகியது. சிறுகதை ஒன்றிற்கு அதன் "ஒருமைத்தாக்க விளைவும்" (Unity effect) முடிப்பிலுள்ள திருப்பமும் (twist) அவசியமானவை எனக் குறிப்பிடுவர். எடுத்துக்கொண்ட மையக்கருவைப்பற்றி சுற்றிச் சுழன்று கொண்டு செல்லும் சித்திரிப்பு முறைமையே சிறுகதையில் ஒருமைத்தாக்க விளைவை ஏற்படுத்தும். சிறுகதையின் முடிப்பிலுள்ள திருப்பம் ஒரு சமூக யதார்த்த உண்மை வெளிச்சத்தை ஒரு கிரனைட் வெடித்துத் தோற்றுவிப்பது போல வெளிக்காட்ட வேண்டும் என பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவார்.

சிறுகதையின் குணப்பண்புகளாகக் குறிப்பிடப்படும் ஒருமைத் தாக்க விளைவு, முடிப்பிலுள்ள "திருப்பம்" ஆகியவற்றை மாத்திரம் வைத்துக்கொண்டே நல்ல சிறுகதையைப் படைத்து விடமுடியாது. இதனாலேதான் சித்திரிப்பின் முக்கியத்துவம் விளங்கு கிறது. இந்நோக்கிலேயே சிறுகதை உலகில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்திய படைப்பாளிகளை, அவர்தம் படைப்புகளை இந் நாளைய படைப்பாளிகள் வாசிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வது அவசியமாகிறது. புதுமைப்பித்தனின் சிறுகதைகளிலுள்ள முடிப்பிலுள்ள திருப்பமும் கு.ப.ராஜகோபாலனின் சிறுகதைகளின் முடிப்பிலுள்ள மௌனமொழியும் ஒரே மாதிரியானவை அல்ல. பல்வகையான படைப்புக்களிலிருந்துதான் தேர்ந்த வாசிப்பு ஒரு படைப்பாளியை, தனது சித்திரிப்பு முறையை, மொழியை, நடையை

வடிவமைக்க உதவும். இவ்வாறு கூறுவது யாரோ ஒரு படைப்பாளியின் பாணியிலேயே இன்னொரு படைப்பாளியின் பாணியும் அமைய வேண்டும் என்று குறிப்பிடுவதாகாது.

சிறுகதை பற்றிய சுருக்கமான இந்தக்குறிப்புரை கலைஞர் ஆனந்தன் அவர்களின் இச்சிறுகதை நூலுக்கான அணிந்துரைக்கு அவசியமானது. ஒரு கூத்துக்கலைஞருக்கு - இன்றைய மரபுக்கலை களின் மீட்பு முயற்சிகளில் அடையாளம் காணப்பட்டு ஓர் அந்தஸ்து நிலையைப் பெற்றுள்ளவேளையிலும் தமது பரம்பரைத் தொழிலைக் கைவிடாது இன்றும் உழைப்பாளியாக விளங்குபவருக்கு சிறுகதை பற்றிய புரிதலும் எடுத்துரைப்பு முறையும் கைவந்திருக்கின்ற அற்புதத்தை இந்த அணிந்துரையில் எழுதிச் செல்லவேண்டும். என மனம் விழைகிறது.

கலைஞர் ஆனந்தன் எதிலும் நலம் காணும் ஒருவராகவே (Optimist) தன்னை இச்சிறுகதை நூலில் இனங்காட்டிக் கொள்கிறார். பிள்ளைப்பேறு இல்லாத காரணத்தால் சுபநிகழ்வுகளில் இரத்த உறவு களாலும் கூட ஒதுக்கப்படும் குஞ்சரம் (நல்லதோர் வீணைசெய்தே) போர்மேகங்களின் ஆக்கிரமிப்பில் தொலைந்துபோன தன் கிராமத்தின் வாசனையைத் தேடும் ஆனந்தன் (நான் நடந்த பாதை எல்லாம்) தந்தையின் இழப்பில் தத்தளிக்கும் ஆசிரியையான எழில் (அப்புச்சி இருக்கிறார்) வசதியான வாழ்க்கை கிடைத்தவுடன் தந்தையான தன்னைத் தன்மகள் புறக்கணித்து விட்டாளோ என ஏங்கும் சபா (நிலவு சுடுவதில்லை) போன்ற கதாமாந்தர்கள் மன வேதனையில் துவண்டு அந்த இருளில் தடம் புரண்டு விடாமல் அக் கதாமாந்தர்களுக்கு மெல்லிய ஒளிக்கீற்றுக்களாகக் காட்டும் முடிப்பை தன் சிறுகதைகளில் ஏற்படுத்தி அந்த முடிப்பிலுள்ள திருப்பங்களில் எதிலும் நலம் காண விழைகிறார். இவ்வேளையில் ஒரு சிறுகதையின் முடிப்பிலுள்ள திருப்பம் கிரனைட் வெளிச்சமாக இல்லாமல் மெல்லிய ஒளிக்கீற்றாகவும் அமையலாம் என்ற எண்ணம் எழுகிறது. கு.ப.ராஜகோபாலனினதும் வண்ணதாசனினதும் சிறுகதைகளிலும் மௌனங்களும் "ஒளிவிடும் ஓடைகளும்" தானே மெல்லிய ஒளிக்கீற்றுகளாகத் தடம் பதித்தன என்ற நினைப்பு மெல்லிய ஒளிக்கீற்றும் கூட ஒரு சிறுகதையின் முடிப்பாக அமையலாம் என்பது மீள்சிந்தனையாக எழுகிறது.

கலைஞர் ஆனந்தன் தன் கதாமாந்தருக்கு மெல்லிய ஒளிக் கீற்றுக்களைக் காட்டி இருளில் தடம் புரளாமல் வழிகாட்டியதன் மூலம் தன்னை இனம் காட்டுகிறார். குறிப்பாக தன் கணவனின்

அன்பிற்காக ஏம்பலித்துக் கொண்டிருக்கும் அமுதாவிற்கு (மூன்றாவது முத்தம்) உளவளத்துணை வழங்கும் பாத்திரங்களாக சேந்தன், ரதி ஆகியோரை உருவாக்கி உளவளத்துணை வழங்கும் படிநிலைகளை கதையோட்டத்துடன் இணைத்துக்கொண்டமை இதனை உறுதிசெய்கிறது. ஆனால் மூன்றாவது முத்தம் என்ற இச்சிறுகதை கலைஞர் ஆனந்தன் வாழும் பிரதேசத்திலுள்ள சிறு கதைப் படைப்பாளிகளின் தொகுப்பை வெளியிடமுனைந்தபோது அத்தொகுப்பில் தவிர்த்துக்கொள்ளப்பட்டது என்ற செய்தி சிறு கதைத் தேர்வாளர்களின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இன்று பெண்ணுடலை எழுதும் எழுத்துகளை அதி உன்னதமானவை எனப் பாராட்டும் சூழலில் "முத்தம்" என்ற சொல்லுக்காக இச்சிறுகதை தவிர்த்துக் கொள்ளப்பட்டது என்ற காரணம் நொண்டிச் சாட்டா கவே தெரிகிறது. மேலும் "இவர் என்ன உளவளத்துணையாளரோ உளவளத்துணை பற்றி எழுதுவதற்கு" என்று எழுப்பப்பட்ட தேர்வாளர்களின் கேள்வியும் கூட இதனை உறுதி செய்கிறது.

எந்த ஒரு படைப்புக்கும் அடிப்படை மூலவேர் அறிகை (cognition) தான் இந்த அறிகை தான் தோய்ந்த அனுபவத்தால் தான் கிடைக்கவேண்டும் என்பதில்லை. வேறு வழிகளிலும் ஏற்படலாம். ஆனால், அந்த அறிகையின் அடிப்படையில் படைப்பு எவ்வாறு உருவாகிறது என்பதுதான் முக்கியமானது.

கலைஞர் ஆனந்தனின் சித்திரிப்பு முறையும் குறிப்பிட்டுச் சொல்லப்படக் கூடியது. "நான் நடந்த பாதை எல்லாம்" என்ற சிறுகதையில் தொலைந்துபோன தான் பிறந்த மண்ணின் அழிவு களைச் சித்திரிப்பதன் ஊடாக அம்மண்ணின் அனைத்து மக்களின் சோகங்களையும் திரட்டிக்கொண்டுவந்து கொட்டிவிட்டுச் செல்கின்றார்.

"கனியாத கனவு" என்ற சிறுகதையில் வறுமையில் உழலும் சரசு தமிழ்த்தினப்போட்டியில் தனது மகள் பெற்ற வெற்றிக்கு கிடைக்க விருக்கும் பரிசைப் பெறுவதற்காக அழைத்துச் சென்ற போது முதலமைச்சரின் கையினால் மகளுக்கு பரிசு கிடைக்கும் என்று இது நாள் வரை கண்ட கனவு கனியாது போவது உளவியல் பின்னணியில் சித்திரிக்கப்படுகிறது. பிள்ளையை அறிதல் என்பது ஆசிரியர்களுக்கும் கல்வி உலகினர்க்கும் அவசியமானது. பாட சாலைக் கல்வியின் மையம் பிள்ளையே. பிள்ளைகளுக்கு ஏற்படக் கூடிய மனத்தாக்கங்களை அறிந்தும் அறியாதவராய் விழா ஏற்பாடுகளிலும் கௌரவிப்புகளிலும் அதீத ஆர்வம் கொண்டு

விழாவின் நோக்கம் முற்றாக நிறைவேறாமல் போவதை இச்சிறுகதை மூலம் கலைஞர் ஆனந்தன் தோலுரித்துக் காட்டுகிறார்.

இவ்வாறாக ஒவ்வொரு சிறுகதை பற்றியும் குறிப்பிட்டுக் கூறமுடியும். ஆனால் அணிந்துரையின் விரிவஞ்சி அது தவிர்த்துக் கொள்ளப்படுகிறது.

கலைஞர் ஆனந்தனின் மொழி கிராமத்து மொழியாகவே உள்ளது. வழக்கொழிந்து போன மரபுச்சொற்களும் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுள்ளன. திருவாசகவரிகள், கூத்தின் தாளக்கட்டு, முதலான இன்னோரன்ன அறிகையின் திரட்சியை (Schema) பொருத்த மாக தனது சித்திரிப்பில் பயன்படுத்திக் கொள்வதையும் காண முடிகிறது.

“கிழக்கு மெல்ல வெளுக்கும்” என்ற சிறுகதையைப் படித்த போது ஏனோ டானியலின் மதிப்புக்குரிய அடிமை என்ற சிறுகதையே ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் டானியலைப் போலன்றி கலைஞர் ஆனந்தன் மிகவும் நாசூக்காக இன்றும் சாதி அமைப்பின் தடங்கள் அழிந்து போய் விடவில்லை என்பதனை இடித்துரைத்திருக்கின்றார்.

கலைஞர் ஆனந்தன் அவர்களின் ஆற்றுகைக் கலை மீதான பற்றும் புனைவுகளில் ஆர்வமும் மேலும் வளர்க்கப்படக் கூடியன என்பதற்கான ஆதாரங்கள் ஆழமாகவே இருப்பதை இத் தொகுப்பி லுள்ள சிறுகதைகள் உறுதி செய்கின்றன. இறுக்கங்களிலிருந்து விடுபடாத இன்றைய சமுதாய யதார்த்தத்தை வெளிப்படுத்தக்கூடிய ஆற்றலுள்ள ஒருவராகவே கலைஞர் ஆனந்தன் என்னும் சிறுகதைப் படைப்பாளியை நான் பார்க்கின்றேன். முதலாவது சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளின் சிறப்பைத் தெரிவிக்கின்ற வேளையில் இவர் மேலும் மேலும் சிறந்த படைப்புக்களைத் தரவேண்டி இறை ஆசியை வேண்டுகின்றேன்.

# சித்திரா சின்னராஜனின்

# "வல்லைவெளி"

*"வல்லைவெளி" எனும் இக் கவிதைத் தொகுப்பு நூலுக்கு முன்னீடாகச் சிலவரிகள் எழுதித்தருமாறு கவிஞர் க.சின்னராஜன் கேட்டுக்கொண்டுள்ளார். நீண்டகால நண்பர்; அவர் இலக்கியமே எங்கள் நட்புக்குப் பாலமாய் அமைந்தது. அச்சில் பதிப்பதற்கு முன்னர் கையெழுத்துருவிலுள்ள இலக்கியப் படைப்புகள் குறித்த கருத்துகளை எங்களுக்குள் பரிமாறிக்கொள்ளும் வழக்கம் உண்டு. அவ்வகையில் இத்தொகுப்பிலுள்ள பல கவிதைகளை கையெழுத்துரு விலேயே நான் படித்துள்ளேன்.*

*கவிஞர் சின்னராஜன் படைப்புலகுக்குள் புகுந்து நான்கு தசாப்தங்கள் கழிந்த நிலையில், இப்போதுதான் தமது முதலாவது கவிதைத்தொகுப்பு நூலை வெளியிடுகின்றார். இன்றைய இலக்கியச் சூழலில் சின்னராஜனின் நிதானம் சற்று வித்தியாசமானது. அவசர அவசரமாக குறுகிய காலப்பகுதியுள் எழுதியவற்றை எல்லாம் கவிதை நூல்களாகவும் சிறுகதைத் தொகுப்புகளாகவும் கட்டுரை நூல்களாக வும் வெளியீடு செய்து, வெளியீட்டு விழாக்களையும் அறிமுக விழாக் களையும் பிரம்மாண்டமாக ஒழுங்கு செய்து எழுத்தாளர்கள் வெற்றிக் களிப்புக் கொள்ளும் காலம் இது. ஆனால், 44 கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பு நூலை நண்பர் சின்னராஜன் எந்தவிதமான ஆரவாரமுமின்றி எளிமையாக நூலாக்கம் செய்துள்ளார். நண்பர் சின்னராஜனின் கவிதைகளை நூலுருவில் பார்க்கவேண்டும் என்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் நண்பர்கள் நாம் எமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தும், இப்போது தான் அவரின் நூல் வெளிவருகின்றது.*

*கவிஞர் சின்னராஜன் மக்கள் வங்கித்துறையில் தன்னை இணைத்துக் கொண்டு கலைப்பட்டதாரியாகி, மக்கள் வங்கி*

முகாமையாளராகவும் தன்னை உயர்த்திக் கொண்டவர். 1970 களில் புதுவை சின்னராஜன் என்ற பெயரோடு அவர் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். எனினும், சிறுகதை நாடகம் ஆகிய துறைகளில் தன்னை ஈடுபடுத்தி, இத்துறைகளில் பலபோட்டிகளில் பரிசுகளையும் பெற்றுக் கொண்டார். 1985 களில், சோலைக்கிளியின் கவிதை வரிகளைப் படித்துவிட்டு "கடுங்கோபத்துடன் ஒரு கட்டுரை" என கவிஞர் முருகையன் மல்லிகைக்குக் கட்டுரை ஒன்றை எழுதியபோது, அதற்கு எதிர்வினையாக "கடும் நிதானத்துடன் ஒரு கடிதம்" எழுதியவர் சின்னராஜன். இதனால், அந்நாளில் இலக்கிய உலகின் கவனத்திற்கு உள்ளானார். இவரின் "தண்ணீர்" என்ற சிறுகதையை கையெழுத்துப் படியில் படித்துவிட்டு, "முரசொலி" ஆசிரியர் திருச் செல்வம், அச்சிறுகதை மூத்த எழுத்தாளர் ஒருவரால் செப்பனிடப் பட்டுள்ளதா என என்னிடம் வினாவியதும் கூட எனக்கு இப்போதும் ஞாபகத்திலுள்ளது.

சின்னராஜன் தனக்கென சில கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அக்கொள்கைகளுக்கு அமைவாகவே வாழ்ந்தும் எழுதியும் வருபவர். இக்கவிதைத் தொகுப்பிலுள்ள பல கவிதைகளில் அவரின் ஆத்மாவை நாம் தரிசிக்கலாம். இவரின் முருகியல் உணர்வு, கவிதை களைச் சித்திரமாகத் தீட்டுவதற்குக் கைகொடுத்து உதவியிருக் கின்றது.

"வல்லை வெளியில்
வானம் குடை பிடிக்கும்
வட்டமாய்ச் சுற்றிநிற்கும்
வான்பயிரும் பனைமரமும்
நீலப்பட்டுடுத்தி
நிரை நிரையாய்ச் காட்சி தரும்"

என ஆரம்பிக்கும் இத்தொகுப்பிலுள்ள முதன்மைக் கவிதையான "வல்லைவெளி"யின் வரிகளே கவிஞர் சின்னராஜனின் வெளியீட்டுத் திறனுக்குக் கட்டியம் கூறுவன. "வல்லைவெளி" என்ற தலைப்பில மைந்த இக்கவிதை, "ஜீவநதி"யின் ஆகஸ்ட் 2007 இதழில் வெளிவந்த போது, பலரதும் பாராட்டைப் பெற்றுக்கொண்டது. கவிஞர் சின்னராஜன் அவதானிப்புக்குரியவரானார். தொடர்ந்து, "ஜீவநதி", "ஞானம்", "மல்லிகை" போன்ற சஞ்சிகைகளில் அவரின் கவிதைகள் பிரசுரமாயின. "சித்திரா சின்னராஜன்" என்ற புனைபெயரையும் அவர் வரித்துக் கொண்டார்.

இயற்கை நயப்பு, கடந்த கால நினைவுகள், அரசியல், அனர்த்தங்கள் தரும் சோகம், சமகால நிகழ்வுகள், இலட்சியம் என பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டு கவிஞர் சின்னராஜனின் கவிதைகள் வடிக்கப்பட்டுள்ளன. இப்பாடுபொருள்களில் அவரின் கவித்துவம் வெளிப்படுமாற்றைப் பல கவிதை வரிகளில் காணலாம்.

"நெய்தலொடு மருதம் இங்கே
நேசமாய் உறவாடும்
கார்காலம் பிறந்துவிட்டால்
கைகுலுக்கிச் சுகம் கேட்டும்"

என்ற "வல்லைவெளி"யின் வரிகள் வல்லைவெளியின் புவியியற் பின்னணியை அழகாக விபரிக்கின்றன "கைகுலுக்கிச் சுகம் கேட்டும்" என்ற வரி கவிதை உலகுக்குப் புதியது.

எமது நாட்டில் இடம்பெற்ற போர்க்கால சூழல் காரணமாக நாம் இழந்துவிட்ட பலவற்றை "தொலைந்துபோன காலங்கள்", "பனந்தோப்புக்கனவுகள்", "என் கிராமத்தின் மண்வாசனை" ஆகிய கவிதைகள் எடுத்தியம்புகின்றன.

"ஒற்றைப் பனைமரத்தில்
கறந்தெடுத்த பனம்பாலை
ஊதிக் குடித்துவிட்டால்...
சொர்க்கத்தின் வாசல்
அவர் காலடியில்
தவம் கிடக்கும்
காத்தான் கூத்துப் பாடல்
அவர் காணிக்குள் அரங்கேறும்"

என்ற வரிகளில் பனந்தோப்பில் இடம்பெறும் சிந்து நடைக்கூத்தினை காட்சியாய் விரியச்செய்து,

"காலங்கள் மாறிப்போச்சு
கனவுகளும் கானலாச்சு
பனந்தோப்பு வெட்டியாச்சு
பனைமரங்கள் 'சென்றி' யாச்சு
பனங்காணி வெட்டையாச்சு"

என்ற நிறைவு வரிகளினூடாக வாசகர்களிடம் சோகத்தையும்

விதைத்துவிடுகின்றார். ஆழிப்பேரலை, யுத்தம் ஆகியன விளைவித்த அனர்த்தங்களினால் எம்மவர்பட்ட துன்பங்களும் துயரங்களும் பல கவிதைகளில் கவித்துவமாக எடுத்துரைக்கப்பட்டு, சோகத்தை வரவழைக்கின்றன.

“ஆழியிலே மீன்பிடிக்க அனுமதிகள் ஏதுமில்லை

கரையோரம் வலைவீச விடவுமில்லை”

என்ற வரிகளூடாக மீனவர் துயரம் எளிமையாகவும் நேர்த்தியாகவும் எடுத்தியம்பப்படுகின்றன.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் பல அரசியலை நாசூக்காக எடுத்துச் சொல்பவை ஆகும். “மயானம் காக்கும் அரிச்சந்திரன்”, “புதிய அசோகவனங்கள்”, “எங்கள் தேசம் மயான பூமியா?” போன்ற பல கவிதைகளில் அரசியல் குறியீடாய் உள்ளது. சூழலின் யதார்த்தத்தை அவை விளக்குவனவாகவும் உள்ளன.

இத்தனை சோகங்களுக்கிடையிலும் சாதிப்பிணக்குகள் தீர்ந்தபாடாயில்லை என்ற கவிஞரின் ஆதங்கம் “புதை குழி மயானம்”, “சாதியமும் தமிழர் தேசியமும்”, “கட்டவிழுமா சமூக இறுக்கங்கள்” ஆகிய கவிதைகளில் வெளிப்படுகின்றது.

“புதை குழி மயானம்” கவிதையில் இடம்பெறும்,

“வாயால் சண்டை மூண்டதுவே

வாலிபர் கூட்டம் துடித்ததுவே

ஓயா அலைகள் பாய்வது போல்

ஒவ்வோர் ஆட்களும் எழுந்தனரே

காயப்பட்டோர் பலபேர்கள்

கல்லடிபட்டோர் சிலபேர்கள்

மாயச் சாதி உணர்வுகளால்

மல்லுப்போட்டுக் கொண்டனரே”

ஆகிய வரிகள், மஹாகவியின் “தேரும் திங்களும்” கவிதையை நினைவூட்டுகின்றன.

கவிதை என்ற இலக்கிய வடிவத்தில், உவமை, குறியீடு, தொன்மம், படிமம், அங்கதம், காட்சிப்படுத்தல், உத்தி, உருவகம் என பல்வேறு அம்சங்கள் குறித்துப் பேசப்படுகின்றன. சின்னராஜனின் கவிதைத்தொகுப்பு நூல் புதுக்கவிதைகளை மாத்திரமன்றி மரபுக் கவிதைகளையும் உள்ளடக்கியது. “மரபை அறிந்து செரித்தவ

னாலேயே புதுமை படைக்க முடியும்” என்பார்கள். சின்னராஜனின் கவிதைகளில் கவிதைக்குரிய இலட்சணங்கள் பல அமைந்திருப்ப தோடு, புதுமையான காட்சிப்படிமங்களும் புனையப்பட்டுள்ளன.

“மாலை வேளையில்
மேற்கு வானத்து அம்மியில்
மஞ்சள் அரைக்கும் அந்தியும்
மிளகாய் அரைத்து
மேனியில் பூசிக்கொள்கிறது”

என்ற வரிகளில், மாலைக்காட்சியின் கோலங்கள் எழுச்சி கொள்கின்றன.

கவிஞர் சின்னராஜன் கடந்த தசாப்தத்தில் எழுதிய அநேக மான கவிதைகளே இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. இக்கவிதைகள் ஒரு கால கட்டத்தின் வரலாற்றுப் பதிவாகவும் விளங்குகின்றன. “வல்லைவெளி” கவிதை நூலுக்கான அட்டை, இரு பக்கங்களிலும் வல்லைவெளியின் இரு தோற்றங்களின் படங்களைக் கொண்டு உள்ளது. இரு படங்களுமே வல்லைவெளியின் வரலாற்றுச் சிறப்பையும் விரிவையும் உணர்த்துவனவாய் உள்ளன. “வல்லை வெளி” எங்கள் வாழ்வியலின் குறியீடாகவும் என்றும் என்பதையும் இப்படங்கள் சுட்டுகின்றன. கவிஞர் சின்னராஜனிடமிருந்து இன்னும் பல நல்ல கவிதைகளையும், கவிதைத் தொகுப்பு நூல்களையும் இலக்கிய உலகு பெற்றுக் கொள்ள இருக்கின்றது என்ற நம்பிக்கையை யும் இக்கவிதைத் தொகுப்பு நூல் தருகிறது. நண்பர் சின்னராஜனுக்கு என் இனிய வாழ்த்துக்கள்

## அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலினின்

# "ஆளுமைக் கொள்கைகள்"

"இன்று உளவியல் எனும் துறையின் நிழல்படாத துறை இல்லை" என்று கூறும் அளவிற்கு உளவியலானது பல்வேறு துறைகளிலும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. உளவியல் எனும் அறிவுத் துறையானது மனித நடத்தைகளைப் பற்றியதும் உளச் செயன் முறைகள் பற்றியதுமான ஒரு கற்கைப்புலமாகும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் அவதானிக்கப்படும் மனித நடத்தை ஏன் அவ்வாறிருக்கின்றது என்ற வினாவுக்கு உளவியலானது விளக்கம் அளிக்க முனைகின்றது. உள்ளத்து உணர்வுகள், எண்ணங்கள், உணர்ச்சிகள், கற்பனைகள் யாவும் மனித நடத்தையில் செல்வாக்குச் செலுத்துவன; மனித நடத்தையைத் தோற்றுவிப்பன.

இன்றுள்ள உளவியலின் பாடப்பரப்பு மிகவும் பரந்தது. தனி மூளைக் கலத்தின் நடத்தை தொடக்கம் மக்கள் குழுக்களின் நடத்தை வரை இப்பாடப்பரப்பின் வீச்சு பரந்துள்ளது. உளவியல் என்பதனுள் அடங்குகின்ற விடயங்களும் குறித்த பாடப்பரப்பிற்குக் கொடுக்கப் படும் அழுத்தங்களும் வெவ்வேறான இப்பரப்புகள் குறித்து அறிந்து கொள்வதற்கு உளவியலாளர்கள் பயன்படுத்துகின்ற பல்வேறு முறைகளும் உளவியல் குறித்து உளவியலாளர்கள் கொண்ட அக்கறையினாலும் மாற்றுச் சிந்தனையிலும் உருவானவை.

உளவியலானது பொதுவாக பொது உளவியல், பிரயோக உளவியல் என்ற இரு பிரிவுகளாக வகுத்து நோக்கப்படுகின்றது. பொது உளவியல் என்பது மனித/விலங்கு நடத்தைகள் பற்றிய விவரணங்களாக அமைந்துவிட, பிரயோக உளவியல் என்பது. பல்வேறு ஆய்வுகளுக்கூடாகப் பெறப்படுகின்ற உளவியல் கருத்துகளும் கோட்பாடுகளும் மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக பிரயோகிக்கப்படுகின்றமையை குறித்து நிற்கின்றது. பலவழிகளிலும்

திரட்டப்படுகின்ற உளவியல் அறிவை ஒரு குறித்த துறை சார்பாகப் பிரயோகிக்கும்போது, அந்தப் பிரிவு அத்துறைசார் உளவியலாகக் கொள்ளப்படும்.

இவ்வகையில், விருத்தி உளவியல் அல்லது வளர்ச்சிப்பருவ உளவியல், ஆளுமை உளவியல் என்பன இன்று அனைவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய துறைகளாகும். விருத்தி உளவியல் அல்லது வளர்ச்சிப் பருவ உளவியல் என்பது ஒருவரின் வாழ்க்கை வட்டம் முழுவதும் நிகழ்கின்ற உடலியல் விருத்தி, அறிகைவிருத்தி, சமூக விருத்தி, ஆளுமை விருத்தி போன்றவற்றை ஆராயும் துறை யாகும். "எப்பருவத்தில் அல்லது எவ்வயதில் பிள்ளைகள் நடக்கத் தொடங்குகிறார்கள் அல்லது கதைக்கத் தொடங்குகிறார்கள்?" "மத்திய வளர்ந்தோர் பருவத்தில் அல்லது பிந்திய வளர்ந்தோர் பருவத்தில் எவ்வகையான இன்னல்களை மக்கள் எதிர் கொள் கிறார்கள்?" என்பன போன்ற வினாக்களுக்கு விருத்தி உளவியல் விடை காண முனைகின்றது.

இதேவேளை ஆளுமை உளவியல் என்பதும் மனிதர்கள் ஒவ்வொருவரையும் தனித்துவம் மிக்கவர்களாக ஆக்கும் உளவியற் பண்புகள் குறித்து ஆராய்கின்றது. "ஆளுமையின் கட்டமைப்பு எவ்வாறுள்ளது?", "ஆளுமை எவ்வாறு அளவிடப்படலாம்?" என்பன போன்ற வினாக்களுக்கு ஆளுமை உளவியலினூடாக விடை தேடப் படும். அத்தோடு, உளவியலில் இன்று ஆழமாகச் சிந்திக்கப்படும் துறை ஆளுமை உளவியலாகும். "மனித ஆளுமையை எவ்வாறு குறைவின்றி வளர்த்தெடுக்கலாம்?", "ஆளுமைச் சிதைவுக்குரிய காரணிகள் யாவை? என்பன போன்ற வினாக்கள் ஆளுமை உளவியலில் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

மேலும், கல்விக்கும் ஆளுமைக்கும் உள்ள தொடர்பு, சமூகமயமாக்கலுக்கும் ஆளுமைக்கும் உள்ள தொடர்பு, மனித ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் உள்ள தொடர்பு என ஆளுமையானது பல்வேறு அம்சங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப்படு கின்றது. ஆளுமை என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் குறிப்பிடப்படுகின்றன. பொதுவாக, ஆளுமை என்பது ஒருவரது அனைத்து இயல்புகளினதும் நடத்தைகளினதும் மொத்தவிளைவைக் குறிப்பதாகும். ஒருவரது உளச்சார்பு, அறிவு, மனப்பாங்கு, கவர்ச்சி, சூழலுடனான இடைவினை போன்றவற்றையும் இப்பண்புக்கூறுகள் அவரது சிந்தனை, உணர்ச்சி, செயல் என்பவற்றில் ஏற்படுத்தும் விளைவையும் "ஆளுமை" குறித்து நிற்கும். எனவே, ஒருவரது

வாழ்க்கைக்கோலத்தை இனங்காணத்தக்கவகையில் அமைகின்ற சிக்கலான நிலைமைகளின் உறுதியான கட்டமைப்பே ஆளுமை எனலாம். அதாவது, ஒரு தனியாளின் சிந்தனை, உணர்வு, நடத்தை என்பவற்றின் தனிச்சிறப்பு வாய்ந்ததும் ஒப்பீட்டளவில் மாறாதது மான ஒரு கோலமே ஆளுமை ஆகும்.

ஆளுமை பற்றிய வரைவிலக்கணங்கள் பல இருப்பினும், அவை யாவும் ஆளுமை தொடர்பான பின்வரும் அம்சங்களையே முதன்மைப்படுத்துகின்றன:

- ஆளுமை என்பது தனிச்சிறப்பு வாய்ந்த அம்சம்
- இருவரது ஆளுமை ஒத்ததாக இருப்பதில்லை
- ஆளுமை தொடர்ந்தும் விரத்தியடையும்
- சூழலுடனான இடைவினையானது ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும்

இவ்வாறாக உளவியலின் முக்கியத்துவம் பெறும் பிரிவு களான வளர்ச்சிப்பருவ உளவியல், ஆளுமை உளவியல் எனும் இரண்டையும் உள்ளடக்கியதான கட்டுரைகளைத் தாங்கி, அருட் தந்தை இராசேந்திரம் ஸ்ராலின் அவர்களின் இந்நூல் ஆளுமைக் கொள்கைகள்" என்ற பெயரில் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. உளவியலை ஒரு பாடமாகவும் சிறப்புப்பாடமாகவும் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை அல்லது முதுகல்விமாணியை மேற்கோள்ளும் மாணவர்களுக்கும் பயனுள்ள பல தகவல்களைத் தரக்கூடிய கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள டீலாசால் பல்கலைக்கழகத்தில் “வழிகாட்டலும் உள ஆற்றுப்படுத்தலும்” எனும் துறையில் முது விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உளவியல் பாடத்துக்கான வருகை விரிவுரையாளாராக விளங்கியவர். புனித சவேரியார் உயர்நிலைக் குருத்துவக் கல்லூரியிலும் உள ஆற்றுப் படுத்தல் நிலையங்களிலும் விசேட பயிற்சி அமர்வுகளிலும் உளவியல் விரிவுரையாளராகவும் உள ஆற்றுப்படுத்தல் விரிவுரையாளராகவும் விளங்கிவரும் அருட்தந்தை ஸ்ரலின் அவர்கள் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். “ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்” என்ற அவரது நூல் 3000 பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. “ஆளுமைக் கோட்பாடுகள்” என்ற இந்நூலும்

மாணவர்களிடமும் ஆசிரிய மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெறும் எவ்வித ஐயமுமில்லை.

அருட்தந்தை ஸ்ரலின் அவர்கள் என்னிடம் கொண்ட அன்பின் காரணத்தினால், இந்நூலுக்கான அணிந்துரையை எழுதுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். உளவியலைப் போதிக்கும் எனக்கு அருட்தந்தை அவர்களின் இந்நூலும் ஓர் ஆதார நூலாக அமையும் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூலி லுள்ள விடயங்கள் குறித்து, தமிழில் போதிய நூல்கள் இல்லாமை யால் இந்நூலின் வரவு எங்களிற் பலருக்கும் ஒரு வரப்பிரசாதமே.

அருட்தந்தை அவர்களின் பணி, தொடர்ந்தும் எமது சமுதாயத்துக்குக் கிடைக்க வேண்டுமென இறைஆசிவேண்டுகிறேன்.

## ஷெல்லிதாசனின்

# “நகர வீதிகளில் நதிப்பிரவாகம்”

*கவிஞர் ஷெல்லிதாசனின் இரண்டாவது கவிதைநூல் “நகர வீதிகளில் நதிப்பிரவாகம்”. அவரது முதலாவது கவிதைத்தொகுதி யான “செம்மாதுளம் பூ” 2010 இல் வெளி வந்து மூன்றாண்டுகளின் பின்பு இந்நூல் வெளிவருவதானது, அவர் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கிறார் என்பதற்கான சாட்சியமாகவும் விளங்குகின்றது.*

*1970 களின் பிற்கூறுகளில், தொழில்நுட்பக்கல்லூரி மாணவனாக இருந்தவேளை கவிதை எழுதத் தொடங்கிய ஷெல்லி தாசனின் நாற்பதாண்டு கால அறுவடைகள் 2010 இலேயே வெளிவர முடிந்தது என்ற ஆதங்கநிலை கடந்து, அதன் பின்பான மூன்றாண்டு களில் அவர் எழுதிய படைப்புகளின் தொகுப்பான இந்நூலின் வரவானது, கவிஞர் ஷெல்லிதாசனின் நிதானமான பார்வையையும் முற்போக்குச் சிந்தனைகளில் அவர் கொண்ட பற்றுறுதியையும் சமகால நடப்புகளைத் தீர்க்கமாக நுனித்தாயும் அவரது ஆற்றலையும் பதிவு செய்ய ஏதுவாகின்றது.*

*ஈழத்து இடதுசாரி முன்னோடிகளில் முக்கியமானவராகக் கொள்ளப்படும் தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் அரசியல் வகுப்புகளின்பால் ஈர்க்கப்பட்டு, இடதுசாரிச் சிந்தனைகளில் பயிற்சி பெற்று, இடதுசாரி இயக்கத் தோழர்களான கே.டானியல், இளங்கீரன், யோ.பெனடிக்ற்பாலன் போன்ற படைப்பாளிகளுட னான தொடர்புகளினூடாக “படைப்பாளியாக வரவேண்டும்” என்ற தன்னார்வத்தை வளர்த்துக் கொண்டவர் கவிஞர் ஷெல்லிதாசன். இடதுசாரிச் சிந்தனைகள் தான் அவரின் கவிதைகளின் ஊற்றுக் கண்ணாக விளங்கி வருகின்றன என்பதை இத்தொகுப்பிலுள்ள அவரது முதலாவது கவிதை வரிகளிலேயே காணலாம்:*

சேற்றுக்குள் கால் வைத்த நாம்
சேற்றுக்குள்ளேயே சிக்குண்டு பார்த்திருக்க
காற்றுள்ள போதே தூற்றியெடுத்துக்
கட்டிப் பயணிக்குது அவர்கள்
வண்டில்கள்.

சுரண்டப்படும் வர்க்கத்தின் அவலநிலையைத் தன் கவிதை வரிகளினூடு காட்சிப்படுத்தும் கவிஞர், இந்நூலின் பெயரைக் கொண்ட, "நகரவீதிகளில் நதிப்பிரவாகம்" என்ற தலைப்பிலான கவிதை வரிகளில் தனது சமத்துவ உலகம் காணும் நோக்கைப் பிரகடனம் செய்கிறார்.

"விருட்சங்கள் வேருடன் மட்டுமல்ல
விழுதுகளுடனும் கெல்லி எறியப்படும்
புதிய வரலாறுகள்
எங்கேயும் ஏன் இங்கேயும்
நாளை நிச்சயமாய் ஒரு
சமத்துவ விடியலுக்காய்"

இத்தொகுப்பில் 12 குறுங்கவிதைகளையும் உள்ளடக்கி, மொத்தம் 69 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை வகைப் பிரிப்புச் செய்யும் போது, பின்வரும் பிரிவுகளில் அவை பெரும்பாலும் அடங்குகின்றன:

- இடதுசாரிச் சிந்தனையை அல்லது மார்க்ஸிய சிந்தனையை வெளிப்படுத்தி சமத்துவ உலகை அவாவி நிற்கும் கவிதைகள்
- பெண்மையின் நிலையையும் பெண்மைக்கான அச்சுறுத்தல் களையும் விளக்கும் கவிதைகள்
- உலகியற் கொடுமைகளைக் கண்டு கொதித்து, உருகும் மனவெளிப்பாடுகளைக் காட்டும் கவிதைகள்.
- தற்கால நவீன உலகின் கண்டுபிடிப்புகளால் தறிகெட்டுப் போகாமல், மாணவப் பருவத்தை நெறிப்படுத்தும் கவிதைகள்.
- இளைய தலைமுறைப் படைப்பாளிகளுக்கு அநுபவ தரிசனத்தின் அவசியத்தை வலியுறுத்தும் கவிதைகள்.

சமத்துவ உலகின் விடியலை அவாவி நிற்கும் கவிதைகளில் வசந்தகானம், பூங்காவனத்துப் புதுக்கனவு, புன்னகை மலரும் எங்கள்

பக்கம் ஆகிய கவிதைகள் குறிப்பிடத்தக்கன. இவ்வகையில்,

“இருள் விலகும் ஓர் நாள்
எங்கள் பக்கம்
இல்லாமை அகன்று விடும்
ஏழை பக்கம்
புதிய வழி திறக்கும்
உழைப்போர் பக்கம்
புன்னகையும் மலருமவர்
வாழ்வின் பக்கம்”

என்ற வரிகளினூடாக நம்பிக்கை விதையூன்றி,

“திண்ணமாயன்று புது
விடியல் வரும் - எட்டுத்
திசையாவும் கைகோர்த்து
தழுவிக் கொள்ளும்

என்ற வரிகளினாலும்,

“காலச் சுழற்சியிலே
கைமாறும் இவ்வுலகம்
ஞாலத்திலே நம் எழுச்சி
நன்றோங்கி வெற்றி பெறும்”

என்ற வரிகளாலும் உழைப்போர் வாழ்வில் விடியல் வரும் என்று மாற்றம். உலக நியதி என்றும் மார்க்ஸிய தத்துவத்தை எளிமையான வரிகளில் எடுத்துக் கூறும் அழகு சிறப்பானது.

“நிலத்தில் விளையும் நித்திலங்கள்” என்ற தலைப்பிலான கவிதையினூடாக,

“நீயும் தலையெடுத்
இந்த நிலைகளை
களையெடு...
நிலத்தில் விளைந்ததொரு
நித்திலமாய் சுடர்விடு”

என பெண்மைக்கு அழைப்பு விடுக்கும் கவிஞர், வேறு சில கவிதை களில் வசந்த ருதுப் பருவத்தில் நிற்கும் இளம் பெண்களுக்கான

அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறார்.

உதாரணமாக,

“பருவக்காற்று வீசும்
பருவமிளைய பருவம்
பார்த்து நடக்க மறந்தால்
சேற்று நிலமே தஞ்சம்
......
கவனமடி பெண்ணே
காலம் கலிகாலம்!

என்று கட்டிளமைப்பருவத்தின் இயல்புகளை விபரிக்கும் கவிஞர், கட்டிளம் பருவத்தைக் கடந்து வந்த தனது தரிசனத்தினூடாக, அப்பருவத்தைச் சூறையாட நினைக்கும் தற்கால நிலவரங்களையும் எடுத்துரைக்கிறார்.

“குறும் பேச்சுகளை
இரவுபகல்
குறும்பாக பேசிப் பேசியே
விபரீத எண்ணவிதை தூவி
வேடிக்கை பார்க்க
வலைவீசி வசப்படுத்தி
உனது வாழ்வில்
விளையாடி விட
எத்தனிப்புகள் ஏராளம்.”

உலகியற் கொடுமைகளைக் கண்டு, கொதித்து, உருகும் கவிஞரின் உணர்வலைகளை “கண்ணில் ஒரு கங்கையாறு”, “இராட்சதப் பல்லிகளும் 24 ஆணிகளும்” ஆகிய கவிதைகளில் காணக் கூடியதாக உள்ளது. அரபுநாட்டில் சிரசு கொய்யப்பட்ட றிஸானாவை,

“பாலை நிலத்தில்
கானல் நீரை
பருக விரைந்த மான்குட்டி”

என அழகாக உருவகம் செய்து

“அடிமை வியாபார

ஆசை வார்த்தைச் சுவாலையில்
மொய்த்து வீழ்ந்து மடிய
விட்டில் பறவைகள் இன்னும் பல
முண்டியடித்தபடி"

என்ற வரிகளினூடாக, "வெளிநாட்டு வேலைவாய்ப்பு" என்ற மாயச் சுழலுள் சிக்கித்திணறும் இலங்கையரின் நிலையை மனிதாபி மானத்துடன் விளக்குகிறார்.

தற்கால நவீனத்துவத்தின் கண்டுபிடிப்புகளால் இன்றைய மாணவர் தலைமுறை தறிகெட்டுப்போகாமல் கொள்ள எங்கள் அனைவரின் பொறுப்பு என்பதை, "ஒவலும் ஒரு கரண்டி", "குடிசைக்குள் நவீனன்" ஆகிய கவிதைகளினூடாக மறை பொருளாக உணர்த்துகிறார். பிள்ளைக்கு நாம் செய்து கொடுக்கும் தற்கால வசதிகளை,

"கணினி வலைப்பூக்கள்
கமரா கைத்தொலைபேசி
கடுகதிக்கு மொபைக்
கைச் செலவிற்கு பொக்கற் மணி"

என அடுக்கிச் செல்லும் கவிஞர், இளையோரை நம்பியிருக்கும் குடும்பங்கள் பல, அந்த நம்பிக்கையில் சேவகம் செய்யும் முறைமையையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

"அப்பன் சாப்பிட்டா" என
அரவணைக்கும் தாய்
இரவுபகல் உழைத்து
ஓடாகி விட்ட இயந்திர அப்பா
உடுத்து உரிந்தெறியும்
அழுக்கை துவைத்தெடுத்து
அயன் செய்து அடுக்கி வைக்க
பாசமான சகோதரிகள்"

இத்தனையும் செய்தும் பொறுப்பின்றித் தறிகெட்டுச் செல்லும் எமது இளைய தலைமுறையைக் காப்பாற்றி சரியான பாதையைக் காட்ட வேண்டிய நிலையில் நாம் அனைவரும் உள்ளோம் என்பதைக் காட்டும் கவிஞரின் தீர்க்க தரிசனம் அலட்சியப்படுத்தக் கூடியதன்று.

இளைய தலைமுறைப் படைப்பாளிகளின் நிலையை வெளிப்படுதி இளம் கவிஞர்களுக்கான அறிவுரைகளைக் கூறும் கவிதைகளாக, "நாளையும் நீயாக", "புத்திசாலிப் புற்றீசல்கள்", "அடம்பிடிக்கும் அதி நவீனம்" ஆகியவை அமைகின்றன.

"மூன்றாம் பிறை
நான்காம் நாளே தன்னைத்தான்
முழுநிலவாக பிரகடனப்படுத்துகிறது
...
மூன்று இலைகள் விழுமுன்னரே
விழுது விட்ட விருட்சமாகிவிட்டதாக
நாற்றுக்கள் நர்த்தன மிடுகின்றன"

என்ற இளம் படைப்பாளிகள் பற்றிய கவிஞர் ஷெல்லிதாசனின் பார்வையை இளைய படைப்பாளிகள் வெறுமனே தூக்கியெறிந்து விட முடியாது. அதேவேளை அதிநவீனத்தின் மீது ஈர்ப்புக்கொண்ட படைப்பாளிகளின் போக்கையும் பின்வரும் வரிகளில் கவிஞர் எடுத்துரைப்பது கவனத்திற் குரியது:

"மரபுச் சிறையுடைத்த
வானம்பாடியை
இருண்மையென்னும்
மாமச் சிறையடைக்க
நவீனத்து எத்தனங்கள்!
....
புத்திஜீவிகளும்
புரட்டிப் புரட்டிப்
படித்தாலும் புலப்படாத
அர்த்த ஜாம மந்திரங்கள்
கவிதைகளாக!
...
சங்கத்து இலக்கியம் போல்
சமகால இலக்கியமும்
உரை வேண்டியத்
தவமியற்றும்

ஒரு காலத்தை
வடம் பிடித்து இழுத்துவர
அடம்பிடிக்கும்
அதிநவீன எத்தனங்கள்
யாருக்கு அவசியமோ."

கவிஞர் ஷெல்லிதாசனின் கவிதை வரிகள், அவர் வரித்துக் கொண்ட சித்தாந்தத்தின் இலக்கணமாய், கவிதைகளில் எளிமையை யும் தெளிவையும் வலியுறுத்துகின்றன.

நிறைவாக, உருவக் சிறப்போடு, புதுமையான தலைப்புகளில் ஷெல்லிதாசன் தனது கவிதைகளை எழுதிச் செல்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கவிஞர் ஷெல்லிதாசன் அவர்களிடமிருந்து, கவிதை வரிகளினூடாக நெறிப்படுதல்களை எமது சமூகம் வேண்டி நிற்கின்றது என்பதைத்தான் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். கவிஞரின் முயற்சிகள் மேலும் தொடர்வதாக.

## க.திலகநாதனின்

# "அரங்கு"

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லுரியின் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு க.திலகநாதன் அவர்கள் எழுதியுள்ள "அரங்கு" என்ற நூலுக்கு முன்னீடாக சில வரிகளை எழுதுவதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

இந்நூலானது நாடகமும் அரங்கியலும் எனும் பாடநெறி சார்ந்த 12 கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். இக்கட்டுரைகள் யாவும் அவ்வப்போது திரு.க.திலகநாதன் அவர்களாலேயே எழுதப் பட்டவை. "குமரன் வெளியீட்டகம்" இந்நூலை வெளியீட்டு வைத்துள்ளது.

இந்நூலிலுள்ள கட்டுரைகளை பற்றி நோக்குவதற்கு முன் நூலாசிரியர் பற்றிய சில பின்னணித் தகவல்களைக் கருத்திற் கொள்வது அவசியமானதாகும். திலகநாதன் அவர்கள் "நாடகமும் அரங்கியலும்" எனும் பாடத்தை சிறப்புப் பாடமாகக்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பயின்று சிறப்புப்பட்டம் பெற்றவராவார். பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் போன்ற நல்லாசான்களின் வழிகாட்டலில் "அரங்கு" பற்றிய விரிவான பார்வையை கொண்டவராக இவர் விளங்குகிறார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு "நாடகமும் அரங்கியலும்" பாடத்தை போதிப்பதோடு மட்டுமல்லாமல் அம் மாணவர்களைக் கொண்டு பல நாடகங்களை செய்வித்தும் வருகிறார். இவரின் நாடகங்கள் தேசிய மட்டத்தில் பரிசுகளை பெற்றுள்ளன.

பாடபோதனை, ஆற்றுகை என்பவற்றோடு நின்றுவிடாமல் "நாடகமும் அரங்கியலும்" பாடத்தின் முக்கியத்துவத்தை

உணர்த்துகின்ற வெவ்வேறு பணிகளிலும் திலகநாதன் ஈடுபடு கின்றார். குறிப்பாக வட பகுதியின் பல்வேறு பாடசாலைகளிலும் நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பல்வேறு பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து நாடகப் பயிற்சி அளித்து செயல் விளக்கமும் வழங்கி வருகின்றார். "நாடகமும் அரங்கியலும்" பாடத்திற்கான கலைத்திட்டக் குழுவிலும் மதிப்பீட்டுக் குழுவிலும் இவர் இடம் பெற்றுள்ளார் என்பதும் கவனத்திற்குரியன.

நூலாசிரியர் திலகநாதன் அவர்களின் பதிப்புப்பணி போற்றுதற்குரியதாகும். பல அரிய நாடக நூல்களின் பதிப்பு பணி யினூடு மாணவர் உலகத்திற்கு தேவையான தேர்ந்தெடுத்த நூல்கள் கிடைத்துள்ளன. கவிஞர் இ.முருகையனின் "அன்ரிக்கனி", "யூலியஸ் சீசர்" ஆகிய மொழிபெயர்ப்பு நாடக நூல்களும் நா.சுந்தரலிங்கத்தில் "விழிப்பு", "அபசுரம்" மற்றும் மறைமலை அடிகளின் "சாகுந்தலம்", திரிகூடராசப்ப கவிராயரின் "திருக்குற்றாலக்குறவஞ்சி" ஆகிய நூல் களை பதிப்பித்ததுடன் பேராசிரியர் கா.சிவத்தம்பி, சி.மௌனகுரு ஆகியோருடன் இணைந்து "அரங்கு ஓர் அறிமுகம்" எனும் நூலினையும் எழுதியுள்ளார். மற்றும் இவர் "கோயில் அரங்கமரபு", "தோள்கொடுப்போம்", "அரங்க கட்டுமானம்" போன்ற நூல்களை யும் எழுதியுள்ளார்.

"அரங்கு" என்ற இத்தொகுப்பு நூலிலுள்ள கட்டுரைகள் "நாடகம்" "அரங்கு" என்பன பற்றிய ஒரு பொதுவான பார்வையையும் "அரங்கு" பற்றிய ஒரு சிறப்பான பார்வையையும் வழங்குகின்றன. இக்கட்டுரைகள் அவ்வப்போது பெரும்பாலும் மாணவர்களைக் கருத்திற்கொண்டே எழுதப்பட்டுள்ளன என்பதால், மாணவர் களுக்குப் பொருத்தமான எளிய மொழிநடையும், பொருள் விளக்கமும் இவற்றில் காணப்படுகின்றன. நீண்ட கட்டுரைகளாக இல்லாமல் சிறிய கட்டுரைகளாக, எடுத்துக் கொண்ட பொருளை சுருங்கச் சுட்டுவதனால், மாணவர்களிடம் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டக்கூடியனவாகவும் உள்ளன.

"கிராமியக்கலைகளும் செந்நெறிக்கலைகளும்" என்ற கட்டுரை கலைகளின் வகைப்பாடு குறித்து விளக்குகிறது. செந்நெறிக் கலைகளினதும் கிராமியக்கலைகளினதும் பண்புகளையும் ஆற்றுகையையும் தனித்தனியாக, சுருக்கமாக விபரிப்பதோடு கிராமியக்கலைகள் கிராமியக் கலைகளாகவே நின்றுவிட்டமைக்கான பின்புலத்தை இக் கட்டுரை சூசகமாகச் சுட்டுகிறது.

"நாடகம் எனும் எண்ணக்கருவும் செய்கையும் செய்கைக்கான பின்புலமும்" என்ற தலைப்பிலான கட்டுரையானது, நாடகம் என்பது ஒரு நிகழ்கலை என்பதையும் உணர்ச்சித் தூய்மையை நாடகம் பார்வையாளனுக்கு வழங்குகின்றது என்பதையும் எடுத்துரைக்கிறது. நாடகத்தின் நோக்குகளாக அறிவூட்டலும் மகிழ்வூட்டலும் ஒன்றையொன்று விஞ்சாத அளவுக்கு இருக்கவேண்டும் என்பதும் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றது.

"நாடகப் படைப்பாக்கச் செல்நெறிகள்", "நெறியாள்கையும் நெறியாளரும்" ஆகிய இரு கட்டுரைகளும், பொதுவாகவே நாடகப் படைப்பாக்கச் செய்முறையில் நாடகம் ஒரு கூட்டுக்கலை என்ற வகையில் இசை, நடனம், ஓவியம், கட்டடம், இலக்கியம், சிற்பம் என்பனவற்றின் இணைவையும், இவற்றை இணைத்துச் செயற் படுத்துபவன் நெறியாளன் என்ற வகையில் நெறியாளனின் முக்கியத்துவத்தையும் விளக்குகின்றன. நாடகப் படைப்பாக்கத்திலே நாடகத் தயாரிப்பாளர், நாடகாசிரியர், நெறியாளர் ஆகியோரின் வகி பாகங்கள் எடுத்துரைக்கப்பட்டு, இவை எல்லாவற்றிலும் நெறி யாளரின் வகிபாகமே பொறுப்பு வாய்ந்தது என்பதும் நிறுவப்படு கின்றது. "நாடக எழுத்துருவை வாசித்து, வியாக்கியானம் செய்து, நடிகர்களைத் தெரிவு செய்து, தெரிவு செய்த நடிகர்களுக்கு பாத்திரங் கள் வழங்கி, ஒத்திகைகளை மேற்கொண்டு, நாடக அளிக்கைவரை பல செயற்பாடுகளையும் இணைத்து நாடகம் ஒன்றினை பார்வை யாளருக்கு வழங்குவதே" நெறியாளரின் பணியாகுமென்ற நெறியாள்கையின் விளக்கம் பொருத்தமாக உள்ளது.

"அரங்கில் ஊமமும் உரையாடலும்" என்ற தலைப்பிலான கட்டுரையில் "ஊமம்" என்பதற்கான விளக்கமளிக்கப்பட்டு, ஊமச் செயற்பாடுகளும் விபரிக்கப்படுகின்றன. மேலும் உரையாடல்களின் வகைகளும் விபரிப்பும் இக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேவேளை அவலச்சுவை பற்றி "அரிஸ்ரோட்டிலின் நாடகச் சிந்தனைகள்" என்ற கட்டுரையில் கால, இட, செயல் ஒருமைப் பாட்டின் படி முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு, நாடகம் ஒன்றின் அவலச்சுவை பற்றிய அரிஸ்ரோட்டலின் கருத்து முன்வைக்கப் படுகிறது. "கதாசிஸ்" என்பதற்கான தெளிவான விளக்கமும் வழங்கப்பட்டுள்ளது.

"அரங்கக் கட்டடக்கலை பற்றிய அறிமுகம்" என்பதான கட்டுரை "பார்வையாளர் -நடிகர் நின்று அல்லது இருந்து பார்க்கும் இடம், நடிகர் இருக்கும் இடம் ஆகிய இரண்டும் இணைந்ததே

அரங்கக்கட்டடம்" (Theatre Architecture) என்ற புதிய விளக்கத்தைத் தருகிறது. அரங்கின் வளர்ச்சிக் கட்டங்களை விபரிக்கும் இக்கட்டுரை யானது, அரங்கின் வளர்ச்சி பற்றிய மாணவர்களின் தேடலுக்கான முதன்மைக் கருத்துகளின் அறிமுகத்தை வழங்கியுள்ளது எனலாம்.

"தமிழர் நாடகக்கலை" எனும் கட்டுரையில் தமிழகத்திலும் இலங்கையிலும் நாடகத்தின் வரலாற்றுக் கட்டங்கள் நோக்கப்படு கின்றன. சடங்கு சார் நாடகமரபு, கலித்தொகை அரங்கு, செவ்வியல் அரங்கு, கோயில் அரங்கமரபு, கதைகூறும் அரங்கு, பாடல் அரங்கு, சொல்லாடல் அரங்கு, தற்கால அரங்கு என வெவ்வேறு கட்டங்களாக தமிழ்நாட்டில் வளர்ந்துவந்த தமிழ்நாடக அரங்கானது ஈழத்தில் கலையரசின் அரங்கு, பேராசிரியர் கணபதிப்பிள்ளை அரங்கு, சு.வித்தி யானந்தன் அரங்கு, 1970 களில் அரங்கு, 1980 களில் அரங்கு, 1990 களில் அரங்க வளர்ச்சி என வித்தியாசமான வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டிருப்பதையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

"சீனமரபுவழி நாடக அரங்கு: ஒரு சிறு அறிமுகம்" எனும் கட்டுரையானது சீன நாடக வரலாறும் சடங்கிலிருந்துதான் ஆரம்பித்தது என்பனத ஆதாரங்களுடன் நிறுவுகிறது. உடல் ரீதியாகவும் குரல் ரீதியாகவும் வெளிப்படுகின்ற மோடியை அடிப் படையாகக் கொண்டே சீனப் பாரம்பரிய அரங்கில் வேறுபாடுகளை இளங்காணக்கூடியதாக உள்ளது என்பதையும் இக்கட்டுரை தெரிவிக் கின்றது.

"நீர்வேலி வசந்தன் கூத்து - ஒரு சிறுகுறிப்பு" எனும் கட்டுரை யில் வசந்தன் கூத்து ஆடப்பட்டுவந்த இடங்களும் வசந்தன் கூத்து ஆடப்பெறும் முறையும் விபரிக்கப்படுகின்றன. "நாட்டியசாஸ்திரம்: சில அரங்கக் குறிப்புகள்" என்ற கட்டுரை, நாட்டியசாஸ்திரம் குறிப்பது நாடகமே என்று குறிப்பிட்டு, பரதமுனிவர் எழுதிய இந்த நூலில் நாடகம் எழுதுதல், நடித்தல், செய்துகாட்டுதல், அரங்கேறும் இடங்கள் ஆகியன பற்றியும் குறிப்பிடப்படுவதாக எடுத்துரைக் கின்றது.

இந்நூலில் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய கட்டுரை "அரங்கினூடே கற்றல் கற்பித்தல் - ஓர் அனுபவப்பகிர்வு" எனும் தலைப்பிலான கட்டுரையாகும். இன்று நாடகமும் அரங்கியலும் பாடசாலைகளிலும் உயர்கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடமாக முன்னெடுக்கப்படும் நிலையில், இக்கட்டுரை முக்கியமான பல விடயங்களை எளிமையாக எடுத்துச் சொல்கிறது. சிறுவர் நாடகங்கள் தயாரிக்கப்படும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய

அம்சங்களும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

நிறைவாக இந்நூலைப் பற்றிச் சொல்வதாயின், இந்நூலானது மாணவர்களிடையே நாடகம் பற்றிய தேடலை ஆரம்பித்து வைக்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றது என்பதே இதன் சிறப்பம்ச மாகும். எளிமையாக நாடகம் பற்றிய ஆரம்ப அறிவையூட்டும் இந்நூலின் தொடர்ச்சியாக விரிவான நூல் எழுதப்படவேண்டும். அதனைச்செய்து முடிக்கக்கூடிய அறிவும் ஆற்றலும் தகைமையும் இந்த நூலாசிரியருக்கு உள்ளதென்றே நான் நம்புகிறேன். அவ்வாறு ஒரு தனிநூலாக எழுதப்படும்போது, கட்டுரைகளாக அவ்வப்போது எழுதியதனால் இந்நூலில் இடம்பெறும். கூறியது கூறல் தவிர்க்கப் படும். விடயங்களும் ஆழமாக ஆராயப்படும். திரு க.திலகநாதன் அவர்கள் நாடகத்தைப் பயிலும் மாணவர்களுக்காக ஆற்றக்கூடிய பணிகள் இன்னும் நிறையவே உள்ளன. அவற்றை நிறை வேற்றுவதற்கு ஆண்டவனிடம் அருளாசி வேண்டுகிறேன்.

## கொற்றை பி. கிருஷ்ணானந்தனின்

# "கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக் கதைகள்"

*கதை கூறும் மரபு பல்வேறு சமூகங்களிலும் காலா காலமாக இருந்து வந்திருக்கின்றது. அறிவுப் பரிமாற்றத்துக்கு இக்கதைகள் நிறையவே பங்களிப்புச் செய்துள்ளன. கதைகள் கேட்பதில் சிறுவர் முதல் வளர்ந்தோர் வரை எல்லாருமே விருப்பமுடையவர்கள். இதனால் ஒருவர் தாம் உணர்த்த விரும்பிய கருத்தை கதை ஒன்றினூ டாகச் சொல்வதன் மூலம் கதை கேட்போரிடத்தில் அக்கருத்தைச் சுவறச் செய்ய முடியும் என்று கண்டு கொண்டு, கதை சொல்வதற்கான உத்திகளிலும் மக்கள் கவனம் செலுத்தத் தொடங்கினர்.*

*சிறுவர்களுக்கான கதை கூறும் மரபில், அறக் கருத்துக் களுக்கும் பழமொழிகளுக்கும் வியாக்கியானம் சொல்பவையாகவே கதைகள் புனைந்துரைக்கப்பட்டன. பழைய புராணங்களும் இதிகாசங்களும் காப்பியங்களும் அவற்றிலுள்ள கிளைக்கதைகளும் கூட, கதைகேட்போரின் ஆர்வத்தைக் கிளறி, கதைப் பொருளில் ஆழ்ந்து போகச் செய்யும் வகையிலேயே சொல்லப்பட்டு வந்தன. இக்கதைகள் நீண்டகாலமாக செவிவழியாகவே உரைக்கப்பட்டு வந்தமையாலேயே இவை கர்ண பரம்பரைக் கதைகள் எனப்பட்டன.*

*அச்சு இயந்திரத்தின் கண்டு பிடிப்போடு, பிரபல்யமாக விளங்கிய கதைகள் அச்சிடப்பட்டு பலருக்கும் கிடைக்கச் செய்யப் பட்டன. சொந்த மொழியிலே உள்ள கதைகளோடு பிறமொழிகளி லுள்ள கதைகளும் மொழிபெயர்க்கப்பட்டு நூல்களாக அச்சுருப் பெற்றன. இவ்வகையில் பஞ்சதந்திரக்கதைகள், பரமார்த்த குருவின் கதைகள், ஈசாப்பு நீதிக்கதைகள், மரியாதை ராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள், ஈசாப்பு நீதிக்கதைகள், முல்லாவின் கதைகள், அந்தரே கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள்*

போன்றவை பிரபல்யமானவை.

இக்கதைகள் பலவற்றில் அவை சொல்ல விரும்பிய அறக்கருத்துகளைப் போலவே அவற்றின் நகைச்சுவையும் அங்கதச் சுவையும் சிறுவர்களால் நயக்கத்தக்கவை. நகைச்சுவைக் கதைகளால் கிடைக்கும் மகிழ்ச்சியையும் களிப்பையும் விட பரிகசிப்புமாயும் வஞ்சப்புகழ்ச்சியாய் அமைந்த அங்கதச் சுவைக்கதைகளால் கற்றுக் கொள்ளும் பாடம் சிறுவர்களுக்கும் வளர்ந்தோருக்கும் அதிக பயன் தருபவை.

“கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக்தைகள்” எனும் இந்நூலிலுள்ள கதைகள் பலவற்றை “ஞானம் சஞ்சிகையில் முன்னரே படித்துள்ளேன். “கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்” என்ற தொடரில் அவை வெளிவந்தன. இக்கதைகளுட் சிலவற்றை ஏற்கெனவே நான் அறிந்திருக்கின்றேன். இக்கதைகள் அங்கதச்சுவை நிரம்பியனவாய் இருத்தல் இவற்றின் சிறப்பு. மேலோட்டமாகப் பார்க்கும்போது கிண்டலும் கேலியும் நிறைந்தனவாகத் தோன்றும் இக்கதைகள் கூறும் கருத்துகள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை.

தமிழ்க்கவிதை மரபிலே வஞ்சப்புகழ்ச்சி அணி என்று ஓர் அணி உண்டு. ஒருவன் ஒன்றைப் பழிப்பது போலப் புகழ்தலும் புகழ்வது போலப் பழித்தலும் வஞ்சப்புகழ்ச்சி அணிக்குரியவை. இவை நிந்தாஸ்துதி, துதி நிந்தை ஆகிய வகைப் பாடல்கள் என்றும் வழங்கப்படும். இம்மரபை ஒட்டிய குட்டிக்கதைகளையும் வஞ்சப் புகழ்ச்சிக் குட்டிக்கதைகள் என நாம் அடையாளம் காணலாம்.

“கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக்கதைகள்” என்ற பெயருள்ள இத்தொகுப்பு நூலிலுள்ள கதைகளை எழுதியிருக்கும் கொற்றையூர் பி.கிருஷ்ணானந்தன் அவர்கள் கவிஞராகவே ஆரம்பத்தில் அறியப்பட்டவர். பின்பு சிறுகதைகளையும் அவர் எழுதத் தொடங்கினார்.

சிறுகதையின் இரு சிறப்பம்சங்களாகச் சொல்லப்படுபவை அதன் ஒருமுகத் தாக்க விளைவும் (unified effect) சிறுகதையின் இறுதியிலுள்ள எதிர்பாராத திருப்பமுமாகும். இவ்விரு அம்சங்களை யும் கருதிற் கொண்டு படைக்கப்படுகின்ற சிறுகதைகளே சிறந்த சிறுகதைகளாக முடியும்.

குட்டிக்தைகளுக்கு சிறுகதை போன்று வரை விலக்கணம் கூற முடியாது. ஆனால் நீளத்திற் குறுகிய ஒரே ஒரு கருப்பொருளை அல்லது அம்சத்தை வலியுறுத்துவனவாகவும் குட்டிக்கதைகள்

பொதுவாக அமைய வேண்டும் எனக் கூறுவதில் தவறேதுமில்லை.

“கொற்றாவத்தையில் உலாவும் குட்டிக்கதைகள்” என்ற இந்நூலிலுள்ள கதைகள் குட்டிக்கதைகளுக்கான பொதுவான பண்புகளைக் கொண்டு விளங்குவதைக் காணலாம். மேலதிகமாக இக்கதைகள் பலவற்றினுள் முடிப்பிலுள்ள திருப்பம் (Twist) இக்குட்டிக்கதைகளை எழுதிய கொற்றை பி.கிருஷ்ணானந்தன் அவர்கள் கைதேர்ந்த சிறுகதை எழுத்தாளர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

இக்கதைகளை தனித்தனியே எடுத்து அலசுவதினூடாக அதனைப் படித்து ரசிக்கப்போகும் வாசகர்களின் ரசனைக்குக் குறுக்கே நிற்பது பொருத்தமில்லை என்றே கருதுகின்றேன். கிருஷ்ணானந்தன் அவர்கள் இது போன்ற இன்னும் பல நூல்களைத் தரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன் & எம்.யூ .எம்.ஸபீரின்

# "உசாத்துணையிடல் பாணிகள்"

ஆய்வுப்பண்பாடு என்பது ஆழ்ந்த பொருளுடையது. ஆய்வு மாணவர்களாலும் ஆய்வாளர்களாலும் நன்கு பேணப்பட வேண்டியது. இன்று நாம் பெற்றுள்ள அறிவுத் தேட்டமானது பல்வேறு சிந்தனையாளர்களாலும் கோட்பாட்டாளர்களாலும் ஆய்வாளர்களாலும் திரட்டப்பட்டதாகும். புதிய ஆய்வொன்றை மேற்கொள்வோர் ஆய்வுப்பொருள் குறித்த இலக்கியங்களை அறிந்திருக்க வேண்டும். இந்த இலக்கியங்களை மீளாய்வு செய்த பின்பே தமது ஆய்வுக்கான எண்ணக்கருச் சட்டகத்தையோ கோட்பாட்டுச்சட்டகத்தையோ உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக எண்ணக்கருச்சட்டகத்தை உருவாக்கி பின், தமது ஆய்வுப் பிரச்சினை குறித்து ஆய்வை மேற்கொண்டு ஆய்வு முடிவுகளை ஆய்வுக் கட்டுரையாகவோ அல்லது ஆய்வறிக்கை யாகவோ வெளியிடுகின்றபோது, எடுத்தாண்ட கருத்துகள் பிறருடையவை ஆயின், அவற்றை ஆதாரங்களுடன் குறிப்பிட வேண்டியது ஆய்வாளர்களின் கடமையாகும். அவ்வாறன்றி பிறருடை கருத்துகள், சொற்றொடர்கள், மொழிநடை போன்ற வற்றை எந்தவித ஆதாரமும் வழங்காது தம்முடையது போலவே ஆய்வாளர் பயன்படுத்துவது "எழுத்துத் திருட்டு" (Plagiarism) என ஆய்வுலகில் கொள்ளப்படும். ஒருவர் குறிப்பிட்ட கருத்தை அவ்வாறே அதே எழுதுவதோ (verbatim), அவரது கருத்தின் சாரத்தை ஆய்வாளர் தமது சொந்த மொழியல் மாற்றுவார்த்தைகளைக் கொண்டு எழுதுவதோ (Pharaphrasing) தகுந்த சான்றாதாரங்களுடன் குறிப்பிடப் படும் போதோ அது எழுத்துத் திருட்டு ஆகாது. இவ்வாறு சான்றா தாரங்களை வழங்கும்போது கூட, அவற்றை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதற்கு நெறிமுறைகள் உண்டு. இந்நெறிமுறை

களுக்கான பாடம் ஆய்வு முக்கியமான ஒன்றாகும்.

ஆய்வு மாணவர்களும், ஆய்வாளர்கள் சிலரும் கூட இந்நெறி முறைகளைப் பொருத்தமாகும் ஒரே சீராகவும் ஆய்வேடுகளில் பயன்படுத்துவதைக் காண முடிவதில்லை. இதற்குக் காரணம் இவர்கள் இது குறித்து சரியாக அறியாதிருப்பதும் அதன் முக்கியத்து வம் பற்றி அக்கறை கொள்ளாதிருப்பதும் தான். சான்றாதாரங்களை வழங்கும் பாணி ஆய்வுமுறையிலில் உசாத்துணையிடல் பாணி (Referencing Style) எனப்படுகின்றது. உசாத்துணையிடல் பாணிகள் பல உள்ளன. ஆனால் அவையும் காலமாற்றத் தோடு சில மாற்றங்களைப் பெற்றே பயன்படுத்தப்படுகின்றன. அறிவு இற்றைப்படுத்தப்படுவது அவசியம். இன்றைய நடைமுறைகளை அறியாமல் பழைய முறையையே பயன்படுத்துவோரும் உள்ளனர். புதிய ஹாவார்ட் பாணியை அறியாமல், இன்னமும் பழைய ஹவார்ட் பாணியை ஆய்வாளர்கள் பயன்படுத்துவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

APA உசாத்துணையிடல் பாணி, **6** ஆம் பதிப்பு (APA Referencing style, 6th Edition) என்பது இன்று சமூக விஞ்ஞானங்களிலும் கல்வி. வர்த்தகம் போன்ற பிறதுறைகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நியமமான முறையாகும். இப்பாணியிலான வழிகாட்டற் குறிப்புகளுடன் "உசாத்துணையிடல் பாணிகள்" என்ற இந்நூல் கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன், திரு எம்.யூ.எம்.ஸபீர் ஆகியோரால் இன்று வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்கு உரியதுமாகும். ஆய்வு மாணவர்களுக்கு மாத்திரமன்றி ஆய்வாளர் களுக்கும் பயன்தரக் கூடிய வகையில் உதாரணங்களையும் தந்து, சுருக்கமான மொழியில், எளிய நடையில் எழுதியிருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

இன்று கல்வித்துறையில் இளந்தலைமுறையினர் ஆய்வாளர் களாக, புதிய அறிவுமிக்கவர்களாக, கலாநிதிகளாக உருவாகி வருவது கண்கூடு. அவ்வாறானவர்களுள் முக்கியமான ஒருவர் கலாநிதி நவாஸ்தீன் என்பது எனது கணிப்பு. கலாநிதி நவாஸ்தீன் எழுதிய இந்நூல் கல்வித்துறைக்குப் புதியது. கல்வி யுலகுக்கு இது போன்ற இன்னும் பல நூல்களையும் தரவேண்டும் என வாழ்த்தி இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

## கனகசபை பாஸ்கரனின்

# "கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கணிப்பீடு"

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.க.பாஸ்கரன் அவர்கள் எழுதிய "கற்றல் கற்பித்தல் செயன் முறையில் கணிப்பீடு" எனும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியில் அளவீடு, மதிப்பீடு, கணிப்பீடு ஆகிய பதங்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பெற்றோரும் ஆசிரியர் களும் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வியில் நாட்டமுள்ள ஏனைய பிடிமானிகளும் (Stakeholders) அப்பிள்ளைகளின் கல்வி முன் னேற்றத்தை அளவிட முனைகின்றனர். மரபார்ந்த நிலையில் இந்த அளவீடுகள் தவணை இறுதியிலோ அல்லது ஆண்டின் இறுதியிலோ மேற்கொள்ளப்படும் சோதனைகளினூடாகவே பெறப்பட்டன. இந்த அளவீடுகளைக் கொண்டு தவணை இறுதியில் அல்லது ஆண்டிறுதி யில் அல்லது ஒரு பாடநெறியின் இறுதியில் மேற்கொள்ளப்படும் கூட்டு மதிப்பீடு. முடிவுப்பொருளின் (product) தரம் பற்றிய நிலையைக் குறிப்பிடக் கூடுமேயன்றி, அந்த முடிவுப்பொருளை உருவாக்கும் போதான, செயன்முறை (Process) பற்றி எதனையும் தெரிவிக்க மாட்டாது என்பதும் உணரப்பட்டு இன்று மதிப்பீட்டுக் கலாசாரத்தி லிருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்துக்கென கட்டளைக்கோள்மாற்றம் (paradigm shift) ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக உலகம் முழுவதிலுமே வகுப்பறைக் கணிப்பீட்டு நடைமுறைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. மாணவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பதனை, மாணவர்களுடன் உடனிருந்து கணிப்பீடுகளை மேற்கொண்டு அறிவதன்மூலம், மாணவர்களின் கற்றலில் நிலைமாற்ற வகிபாகத்தைக் கொண்டுள்ள, ஆசிரியர்கள் சிறந்த வளவாளர்களாக விளங்க முடியும். நோக்கங்களை இனங்காணவும் பாடத்தைத் திட்ட

மிடவும், கற்றலின்போது மாணவர்களுக்கான ஊக்கலை வழங்கவும், போதனை முறைகளின் வெற்றியையும் குறைபாடுகளையும் அறிந்து கொள்ளவும் என பல்வேறு சந்தர்ப்பங்களில் வகுப்பறைக் கணிப்பீடுகள் உதவுகின்றன. இவ்வாறு கணிப்பீடுகளை மேற்கொள் வதற்கான பல புதிய கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உலகியல் மாற்றங்கள் மிகவும் விரைவாக நிகழ்ந்து கொண்டி ருக்கின்ற போதிலும் நமது ஆசிரியர்கள் பலர் அவற்றை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்வதில்லை என்பது இன்று கல்வி உலகில் பெரிதும் பேசப்படுகின்றது. குறிப்பாக, கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் கணிப்பீட்டின் பங்களிப்புப் பற்றி ஆசிரியர்கள் பலர் எதுவும் அறியாமல் இருக்கிறார்கள் வருத்தத்துக் குரியது. ஆசிரிய கல்வியாளராக இன்று விளங்கும் இந்நூலாசிரியர், தமது அனுபவத்தினூடாக இந்நிலைமையை உணர்ந்து, எளிய தமிழில், இலகுவான முறையில் கணிப்பீடு தொடர்பான பல விடயங்களை இந்நூலில் வழங்கியிருக்கிறார்.

இந்நூல் ஒன்பது இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது. அளவீடு, மதிப்பீடு, கணிப்பீடு தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள், கணிப்பீட்டு அணுகுமுறைகள், மாணவர்களிடத்தே கணிப்பிடப்பட வேண்டிய அம்சங்கள், கணிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள், கணிப் பீட்டுக் கருவிகள், கணிப்பீட்டுக் கருவியொன்றின் அடிப்படைப் பண்புகள், மேலதிக விடயங்கள் என்ற தலைப்புகளில் அமையும் ஒன்பது இயல்களிலும் கணிப்பீட்டுச் செயன்முறை குறித்த அடிப் படையான பல விடயங்களை நூலாசிரியர், நன்கு ஒழுங்கமைத்துத் தந்துள்ளார்.

இன்று கணிப்பீடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் தொனிப்பொருளானது கற்றலுக்காக கணிப்பீடு, கற்றலாகக் கணிப்பீடு, கற்றலின் கணிப்பீடு ஆகிய மூன்று அம்சங்களைக் கருத்திற் கொண்டுள்ளன. இந்நூலின் முழுமையில் இம்மூன்று அம்சங்கள் தொடர்பான விடயங்கள் இடம் பெற்றிருப் பதையும் காணலாம்.

நூலின் அமைப்பில் வாசகரைக் கவரக்கூடிய அம்சங்கள் காணப்படுகின்றன. எளிய மொழிநடை, குறிப்பான தகவல்களை நட்சத்திரக்குறியுடன் ஒவ்வொன்றாக எடுத்துரைத்தல், எண்ணக்கருப் படங்களையும் உருக்களையும் பயன்படுத்தல், உதாரணங்களூடாக விளக்குதல், உபதலைப்புகளூடாக உள்ளடக்கத்தைப் பகுத்தல் என பல்வேறு வழிவகைகளைக் கையாண்டு, இந்நூலை ஆசிரியர்

வடிவமைத்துள்ளார். இந்நூல் பல கருத்தம்சங்களைக் கொண்டு (factual) விளங்குவது இதன் சிறப்பம்சம் எனலாம். நீண்ட நெடும் பந்திகளில் எழுதவேண்டிய விடயங்களை அட்டவணைகளில் தொகுத்துத் தந்திருப்பது, இந்நூலாசிரியரின் அறிவியல் அணுகு முறையின் தெளிவைக் காட்டுகிறது.

கணிப்பீடு குறித்த ஓர் ஆரம்பக்கைநூலாக இந்நூல் விளங்க வேண்டும் என்ற ஆசிரியரின் நோக்கினால் போலும், இந்நூலில் சில குறித்த விடயங்கள் சார்பாக எவ்வளவு தூரம் ஆரம்பநிலையில் அறிந் திருப்பது போதுமானதோ அந்த அளவுக்கு மாத்திரம் விபரங்கள் கூறப்பட்டுள்ளன. அதேவேளை புளூமின் திருத்தியமைக்கப்பட்ட பகுப்பியல், பன்முக நுண்மதிச் சோதனைகள் போன்றவை இங்கு தரப்பட்டிருப்பது, நூலாசிரியர் அறிவை இற்றைப்படுத்தும் நோக்குடையவர் என்பதற்குச் சாட்சியமாகவும் உள்ளது.

கல்வியியற் கல்லூரி மாணவர்களின் பாடத்தை அடிப் படையாகக் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டிருப்பினும், பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி, கல்விமாணிப்பட்டநெறி, முதுகல்வி மாணிப்பட்டநெறி போன்ற பல்வேறு கல்விநெறிகளை மேற் கொள்ளும் ஆதார நூலாகவும் இந்நூல் விளங்குகிறது. ஆசிரியர்களின் முன்பயிற்சி நெறிகளிலும் இந்நூல் பயன் படுத்தப்படலாம். அத்தோடு, ஆசிரியர்கள் யாவருமே தமது அறிவை இற்றைப்படுத்திக்கொள்ள வேண்டுமெனின் இந்நூலைக் கற்க வேண்டும்.

ஏற்கனவே "கல்வியில் செயல்நிலை" ஆய்வு என்ற நூலைத் தந்திருந்த திரு.க.பாஸ்கரன், இப்போது கல்வியிற் புலம் சார்ந்த முக்கியமான ஒரு நூலைத் தந்துள்ளார். இந்நூலும் ஆசிரியர்களிடம் வரவேற்புப் பெறும் என்று என் நம்பிக்கை, திரு.க.பாஸ்கரன் அவர்கள், கல்வியுலகுக்கு மேலும் பல நூல்களைத் தரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின்

# "கல்லறை மேலான காற்று"

*கலை இலக்கியங்கள் விஞ்ஞானக் கொள்கைகளுக்கு அந்நிய மானவை என்ற அபிப்பிராயமே பொதுவாகப் பலரிடையே உள்ளது. கலை இலக்கியங்களுக்கும் விஞ்ஞானக் கொள்கைகளுக்கும் இடையேயான தொடர்புகள் பற்றிச் சற்றேனும் சிந்திக்க மறுத் தமைதான் "கலை கலைக்காகவே" என்ற வாதத்தின் உருவாக்கத்திற்குக் காரணமாகியிருக்க வேண்டும்.*

*"கலை இலக்கியங்கள் மனித வாழ்வுடன் இணைந்தவை" என்பதே அவை விஞ்ஞானக் கொள்கைகளிலிருந்து அந்நியமானவை அல்ல என நிறுவப்போதுமானது. சமூக இயங்கியல் பற்றிய அறிவும் உணர்வும் நன்கு வளர்த்தெடுக்கப்படின், வெறும் பொழுது போக்கு இலக்கியங்கள் பற்றியோ, எதிர்ப்புரட்சி இலக்கியங்கள் அவை விளைவிக்கக்கூடிய தாக்கங்கள் குறித்து அதிகம் விசனிக்க வேண்டியதில்லை.*

*பொறி (machine) எமக்கெல்லாம் நன்கு தெரிந்த ஒன்று. பொறிகள் பலவாயினும் எல்லாமே சக்திப் பயப்பை அடிப்படை யாகக் கொண்டமைந்தவை. "திறன்" மிக்க பொறியே அதிகம் விரும்பப்படுவது. கலை இலக்கியங்களும்கூட பொறிகளைப் போன்றவைதான் அவை சமூகச் சக்திப்பயப்பை நோக்காகக் கொண்டவை. அதிக சக்தி விரயத்தைக் கொண்ட பொறிகளின் பாவனை தவிர்க்கப்படுதல் போன்று, மனித விழுமியங்களைக் கட்டிக்காக்கத் தவறும் இலக்கியங்களும்கூட கால ஓட்டத்தில் நிராகரிக்கப்பட்டு விடும்.*

*விஞ்ஞானப் பரிசோதனைகள் "கட்டுப்பாட்டுப் பரிசோதனை களாக" நிகழ்த்தப்படுதல் போன்று கலை இலக்கியங்களுக்கான*

"கட்டுப்பாடுகள்" அவற்றின் வடிவங்களை நிர்ணயிக்கின்றன. இக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவே இலக்கியமொன்றை வளர்த்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் இலக்கிய கர்த்தாவுக்கு உண்டு இவ்வகையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் திறன்மிக்க பொறியொன்றின் உருவாக்கம் குறித்துக் கவனஞ் செலுத்தல் போன்று, இலக்கிய கர்த்தாவும் தனது இலக்கிய ஆக்கத்தில் பயன்படுத்தும் வளங்கள், அதிக விரயமின்றி, கூடிய பயன்பாட்டைத் தம்மகத்தே கொண்டனவாய், சமூகத்தாக்கத்தை ஏற்படுத்தி சமூகச் சக்தி உருவாக்கத்திற்கு வழிகோலக்கூடியனவாய் இருத்தல் பற்றிச் சிந்தித்தாக வேண்டும்.

கவிதை என்பது மிகவும் நுணுக்கமான ஒரு பொறி, அதன் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றியபோதிலும், இன்று பலரை கவிதையாக்கங்களில் ஈடுபடச் செய்துள்ளபோதிலும், கவிதையில் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைதல் வேண்டும். சொல்லாட்சியும் படிமவார்ப்பும் கவிதையின் சக்திப் பயப்புக்கான மூலவளங்கள். வெறும் சொற்கோவைகளும் சொல் அடுக்குகளும் சக்திவிரயத்தையே உண்டுபண்ணுகின்றன. சொல்லாட்சியையும், படிம வார்ப்பினையும் வளர்த்துக்கொள்வதற்கு நல்ல இலக்கியங் களில் பரிச்சயம் இருக்கவேண்டியதும் அவசியமே, கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக முன் அனுபவ அறிவுத் தொகுதிகளைப் பயன்படுத்தலும் பயிற்சிக்குரியது.

வடமராட்சியில் கடந்த வருடம் "ஒப்பரேஷன் லிபரேஷன்" போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவு களையும் முதலாவதாண்டு நினைவு கூர்வாகக்கொண்டு வெளியாகும் இக்கவிதைத்தொகுதிக்கு முன்னுரை ஒன்று அவசியம்தானா என்பது இன்னமும் வினாவாகவே என்னிடம் உள்ளது. எனினும் இத் தொகுதியிலுள்ள கவிதைகளை இளங்கவிஞர்கள் என்பதும் இது வரையும் இனங்காட்டப்படாதவர்கள் என்பதுமே இத்தொகுதிக்கு முன்னுரையாக ஒரு சில வரிகளை எழுதக்கிடைத்த சந்தர்ப்பம் திருப்தியைத் தருகிறது. இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன் வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியனவும் புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே மகிழ்வைத் தரக்கூடியது தானே.

முன்னுரை விமர்சனமாக அமையக்கூடாதென்பதனால் கவிதைகள் பற்றி தனித்தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்த மன்று. எனினும் இக்கவிதைகள் யாவுமே. இராணுவக்கொடுமைகள்

*எம்விடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கின்றன என்பதை வெளிக் காட்டும் பொதுப்பண்பைத் தம்மகத்தே கொண்டுள்ளன எனக்கூறுதல் சாலப் பொருந்தும் வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் முதலாவது தொகுப்பு என்ற வகையிலும் இதற்கு ஓர் இடமுண்டு.*

*31-05-1988*

## கலாநிதி செல்வரூபி ஸ்கந்தராஜாவின்

# வகுப்பறைக் கணிப்பீட்டை விளங்கிக் கொள்ளல்

*இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் பிரதிப் பரீட்சை ஆணையாளர் கலாநிதி (திருமதி) செல்வரூபி ஸ்கந்தராஜா அவர்கள் எழுதிய "வகுப்பறைக் கணிப்பீட்டை விளங்கிக்கொள்ளல்" என்னும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*மிக விரைவாக மாற்றம் காணும் இன்றைய உலகில் பாட சாலைக்கல்வியிலும் பல மாற்றங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக் கின்றன. கல்வி பற்றிய சிந்தனைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இத்தகைய மாற்றங்கள் காரணமாக ஆசிரியர்களின் வகிபாகத்திலும் கூட கட்டளைக்கோள் மாற்றம்* (paradigm shift) *நிகழ்ந்துள்ளது. ஆசிரியர் அறிவை வழங்குபவர்* (provider of knowledge) *என்ற வகிபாகத்திலிருந்து வசதியளிப்பவர்* (facilitator) *என்ற வகிபாகத்தைக் கடந்து மாணவர்களில் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் வளவாளராக* (resource person) *ஓர் உயரிய வகிபாகத்தை வகிக்க வேண்டியவராகின்றார்.*

*இதேவேளை ஆசிரியம் இன்று ஒரு வாண்மைமிக்க தொழிலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் வாண்மைத்துவத்தின் இரு முக்கிய அம்சங்களான வாடிக்கையாளர் மையமாக* (client-centered) *இருத்தல், அறிவை அடிப்படையாகக்* (knowledge-based) *கொண்டிருத்தல் என்பன குறித்த தெளிவு ஆசிரியருக்கு அவசியமானது. தமது மாணவர்களின்* (client) *கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு வளவாளராக விளங்க வேண்டிய வகையில் ஆசிரியர் தனது அறிவை விரிவுபடுத்த வேண்டியதும் இற்றைப்படுத்த வேண்டியதும்* (updating) *காலத்தின் கட்டாய தேவைகளாக உள்ளன. இதனால் கல்விசார் அமர்வுகளிலும்*

ஆய்வரங்குகளிலும் மாணவர் கற்றலை வளப்படுத்துவதற்கான ஆசிரியர் கற்றலின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படுகின்றது. அறியாதவற்றை அறிந்து கொள்ளவும் அறிந்தவற்றைப் பிரயோகிக்க வும் இப்பிரயோகத்தின் வழியே புதிய விளக்கம் பெற ஆராய்வு மனப்பாங்கும் தேடலும் ஆசிரியர்களுக்கு உதவும் உண்மையில், பூரணத்துவம் மிக்க செயற்றிறன் வாய்ந்த ஆசிரியராக (accomplished) உருவாதல் என்பது உடனடியாக நிகழ்ந்து விடுவதன்று அது ஒரு வாழ்க்கை நீடித்த பயணம் (Lifelong journey) ஆகும்.

இந்நிலையில் ஆசிரியர் கற்றலை முன்னெடுப்பதிலுள்ள தடைக்காரணிகள் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. எனினும், அண்மைக்கால ஆய்வுகள் இத்தடைக் காரணிகள் சம்பந்தப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்கான வழிவகைகளை வெளிக்கொணர்ந் துள்ளன. விரிவஞ்சி, இவற்றை இங்கு விளக்குவது பொருத்தமாகாது. ஆயினும் ஆசிரியர் கற்றலுக்கு உதவுகின்ற கட்டமைப்புகளான "வாண்மைசார் கற்றல் சமுதாயங்கள்" (Professional Learning Communities), "திறனாய்வுநிலை நண்பர் குழாம்" (Critical Friends Groups) ஆகியன பற்றிய முன்மொழிவுகள் கல்விச் சீர்திருத்த முன்மொழிவாளர்களால் குறிப்பிடப்படுகின்றன என்பதை இங்கு தெரிவிக்க வேண்டியுள்ளது.

கல்வி உலகில் இத்தகுமாற்றங்கள் பல ஏற்பட்டிருக்கின்ற போதிலும் ஆசிரியர்கள் மத்தியில் இவை பற்றிய விளக்கம் குறைவாக உள்ளதுடன் இவை பற்றி தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் குறைவாகவே உள்ளது. என்னுடனான கலந்துரையாடல் களின்போது இவைபற்றி இந்நூலாசிரியர் தெரிவித்துள்ளார். இதற்கு தமிழ்மொழியில் இத்தகைய நூல்கள் குறைவாக வெளிவருவதும் ஒரு காரணமாகும். இதன் விளைவே "வகுப்பறைக் கணிப்பீட்டை விளங்கிக்கொள்ளல்" என்ற இந்நூலின் உருவாக்கமாகும்.

இந்நூல் எட்டு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது. கணிப் பீட்டுக் கொள்கைகள், கற்றல் கொள்கைகளும் கணிப்பீடும், கணிப் பீட்டின் நோக்கங்கள், கணிப்பீட்டுச் சூழமைவுகள், கல்விக் குறிக் கோள்களின் பகுப்பியல், கணிப்பீட்டுத் தொழினுட்பவியல், கணிப்பீட்டின் தொழினுட்பப் பண்புத்தரங்கள், ஆசிரியர் வாண்மை விருத்தியும் செயல்வழி ஆய்வும் என அமையும் இந்த எட்டு இயல்களும் ஓர் ஒழுங்குமுறையில் தர்க்கத் தொடர்ச்சியாக முன் வைக்கப்பட்டுள்ளன. எளிய மொழிநடையும் புதிய துறைசார் கலைச்சொற்களும் கொண்டதுடன் புலமைசார் எழுத்தாக இந்நூல் அமைகின்றமை இதன் சிறப்பம்சமாகும். வகுப்பறைக் கணிப்பீட்டின்

*புதிய போக்குகளை முன்வைப்பதோடு பிரயோகநிலையில் கோட்பாடுகளையும் கோட்பாடுவழியிலான நடைமுறைகளை விளக்கிச் செல்வதும் நூலாசிரியரின் அனுபவ முதிர்ச்சியைக் காட்டுகின்றது.*

*நூலாசிரியர் கலாநிதி (திருமதி) ஸ்கந்தராஜா, கல்வித் துறையின் பல்வேறு பணிசார் நிலைகளில் அனுபவம் பெற்றவர் தமது கல்விப்பயணத்தின் வழியே ஆசிரியராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக, தேசிய பாடசாலை அதிபராக, உதவி மற்றும் பிரதிப்பரீட்சை ஆணையாளராக பல்வேறு பதவிநிலைகளில் அவர் பெற்ற அனுபவமும் இந்நூலை செழுமைப்படுத்தியுள்ளன. கல்விமாணி, கல்விமுதுமாணி பட்டநெறிகளுக்கான வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றிய இவர் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கான பல்வேறு வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் கணிப்பீடு தொடர்பான பயிற்சிகளையும் ஒழுங்கு செய்து நடத்தியுள்ளார். கல்வி வாண்மையாளர்களுக்கான பயிற்சிநெறிகளில் ஒரு வளவாளராக இன்றுவரை தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றார்.*

*ஆசிரியர்கல்வி மீது கலாநிதி (திருமதி) ஸ்கந்தராஜா கொண்டிருக்கும் உத்வேகமும் ஆற்றலும் எனக்கு மலைப்பையே தந்துள்ளன. அவரின் முயற்சிக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் வழங்குவதோடு, தொடர்ந்தும் ஆசிரியர் உலகிற்கு பல அரிய நூல்களைத் தரவேண்டும் என்ற என் விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பின்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் எனது மாணவியாக இருந்தார் எனக் கூறிக் கொள்வதும் எனக்குப் பெருமை தருகின்றது.*

கலாநிதி த.கலாமணி
அணிந்துரை

## கலாநிதி தேவராசா முகுந்தனின்

# முன்பள்ளிக்கல்வி

கலாநிதி தேவராசா முகுந்தன் அவர்கள் எழுதி வெளியீடும் "முன்பள்ளிக்கல்வி" எனும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். முன்பள்ளிப் பருவப் பிள்ளைக் கல்வியை எவரும் வழங்கலாம், எவரும் அது பற்றிக் கருத்துரைக்க லாம் என்ற பொதுவான கருத்து நிலவும் இக்கால சூழலில், முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரிடமிருந்தான இந்நூலின் வருகை அவசியமான ஒன்றாக உள்ளது. அத்துடன் இந்நூலின் ஆசிரியர் முன்பிள்ளைப்பருவ கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் என்பதும் இந்நூலுக்கான கனதியை வழங்குகின்றது.

ஒரு மனிதனின் வாழ்க்கை வட்டதில் பிறப்பிலிருந்து ஐந்து அல்லது ஆறு வயது வரையான காலப்பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. உண்மையில், ஒரு பிள்ளையின் வாழ்க்கைக்கான அடித் தளம் இக்காலப்பகுதியிலேயே இடப்படுகின்றது. இப் பருவத்தில் உடல் வளர்ச்சியும் உள விருத்தியும் மிகவிரைவாகவே ஏற்படுகின்றன. சிக்கலான இன்றைய உலகில், யந்திர மயமான வாழ்க்கையின் மத்தியில் முன் பிள்ளைப்பருவப் பிள்ளைகளுக்கு வேண்டிய ஆரம்ப அனுபவங்களை வழங்கி அவர்களின் பல்வேறு திறன்களையும் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் பல சிரமங்களை எதிர் கொள் கிறார்கள். இந்நிலையில் முன்பள்ளிகளில் தேவை உணரப்பட்டு, இன்று அனைத்துப் பிள்ளைகளுக்கும் முன்பள்ளிக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது.

வீட்டுச் சூழலிலிருந்து வேறுபட்ட சூழலில், தன்னோ டொத்த வெவ்வேறு பிள்ளைகளுடன் இணைந்து மகிழ்வுறும்

திருப்தியுடனும் ஒரு சில மணித்தியாலங்களைத் தினந்தோறும் கழிப்பதற்கும் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முன் பள்ளியானது பிள்ளைக்குச் சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. பிள்ளை களின் தேவைகளையும் விருப்பு-வெறுப்புகளையும் நன்கு அறிந்து கொள்வதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால், நன்கு ஒழுங்கமைக்கப் பட்ட வகையிலே, பிள்ளைகளின் அடிப்படைத் திறன்கள் முன்பள்ளி களில் விருத்தி செய்யப்பட வேண்டும். இதனால் முழுமையான விருத்தியைத் தூண்டக்கூடிய சூழலையும் சமூகக் கவிநிலையையும் (Social climate), உடலியல் விருத்தி, உளவிருத்தி, மொழிவிருத்தி, சமூக விருத்தி, மனவெழுச்சி விருத்தி, அறிகை விருத்தி போன்ற பல்வேறு விருத்திநிலைகளையும் உள்ளடக்கிய முழுமையான விருத்திக்கான அடித்தளத்தை இட முடியும். இவ்வகையில் முறைசார்ந்த கல்விக் கான பாடசாலைக்குள் பிரவேசிக்கும்போது, அவசியமான முதிர்ச்சி யையும் சமூக மயமாக்கல் நிலையையும் பிள்ளை எய்திக் கொள்ள முடியும்.

இக்கருத்துகளின் பின்னணியில் நோக்கும் போது, “முன்பள்ளி” எனும் இக்கட்டுரைத்தொகுப்பு முன்பள்ளிப்பருவக் கல்வி தொடர்பான பல்வேறு விடயங்களையும் கருத்துகளையும் தெளிவாகவும் ஒழுங்குபடுத்தியும் தருகின்றது. முன்பள்ளிக்கல்வித் தத்துவம், உலகளாவிய முன்பள்ளிக் கல்வி முறைமைகள், இலங்கை யில் முன்பள்ளிக்கல்வியின் நிலை, முன்பள்ளிப் பிள்ளைகளின் பௌதிக சமூகச் சூழல், முன்பள்ளி ஆசிரியர்களின் பொறுப்புகளும் கடமைகளும், முன்பள்ளிக் கற்றல் கணிப்பீடு என இக்கட்டுரைகள் ஓர் ஒழுங்கான தொடராக அமைவது இந்நூலின் சிறப்பாகும். மேலும், முன்பள்ளிக்கான ஒன்றிணைந்த கற்பித்தல் முறை, முன்பள்ளிப்பருவக் கணிதத்திறன் விருத்தி, முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான விஞ்ஞானம், இலங்கையில் முன்பள்ளிக் கல்வியில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் என மேலதிக விடயங்களும் இந்நூலில் தரப் பட்டுள்ளன. இந்நூலிலுள்ள கட்டுரைகள் யாவும் வெவ்வேறு சந்தர்ப் பங்களில் எழுதப்பட்டவை. எனினும் இந்நூலில் இக்கட்டுரைகளின் வைப்பு முறையில் கருத்துகளின் தொடர்ச்சித் தன்மை பேணப்பட்டு, முன்பள்ளிக் கல்வி பற்றிய பல்வேறு விடயங்களையும் தரும் முழுமையான நூலாக அமைந்துள்ளது.

கலாநிதி முகுந்தன் அவர்கள் பாடசாலைக்காலத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியில் எனது மாணவராவார். இளம் வயதில் முன்பிள்ளைப்பருவக்கல்வியில் கலாநிதிப்பட்டம் பெற்றவர்

என்பதோடு, எப்போதும் முன்பள்ளிக் கல்வி பற்றியும் ஆரம்பக்கல்வி பற்றியும் சிந்தித்து, பல கட்டுரைகளை எழுதி வருபவராகவும் ஆய்வரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்து முன் பள்ளிக்கல்வி பற்றிய சிந்தனைக் கிளறலை ஏற்படுத்துபவராகவும் இவர் விளங்குகிறார்.

இலங்கையின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவராக விளங்கும் கலாநிதி முகுந்தன் அவர்கள் தமது படைப்புகளை விஞ்ஞான ரீதியில் அணுகுபவராகவும் உள்ளார். அத்தோடு, மொழியைச் செம்மையாகவும் எளிமையாகவும் கையாளக்கூடிய ஒருவர் என்பதால் இவரின் ஆக்க இலக்கியப் படைப்புகளில் மாத்திர மன்றி, இந்நூலிலுள்ள கட்டுரைகளிலும் தெளிவாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலுக்கான அணிந்துரையை என்னிடம் வேண்டிப் பெறுகின்றமையானது இவர் தமது ஆசிரியர்களை மதிப்பவர் என்பதையும் குரு விசுவாசம் உள்ளவர் என்பதையும் எடுத்துக் காட்டு கின்றது. இவர் இன்னும் பல்லாண்டுகள் உள, உடல் ஆரோக்கி யத்துடன் விளங்கி, எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கான பணிகளை ஆற்ற வேண்டுமென வாழ்த்துவதோடு இறை ஆசியையும் இறைஞ்சுகின்றேன்.

## கி.நடராசாவின்

# "திருக்குறள் – உரைவிளக்கம்"

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற தொன்மையான நூல் திருக்குறள் ஆகும். இந்நூலானது கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே இயற்றப்பட்டதென ஆய்வாளர் குறிப்பிடுவர். பழந்தமிழ் நூல்களில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்ற பகுப்பின்கீழ் அடங்கும் பதினெட்டு நூல்களில் "முப்பால்" எனும் பெயரிலமைந்த திருக்குறள் நூலும் ஒன்றாகும். மனித வாழ்வியலின் அடிப்படைகளான அறம், பொருள், இன்பம் என்பவற்றை விளக்கும் வகையில், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று இயல்களில், மொத்தமாக 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களைக் கொண்டு திருக்குறள் நூல் ஆக்கப்பட்டமையாலேயே "முப்பால்" எனும் பெயரில் இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக இடம்பெற்றது.

இந்நூலின் சிறப்புக் குறித்தே, இந்நூலை இயற்றிய திருவள்ளுவரின் பெருமையை "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என மகாகவி பாரதி அன்று கவி பாடினான். எக்காலத்தும் எத்தேசத்தவர்க்கும் வாழ்வியலின் செல்நெறி எவ்வாறு அமையவேண்டும் என்று எடுத்துரைக்கின்றமை யாலேயே, இந்நூல் 80 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்மொழியினதும் தமிழரதும் தமிழ்ப் பண்பாட்டினதும் பண்பியல் அம்சங்களை பல்வேறு நாட்டினரும் அறிந்துகொள்ளக் காரணமாகவும் இது இருந்து வருகின்றது. அத்தோடு உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் மூன்றாம் இடத்தையும் திருக்குறள் வகிக்கிறது.

முதல் அடியில் நான்கு சீர்களும் இரண்டாவது அடியில்

மூன்று சீர்களும் கொண்டு அமைகின்ற குறள் வெண்பாக்களிலேயே, மனித வாழ்வியலின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி எடுத்துக்கூற முடிந்தமையினாலேயே "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்" என திருக்குறளின் நுண்மையும் விரிவும் ஔவையாரால் விதந்துரைக்கப்பட்டது.

குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட அக்காலத்தைய முதல் நூலும் ஒரே நூலும் திருக்குறள் தான் என்ற சிறப்பும் இந்நூலுக்கு உண்டு. இந்நூலின் முதலாவது குறள் "அ" எனும் எழுத்தில் தொடங்குகிறது. இறுதிக் குறளானது "ன்" எனும் எழுத்துடன் முடிவடைகிறது. இவ்வாறு தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தில் ஆரம்பித்து ஈற்றெழுத்தில் நிறைவுபெறும் வேறு எந்த நூலும் தமிழில் இல்லை என்பதும்கூட இந்நூலின் சிறப்பே.

திருக்குறளின் முதன்மைப் பொருள் மனித வாழ்வியலே. இதனாலேயே "இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை; மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்; மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்" என திருக்குறள் சிறப்பிக்கப்படுகின்றது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ" மனிதர் எல்லோரும் படிக்க வேண்டிய நூல் திருக்குறள் என்பதனால் பாடசாலைக் கலைத் திட்டத்திலும் திருக்குறள் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 2017ஆம் ஆண்டு முதல் க.பொ.த. உயர்தர வகுப்பு தமிழ் பாடத் திற்கான பாடவிதானத்தில் "பொருட்பால்" எனும் இயலிலுள்ள "அறிவுடைமை" முதல் "தெரிந்து வினையாடல்" ஈறாக உள்ள பத்து அதிகாரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

பாக்களாக அமைந்த பழந்தமிழ் நூல்களை அவற்றின் மூல வடிவிலேயே படித்து விளங்கிக் கொள்வதற்கு மொழிவளமும் தெளிந்த அறிவும் அவசியம். இக்காரணத்தினாலேயே மூல நூல்களுக் கான உரைநூல்கள் எழுந்தன. திருக்குறள் நூலுக்கு உரை எழுதியோர் பலர். அவர்களுள் பரிமேலழகர் என்பாரின் உரையே சிறந்ததெனக் கொள்ளப்படுகின்றது. இவர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவரும் உரையாசிரியரும் ஆவார். பரிமேலழகரின் உரைச்சிறப்புக் காரணமாக "பரிமேலழகரின்றி வள்ளுவம் இல்லை" என இருபதாம் நூற்றாண்டின் எழுத்தாளர்களுள் ஒருவரான இந்திரா பார்த்தசாரதி குறிப்பிட்டுள்ளார். ஆனால், பரிமேலழகர் உரையையும் இன்றைய மாணவர்கள் விளங்கிக் கொள்வார்களோ என்பது சந்தேகத்திற் கிடமானதே.

பரிமேலழகர் காலத்து உரையை விளங்கிக்கொள்வதில்

இக்கால மாணவர்கள் இடர்ப்படுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. அதேவேளை, பரிமேலழகர் உரையைத் தவிர்த்து வேறு விளக்கங்கள் மூலம் திருக்குறளைக் கற்பதும் பொருத்தமுடையதன்று. இதனை மனங்கொண்ட வகையிலேயே, இன்றைய க.பொ.த. உயர்தரப் பாட நூலான திருக்குறளில் அறிவுடைமை முதல் தெரிந்து வினையாடல் வரையான பத்து அதிகாரங்களுக்கும் பேராசான் கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்கள் உரை விளக்கம் எழுதியுள்ளார். ஒவ்வோர் அதிகாரத்திலும் உள்ள குறள்களைத்தந்து, அக்குறள்கள் ஒவ்வொன்றுக்குமான பரிமேலழகர் உரையையும் குறிப்பிட்டு, இலகு தமிழில் எளிமையான பதங்களில் குறளின் பொருளை எழுதியிருப்ப தோடு மட்டுமல்லாமல், பத விளக்கமும் குறள் விளக்கமும் தந்துள்ளார். இவற்றை விட ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதியிலும் அதிகார விளக்கம் தந்து, அதிகாரத்துடன் சம்பந்தப்பட்ட முதன்மைப் பதங்களுக்கான வரைவிலக்கணமும் குறிப்பிட்டு அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான விரிவான குறிப்புக்களையும் தந்திருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

திரு கி.நடராசா அவர்களின் "திருக்குறள் - உரைவிளக்கம்" எனும் நூலானது அவரின் தமிழ்ப் புலமையையும் திருக்குறள் மீதும் பரிமேலழகர் உரை மீதும் அவர் கொண்டுள்ள அபிமானத்தையும் வெளிக்காட்டுவதாக உள்ளது. மாணவர்கள் மாத்திரமன்றி, ஆசிரியர் களும் கூட இந்நூலைப் படித்து இன்புறுவர் என்பதில் ஐயமில்லை.

பேராசான் கி.நடராசா அவர்கள் நாற்பத்தைந்து ஆண்டு களுக்கும் மேலாக தமிழாசிரியராய் "தமிழ் ஊழியம்" செய்து வருபவர். உத்தியோக நிலையில் அவர் இன்று ஓய்வு பெற்றிருந்தாலும் தொடர்ந்தும் தமிழ் கற்பித்தலை இன்றுவரை மேற்கொண்டு வருகிறார். தமிழ் மாணவர்களின் தேவைகளை அறிந்து பத்து வருடங்களுக்கும் மேலாக பாட நூலாக்க சேவையிலும் ஈடுபட்டு வருகிறார். ஏற்கெனவே இவர் எழுதியுள்ள பாடநூல்கள், மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் கல்விச் சமூகத்திலும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தன.

திரு கி.நடராசா அவர்களின் நூலாக்க முயற்சிகள் வெற்றி பெறுவதற்கான காரணங்களை எண்ணிப்பார்க்கையில், அவர் தமிழ்க் கல்வி மீதும் மாணவர்கள் மீதும் கொண்டுள்ள பற்றுதலே முதலில் நினைவுக்கு வருகின்றது. பட்டப்படிப்புப் பாடங்களுள் ஒன்றாக தமிழைத் தெரிவுசெய்த இவர், கல்வி முதுமாணிப் பட்டத்தையும் (MA in Education) பெற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்

கழகத்திலே கல்வித்துறை விரிவுரையாளராகவும் இவர் கடமையாற்றி யுள்ளார். ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே அதிபர் நியமனம் பெற்று, அதிபர் சேவையிலுள்ளபோதே இவர் ஓய்வு பெற்றார். வடமராட்சியின் முன்னணிப் பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றிய இவரின் நிருவாகத்திறன் பலராலும் விதந்தோதப்பட்டது. ஆழ்ந்த புலமையும் சிறந்த திட்டமிடலும் உயர்ந்த நிருவாகத்திறனும் இவரது நூலாக்க முயற்சிகளில் துணைநின்று அவை வெற்றிபெற உதவி வருகின்றன.

எவருடனும் இனிமையாகப் பழகும் திரு கி. நடராசா அவர்கள் எனக்கும் இனியர். நாம் கொண்ட நட்பு நீண்ட காலமாக பூத்துக் குலுங்குகிறது. எமது பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை மலரான "திருவுடையாள்" என்ற நூலின் இணையாசிரியர்களாக நாம் இருவரும் தொடர்ந்து பத்து வருடங்களுக்கும் மேலாக செயலாற்றி வருகின்றோம். இவரின் இந்நூலுக்கு அணிந்துரை எழுதித்தருமாறு அவர் பணித்திருப்பது எமது நட்பின் ஓர் அடையாளமே. அவரின் தமிழ்க் கல்விப்பணி மேலும் மேலும் விரிவுபெற நிறைந்த சுகத்தையும் நீண்ட ஆயுளையும் அருள வேண்டுமென இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

## பொலிகை ச.திருப்பதியின்

# “காதோடு வாய் புதைத்து”

“காதோடு வாய் புதைத்து...” அமரர் கவிஞர் ச.திருப்பதி அவர்களின் நெடுநாள் விருப்பு. இக்கவிதை நூலை அமரர்க்கான படையலாக இதன் வெளியீட்டாளர்கள் கருதலாம். ஆனால் இக்கவிதை நூலும் ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பதிவுதான்.

இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் ஈழத்துக் கவிதை இலக்கியப் பாரம்பரியத்தின் ஒரு காலகட்டத்துச் செல்நெறியினைச் சுட்டுகின்றன. “ஈழகேசரி” காலத்தைத் தொடர்ந்து ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அந்நாளைய இலக்கிய நிறுவனங்களும் கவிதைப் போட்டிகளை நடத்தி “கவிஞர்களை” இனங்காட்டின. கவிதையின் பாடுபொருளை போட்டியை நடத்தியவர்களே முன்வைத்தனர். கவிதையின் ஈற்றடியை (குறிப்பாக, வெண்பா ஈற்றடியை)க் கொடுத்து பொருத்தமான கவிதைகளை இயற்றுமாறு வேண்டினர். பரிசுக்குரிய கவிதைகளை மாத்திரமன்றி “தரமான“ கவிதைகளையும் பத்திரிகைகளில் பிரசுரித்தனர். இதனால் “கற்பனை வளத்தை முதன்மைப் படுத்திய செய்யுள் இயற்றற் பாரம்பரியத்தை அவர்கள் கட்டிக் காத்தனர். போட்டியில் பரிசு கிடைக்காவிடினும் அச்சில் தமது கவிதைகளைப்பார்த்து மகிழ்ந்த சிலர் அதே பாணியில் கவிதைகளை இயற்றி பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்தனர். இலக்கண விதிகளை மீறாமல் தமது “கற்பனை”யில் உதித்த சொல்லடுக்குச் சித்திரங்களை அவர்கள் தீட்டினர்.

கவிஞர் திருப்பதி அவர்கள் இவ்வாறான போட்டிகள் பலவற்றில் பரிசு பெற்றவர். இத்தொகுப்பில் அடங்கும் கவிதைகளுட் பல அவ்வாறுபரிசுக்குரியனவாய் தேர்ந்தடுக்கப்பட்டவை. இதனால்

இக்கவிதைகளின் பாடுபொருள்களும் பிறராலேயே தீர்மானிக்கப் பட்டவை. ஆயினும் அக்காலச் செய்யுள் மரபிலமைந்த இவரது கவிதைகளில் தீண்டாமை, கயமை, நாகரிகச் சீரழிவு குறித்த கொடுமைகளைச் சாடும் அவரின் ஆத்மாவையும் தரிசிக்க முடிகிறது. சமூகக் கொடுமைகளைச் சாடும் குரல் வீரியமாக ஒலிக்காமைக்கும் சமூகப்பார்வையைத் தீர்க்கதரிசனத்தோடு முன்வைக்க முடியாமற் போனமைக்கும் அக்காலகட்டக் கவிதைச் செல்நெறியையே காரணமாகக் கொள்ளவேண்டும். இக்கவிஞரின் சொல்வளத்தையும் கவிபுனையும் ஆற்றலையும் கண்டு திகைப்புறும் அதேவேளை, பசுபதி, சுபத்திரன் போன்ற கவிஞர்களின் வரிசையில் வைத்துப் பார்த்திருக்க வேண்டிய கவிஞர் ஒருவரின் உருவாக்கத்தைத் தடுத்த காலம் இழைத்த கொடுமையின் சோகம் நெஞ்சை நெருடுகிறது.

இக்கவிதை நூலுக்கு முன்னீடாய்ச் சில வரிகள் எழுத வேண்டுமென்று அன்புக்குரிய தம்பி கவிஞர் கொற்றை பி.கிருஷ்ணானந்தன் கோரிக்கை விடுத்தார். இதன் பேறாய் ஒரு நல்ல மரபுக் கவிஞரின் கவிதைகளைப் படித்து சில வரிகளை எழுத முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

# கவிஞர் அல்வாயூர் மு.செல்லையாவின்
# "வளர்பிறை"

*இரண்டாம் பதிப்புக்கான முன்னுரை*

*கவிஞர் அல்வாயூர் மு.செல்லையா அவர்களின் கவிதைத் தொகுதியான வளர்பிறை இன்று மீள்பதிப்புச் செய்யப்படுவது காலத்தின் தேவையாகும். "இன்று செழித்து வளரும் கவிதைத் துறையின் ஆழ அகலப் பரிமாணங்கள் 1930-1950க் காலகட்டத்திலே விரிவாக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபொழுது, அந்த முயற்சிகளிலே கவிஞர் செல்லையா அவர்களும் பங்குகொண்டார்" என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கூற்றும், அக்கால கட்டத்தின் வளர்ச்சிப் போக்கை ஆராயப்புகும் இலக்கிய விமர்சனங்களில் கவிஞர் அல்வாயூர் மு.செல்லையாவின் பங்கும் பணியும் பற்றிய கருத்துக்கள் இடம்பெற்று வருவதும் வளர்பிறையின் மறுபதிப்பின் அவசியத்தை உணர்த்துகின்றன. இந்நூலின் முதலாவது பதிப்பு வெளிவந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு, 50 வருடங்களுக்கு முன்பு வெளிவந்த வளர்பிறையைப் படிக்கும் வாய்ப்பு அருகியே காணப்பட்டது. இந்நிலைமை இந்த மறுபதிப்பின்மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது. இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின்ற போதே, அமரர் நா.முஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற வளர்பிறையின் இரண்டாம் பதிப்பு முயற்சி பாராட்டப்பட வேண்டியதும், நன்றியுடன் மனங்கொள்ளப்படவேண்டியதும் ஆகின்றது.*

*கவிஞர் அல்வாயூர் மு.செல்லையாவின் வேறுபல ஆக்கங்கள் 1952-1966 காலப்பகுதியில் வெளிவந்த சஞ்சிகைகளிலும்,*

தினசரிகளிலும், வார இதழ்களிலும் இடம்பெற்றிருந்தன. இவற்றுடன், இவரின் ஆக்கங்கள் பல, சிறுநூல்களாகவும் பிரசுரமாயின. இவை யாவும் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குச் "செய்தி" மட்டுமே.

கவிஞரின் படைப்புக்கள் அனைத்தும் தனித்திரட்டாக வெளிவருகின்றபோதே ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறைக்குக் கவிஞர் அல்வாயூர் மு.செல்லையாவின் பங்களிப்புப் பற்றிய மதிப்பீடு பொருளுடையதாக அமைய முடியும். இத்தனித்திரட்டு வெளியீட்டுக்கான முன்னோடிச் செயற்பாடாகவும் வளர்பிறையின் இரண்டாம் பதிப்பு அமைகின்றது.

கவிஞர் அல்வாயூர் மு.செல்லையா அவர்களின் பிரியத்திற்குரிய மாணவர்களுள் எனது தந்தையாரான சோதிடர் ச.தம்பிஐயா அவர்களும் ஒருவர். குருவைத் தெய்வமாகக் கொள்ளும் மரபுவழி வந்த எனக்கு, எனது தந்தைக்குக் குருவாக விளங்கியவரின் நூலொன்றுக்கு முன்னுரை எழுதும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை, எனது கலை இலக்கியத்துறை ஈடுபாட்டுக்குக் குருவாக என் தந்தையின் குருவிசுவாசத்தின் மூலம் நான் பெற்றுக்கொண்டபேறு என்றே கருதுகின்றேன்.

## பொலிகை ஜெயாவின்

# "பறிகொடுத்த பின்னும் வாழத் துடிப்பவர்கள்"

*கதை சொல்லும் மரபு நீண்ட கால வரலாற்றை உடையது. மனிதர் கூட்டமாக வாழத்தொடங்கிய காலம் முதல் தமது அனுபவங்களைக் கதைகளாகச் சொல்ல முயன்றனர். அங்க அசைவுகளுடன், சைகைகளுடன் ஆரம்பித்த "கதை சொல்லல்" மொழியின் பிரயோகத்துடன் வீச்சுக் கொண்டது. பேச்சுமொழியும் அதனைத் தொடர்ந்த எழுத்து மொழியும் பல இலக்கியங்களை மனித குலத்துக்கு வழங்கின.*

*கர்ணபரம்பரைக் கதைகளாக, தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வந்த கதைகள், அச்சுயந்திரத்தின் கண்டு பிடிப்போடு பரவலாக்கமடைந்தன. இன, மத, நிற பாகுபாடுகளுக்கு மத்தியிலும் மனித குலத்துக்கான பொது நீதி ஒன்றை இக்கதைகள் எடுத் துரைத்தன. இப்பொது நீதிக்கெதிராக அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் இக்கதைகள் பதிவு செய்தன. அவ்வப்போது இந்த அடக்குமுறைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்த உணர்வுச் சுழிப்புகளையும் போராட்ட வரலாற்றை யும் கூட இக்கதைகள் பதிவு செய்தன. ஆனாலும் சாதி, மத, இன, நிற வேறுபாடுகளும் அவற்றின் காரணமான அக்கிரமங்களும் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றுக்கெதிரான எதிர்ப்புக்குரல்களும் கதைகளாக, கவிதைகளாக, இலக்கியங்களாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.*

*இப்பின்னணியிலே தான் பொலிகை ஜெயாவின் "பறி கொடுத்த பின்பும் வாழத்துடிப்பவர்கள்" என்ற சிறுகதைத் நோக்க வேண்டியுள்ளது. இதிலுள்ள கதைகள் அனைத்துமே மனித வாழ்வு எதிர்கொள்ளும் அவல நிலைமைகளையும் இனவேறுபாடு*

காரணமாக இலங்கையில் ஏற்பட்டயுத்த அனர்த்த சூழலுடன் கூடிய பரிதாபமான வாழ்வியலையும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கூட நிறவேறுபாடு மேலோங்கி கறுப்பர்கள் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் பொலிகை ஜெயா ஓர்மத்தோடு தமது கதைகளில் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறு அநீதிக்கெதிராகக் குரல்கொடுக்கும் பொலிகை ஜெயா இன, மத, நிற வெறியாளர்களுக்கு மத்தியில் நல்ல மனிதர் களும் வாழந்து கொண்டுதான் இருக்கிறார்களென தமது கதைகள் மூலம் உணர்த்துகிறார். இந்த நல்ல மனிதர்கள் வகைமாதிரிகளாகக் கொள்ளப்பட முடியாதவர்களெனினும், ஏழை ஊமைப்பெண்ணை சீதனமின்றி திருமணம் செய்ய முன்வரும் வாலிபன், இனப்பிரச்சினை காரணமான யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த தமிழ்க்குடும்பத்திற்கு தமது வீட்டிலேயே இடம் தர முன் வரும் சிங்களத் தம்பதியர் போன்ற பாத்திரங்கள் மூலம் தாம் காணவிரும்பும் இலட்சிய உலகை நேர் மனப்பாங்குடன் பொலிகை ஜெயா சித்திரித்துள்ளார்.

இன்று, “கதைசொல்லல்” என்பதற்கும் அப்பால், சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வடிவங்கள் நன்கு வரையறை செய்யப்பட்டுள்ளன. உலகின் முதலாவது சிறுகதையைத் தந்த “அலன் போ”, சிறுகதைகளில் ஒரு சீர்த்தன்மை (Unified effect), முடிவிலுள்ள திருப்பம் (Twist) ஆகியவற்றை வலியுறுத்தினார். எடுத்துக்கொண்ட மையக் கருவுக்கு அமைவாக சிறுகதையிலுள்ள பாத்திரங்களையும் நிகழ்வுகளையும் நகர்த்த வேண்டும் என்பதை “ஒரு சீர்த்தன்மை” என்பதாலும், சிறுகதையின் முடிப்பு ஒரு மனித யதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்பதை “முடிவிலுள்ள திருப்பம்” என்பதாலும் “அலன் போ” விளக்கினார்.

பொலிகை ஜெயா கதை சொல்வதில் வல்லவராகவே உள்ளார். நிறைந்த செய்திகளையும் உலக நடப்புகளையும் இவரது கதைகளில் தரிசிக்க முடிகிறது. சில இடங்களில் இவரது அறிகைப்புலவீச்சுக் குறித்து (Span of cognition) மலைப்பும் எழுகிறது. ஆனாலும், சிறுகதையின் “செட்டான” அமைப்புக் குறித்து சிறிது கவனம் செலுத்துவாரேயாயின் இவர் இன்னும் பல நல்ல படைப்புக்களைத் தர முடியும். இந்த நம்பிக்கை வெறும் வார்த்தைகளுக்குரியதன்று.

## நடிகநாதமணி மு.செ.விவேகானந்தனின்

# "சிறுவர் பாடல்"

*இளையோரின் வளர்ச்சிப் பருவத்தை உளவியலாளர்கள் நான்காக வகுப்பர்:*

*பிறப்பிலிருந்து 2 வயதுவரை*

*மழலைப் பருவம்* (Infancy)

*2 வயதிலிருந்து 6 வயதுவரை*

*முன் ஆரம்பப் பிள்ளைப் பருவம்* (Early Childhood)

*6 வயதிலிருந்து 12 வயதுவரை*

*பின் ஆரம்பப் பிள்ளைப் பருவம்* (Later Childhood)

*12 வயதிலிருந்து 19 வயதுவரை*

*கட்டிளமைப் பருவம்* (Adolescence)

*இப்பருவங்களுள் மழலைப் பருவமும் முன் ஆரம்பப் பிள்ளைப் பருவமும் முக்கியமான வளர்ச்சிக் கட்டங்கள். உடல் இயக்கத் திறன்களின் விருத்தி, மனவெழுச்சி விருத்தி, மொழிவிருத்தி, எண்ணக்கரு விருத்தி, சமூகவிருத்தி ஆகிய பல்வேறு விருத்திசார் அம்சங்கள் குறித்து மழலைப் பருவத்திலும் முன் ஆரம்பப் பிள்ளைப் பருவத்திலும் இடப்படும் அத்திபாரமே, பின்னர் ஆளுமையுள்ள ஒரு மனிதனின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும்.*

*மழலைப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், பாலர் பாடல்கள், சிறுவர் பாடல்கள் என்ற பெயர்களில் அழைக்கப்படும் பாடல்கள் மழலைப் பருவத்திலும் முன் ஆரம்பப் பிள்ளைப் பருவத்திலும் விருத்தி செய்யப்பட வேண்டிய ஆற்றல்களுக்கு வளம் சேர்ப்பன. இப்பாடல்களினூடு மனவெழுச்சி, அழகியல் உணர்வு, படைப்பாக்கச் சிந்தனை முதலியவற்றின் விருத்திக்கான அடிப்படைகள்*

கட்டியெழுப்பப்படவேண்டும்.

இன்று, எண்ணக்கருவிருத்தி, மொழிவிருத்தி, மொழித்திறன் விருத்தி, மொழியாட்சி என்பன தொடர்பான ஆய்வுகளின் அடிப் படையில் ஆரம்பப் பிள்ளைப் பருவத்தினர்க்கான பாடல் ஆக்கம் குறித்து பல்வேறு நியமங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எளிமையான, சிறிய சொற்களைக் கொண்டு சந்தப்பாடல்களாக அமையவேண்டும் என்பதும் பிள்ளைகளுக்குத் தெரிந்த சொற்களைக் கொண்டு புதிய சொற்கள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்பதும் அப்புதிய சொற்கள் திரும்பத் திரும்ப இடம்பெற்று எளிதாகப் பிள்ளைகளின் நினைவிற் பதிக்கப்படக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதும் அந்த நியமங்களுட் சில. அதேவேளை, இப்பாடல்கள் பிள்ளைகளின் ஆராய்வு மனப்பாங்கை (Inquiring Mind) விருத்திசெய்து நயக்கும் திறனையும் கண்டுபிடிக்கும் திறனையும் வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும். முறைசார் நிறுவனமான பாடசாலைக்குப் பிள்ளை செல்ல முன்னர் பிள்ளையிடத்து பல்வேறு ஆற்றல்களும் அறிதிறன்களும் விருத்தி செய்யப்பட வேண்டுமாயின், அது நன்கு பயிற்சி பெற்றவர் களினாலேயே ஆற்றப்படமுடியும். இதனாலேயே இப்பொறுப்பைப் பெற்றோர்களிடத்து முழுமையாக ஒப்படைக்காது, முன்பள்ளி களிடத்தும் இது கையளிக்கப்பட்டுள்ளது. வீடுகளிலும் முன்பள்ளி களிலும் பாடி மகிழ்வதற்கும் அப்பாடல்களினூடு உடலியக்க அசைவு களையும் மொழி வெளிப்பாடுகளையும் ஒன்றிணைக்கவும் உதவக் கூடிய மழலைப் பாடல்களும் சிறுவர் பாடல்களும், குறித்த நியமங் களுக்கமைவாக, மிக அதிக அளவில் நூல்களாக வெளிவரவேண்டும். குழந்தை உளவியல், குழந்தை அழகியல், குழந்தைக் கல்வி போன்ற துறைசார் அநுபவங்களையும் பயிற்சிகளையும் குழந்தை இலக்கியக் காரர்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிவகைகள் செய்யப்படின், அதிக அளவில், மழலைப் பாடல்களும் பாலர் பாடல்களும், சிறுவர் பாடல்களும் நூல்களாக வெளிவர வாய்ப்பு ஏற்படும்.

இவ்வகையில், நடிகநாதமணி அமரர் மு.செ.விவேகானந்தன் அவர்களின் "சிறுவர் பாடல்" நூல் புதிய வரவாய் அமைந்து குழந்தை இலக்கியத்துக்கு வளம் சேர்க்கிறது. இந்நூலைப் பதிப்பித்து வெளியீடு செய்யும் திரு.மா.அனந்தராஜன் அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது. இந்நூலில் உள்ள எளிமையான பாடல்கள் பெரிய அளவு எழுத்துக்களில் கருத்து விளக்கப்படங்களுடன் அச்சுப் பதிப்பிக்கப்பட்டிருப்பது இந்நூலாக்கத்தில் கவனத்திற் கொள்ளப் பட்ட கரிசனையையே காட்டுகின்றது.

## க.சின்னராஜனின்

# "தண்ணீர்"

*நண்பர் க.சின்னராஜனின் முதலாவது சிறுகதைத் தொகுதி இது. சின்னராஜன் அண்மைக் காலங்களில் இனங்காணப்பட்ட ஒரு கவிஞர். "வல்லைவெளி" என்ற இவரது முதலாவது கவிதைத்தொகுதி வடமாகாண கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முதலாவது பரிசுக்குரிய நூலாகத் தெரிவு செய்யப்பட்டதாகும். இன்று வரை தொடர்ந்து கவிதைகளை இவர் எழுதி வருகிறார்.*

*ஆனாலும், சின்னராஜன் முதன்முதலில் இனங்காணப் பட்டது. ஒரு சிறுகதை எழுத்தாளனாகவே. 1986 இல் வடமராட்சி யைச் சேர்ந்த பன்னிரு எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தொகுப்பு நூலாக "உயிர்ப்புகள்" என்ற நூல் வெளிவந்த போது, சின்னராஜனின் சிறுகதையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. 1987 இல் முரசொலியில் "தண்ணீர்" என்ற இவரது சிறுகதை பிரசுரமானபோது முரசொலி ஆசிரியர் எஸ்.திருச்செல்வம் அவர்கள் "சின்னராஜன் ஒரு சிறந்த சிறு கதைப் படைப்பாளியாக வருவார் என்ற நம்பிக்கையை இச்சிறுகதை தருகிறது" என என்னிடம் குறிப்பிட்டமை எனக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.*

*ஆனால், அதன் பின்பு சிறுகதை எழுதுவதில் சின்னராஜன் அதிக சிரத்தை காட்டவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் இத் தொகுப்பிலுள்ள மூன்று சிறுகதைகள் மாத்திரமே 1986 இலும் 1987 லும் எழுதப்பட்டவை. ஏனைய 11 சிறுகதைகளும் 2010 ஆம்ஆண்டின் பின்பு எழுதப்பட்டவை ஆகும். ஈழத்தில் நிலவிய யுத்த அனர்த்த சூழல் இந்த மௌனத்திற்குக் காரணமாகி இருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.*

*இச்சிறுகதைத் தொகுப்புக்கு "தண்ணீர்" என்ற பெயரையே*

ஆசிரியர் சூட்டியுள்ளார். "தண்ணீர்" என்ற பெயரில் 1987 இல் வெளியான சிறுகதை இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. தண்ணீர் என்ற இப்பெயர் எழுத்தாளர் கே.டானியல் அவர்களின் "தண்ணீர்" என்ற நாவலை நினைவுபடுத்துவது. இரண்டின் கருப்பொருள்களும் ஒன்றே. ஆனால் இரண்டுக்குமிடையே கதை நிகழ் களங்களில் கால வேறுபாடு உண்டு; அணுகுமுறையிலும் வேறுபாடு உண்டு. இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகள் ஒவ்வொன்றையும் பகுப்பாய்வு செய்வது இக்குறிப்பின் நோக்கமன்று. ஆனால் இக்கதைகளின் பொதுவான பண்புகள் சிலவற்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். இச்சிறுகதைகள் பலவும் எமது சமூகத்தின் நலிவுகளையும் சமூகத்தில் நிலவும் கொடுமைகளையும் கண்டு தார்மீகக் கோபம் கொள்ளும் சமூகப் பிரக்ஞையுள்ள ஒருவரின் குரலையே ஒலிக்கின்றன. சாதித் தடிப்பில் தொங்கிக் கொண்டிருக்கும் வட்ட விதானை பூரணம் பிள்ளை, வண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றி பெற்ற ஆவரங்கால் கோபாலனுக்குப் போட வேண்டிய மாலையை, அவன் எளிய சாதிக்குப் போடுவது அவமானம் என்று கருதி, கோபாலனின் மாட்டுக்குப் போடும் விதானையார், ஒரே சாதிக்குள்ளேயே, குலப் பிரிவு சொல்லி ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்திருக்கும் கூட்டத்தினரின் பிரதிநிதியான தங்கா, கோயில் திருவிழாவில் மழை வந்த போது கோபுர மண்டபத்தில் அமர்வதற்குக் கூட ஒரு பிரிவினரை அனுமதிக்க மறுக்கும் கௌித்தி மீசைக்காரன், அந்தி யேட்டி செய்யும் ஐயர்மார் அசல் பிராமணரான தம்மை விடக் குறைந்தவர்களை குருமாருள்ளும் பேதம் காட்டும் கோயில் ஐயர் என பல்வேறு கொடூர மாந்தர்களையும் பாத்திரங்களாகச் சித்திரித்து, இந்தக் கொடுமைகளுக்கெதிராக கிளர்ந்தெழும் மாந்தரையும் சித்திரித்து, தமது கதைகளில் சின்னராஜன் உலவ விடுகிறார். வரலாற்று நாயகர்களை இரு சிறுகதைகளில் பதிவு செய்து வரலாற்று நிகழ்வுகளில் தமக்குள்ள ஈடுபாட்டையும் இவர் வெளிப் படுத்துகிறார்.

சின்னராஜன் அவர்கள் தமது முதலாவது கவிதைத் தொகுதியை வெளியீடு செய்தபோது நட்பின் காரணமாக அந்நூலுக்கான அணிந்துரையை என்னிடமே கேட்டு எழுதிப் பெற்றுக் கொண்டார். இப்போது தமது முதலாவது சிறுகதைத் தொகுதிக்கும் அணிந்துரையை என்னிடமே கேட்டிருப்பது எமது நட்பின் ஓர் அடையாளமே. சமூகப் பிரக்ஞையும், பல் துறை ஈடுபாடும் கொண்ட சின்னராஜன் இன்னும் பல நூல்களைத் தர வேண்டும். அதற்கு இவருக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த ஆரோக்கியத்தையும் தர வேண்டுமென இறை ஆசியை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

## மிஷாந்தி செல்வராஜாவின்

# "மூன்றாம் முத்தம்"

"கதை சொல்லும் மரபு" மனித வாழ்வியலின் பிரதான அம்சமாக நீண்ட காலமாகவே இருந்துவந்துள்ளது. வாய்மொழி இலக்கியங்களாக இருந்து வந்துள்ள இக்கதைகள் எழுத்தில் பதிப்பிக் கப்படத் தொடங்கியதிலிருந்து வெவ்வேறு நாட்டுப் புராதன கதை களைப் பல்வேறு நாட்டினரும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. எனினும், இக்கதை சொல்லும் செயற்பாட்டில் "புனைவு" இடம்பெறத் தொடங்கியபோது, நவீன இலக்கிய வடிவங்களாக, புனைவை முதன்மைப்படுத்திய "சிறுகதை", "நாவல்" என்பன மேலை நாட்டிலிருந்து இறக்குமதியாகி, தமிழ் இலக்கிய மரபிலும் இடம் பிடித்துக்கொண்டன. சிறுகதை, நாவல் என்பவற்றுக்குத் தனித் தனியே சில இலக்கணங்கள் உண்டு. சிறுகதை என்பது சிறுகச் சொல்லி உயர்பட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதான உரைப்படைப்பு என்றும் பெரும் பாலும் ஒரு மையக்கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தினை விபரிக்கும் இலக்கிய வகை என்றும் குறிப்பிடுவர். ஒரு சம்பவத்தின் அடியாகத் தோன்றும் உணர்வு நிலையையோ அல்லது குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் மனோநிலை தொடர்பான அதன் இயக்கத்தையோ இலக்கிய உணர்வுடன் கலாபூர்வமாகச் சித்திரிப்பதற்கேற்ற வடிவமே சிறுகதை என்றும் இத்தகைய உணர்ச்சியை அல்லது மனோ நிலையை வார்த்தைகளால் சுட்டிக்காட்டாது, கதையைப் படிக்கும் வாசகனின் மனதில் அவன் அறியாமலே அவ்வுணர்வு நிலை தோன்றும்படி செய்தல் சிறந்த சிறுகதையின் பண்பு என்றும் கூறுவர். சிறுகதை ஒன்றில் ஒருமை விளைவை ஏற்படுத்துவதோடு, அதன் முடிப்பிலுள்ள திருப்பத்திலும் சிறுகதை ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, காவிய மரபிலிருந்தே நாவல் உருவானது என்றும், காவிய இலக்கணத்தில் பெரிதும் வலியுறுத்தப்படுவது

தொகுப்புத்தன்மை என்றும் கூறுவர். மேலும் வாழ்வனுபவங்களைத் தொகுத்து வகைப்படுத்தி வாழ்வின் முழுமையைச் சித்திரிக்க வேண்டிய ஓர் இலக்கிய வடிவமே நாவல் ஆகும். எனவே, நாவலின் நகர்வானது வாழ்வின் அலகுகளை, வலை போல, பல்வேறு திசை களிலும் பின்னிப் பின்னி விரிவடையச் செய்வதாக இருக்கவேண்டும். இதனாலே தான் நாவலைக் காடு ஒன்றுக்கு ஒப்பிடுவர். “பெரும் காடு போலத் தழைத்து ஈரமுள்ள நிலமெங்கும் பரவி நிறைந்திருப்பது“ ஒரு சிறந்த நாவலின் இலக்கணமாகக் கொள்ளப்படும்.

செல்வி மிஷாந்தி செல்வராஜாவின் முதலாம் நாவலான “மூன்றாவது முத்தம்” என்ற இந்த நாவல், பெரியதொரு நாவலாக விரித்தெழுதப்படக் கூடிய கதை அம்சத்தைக் கொண்டிருக்கின்றது. நாவலின் கூறுகளாகக் கொள்ளப்படும் கதைக்கரு, பாத்திரப் படைப்பு, பின்னணி, மொழிநடை, நோக்குநிலை என்பன கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. யுத்த அனர்த்தம் தோற்றுவித்த வாழ்வின் அவலநிலையில் அடிபட்டுப்போன சமூகத்தின் பதச்சோறாக “வள்ளியம்மை” சித்திரிக்கப்படுகிறாள். வள்ளியம்மையின் மகளான வித்தியா நெஞ்சில் பல ஏக்கங்களைச் சுமந்து கொண்டிருப்பவள், கல்வியில் பெரிதும் அக்கறை கொண்டிருப்பவள். எதிர்பாராதவித மாக காணமற்போன வித்தியாவின் தந்தையும் அண்ணனும் இவர் களுடன் இணைந்து கொள்கின்றனர். பந்த பாசங்களில் திளைத்து, வித்தியாவின் குடும்பத்தினர் மகிழ்கின்றனர்.

திடீர் திருப்பங்களைக் கொண்டிருக்கும் இக்கதை, யுத்த அனர்த்தத்தினால் சிதறுண்டு வாழ்ந்துகொண்டிருக்கும் பலர் இது போன்ற திருப்பங்களினூடாக, தமது உறவுகளைச் சந்திப்போம் என்ற எதிர்பார்ப்புடனேயே வாழ்ந்து வருகிறார்கள் என்பதற்கான சாட்சிய மாகவே விளங்குகின்றது. யுத்த அனர்த்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டு, அவலங்களுக்குள்ளாகி, வாழ்வில் பெருந்துன்பங்களை அனுபவித்து வருவோரும் கூட, நம்பிக்கையுடன் எதிர்கால வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் இக்கதை அமைகிறது யுத்த அனர்த்தத்தில் கணவரை இழந்த மறுமண வாழ்வு அவசியமானது; நியாயமானது என்பதையும் இக்கதை சுட்டிக்காட்டத்தவறவில்லை.

இந்நாவலின் ஆசிரியை மிஷாந்தி வளர்ந்துவரும் ஓர் எழுத் தாளர். இவரின் ஏக்கங்களும் அபிலாஷைகளும் நியாயமானவை. “பந்த பாசங்கள் எப்போதும் அழிவதில்லை” என்று உறுதியாகக் கூறும் மிஷாந்தி, பாரதி கூறுவதுபோல “நினைவு நல்லது வேண்டும்” என இந்நாவலினூடாக எடுத்துக் கூறுகிறார்.

## கந்தர்மடம் அ. அஜந்தனின்

# "மனமெனும் கூடு"

கந்தர்மடம் அ.அஜந்தன் அவர்களின் முதலாவது கவிதைத் தொகுப்பான "மனமெனும் கூடு" எனும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அஜந்தன் அவர்கள் முல்லைத்தீவில் Save the Children நிறுவனத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலராகப் பணியாற்றுபவர். தமது நிறுவனத்தின் பணிகளை விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் நிறைவேற்றும் பொருட்டு, தாம் சேவையாற்றும் துறைசார்ந்து உளவியல், உளவளத்துணை (Coun selling) போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் பெற்றவர். இத்துறை சார்ந்து உளவியல், உளவளத்துணை ஆகியவற்றின் அடிப்படை யிலான கட்டுரைகளை சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் அண்மைக் காலங்களில் எழுதிவருகிறார். இக்கட்டுரைகளினூடாக வாசகர்களோடு நேரடியாகப் பேசுவதோடு, வாழ்க்கையில் அவர்கள் பற்றுக் கொள்ளவும் உத்வேகத்துடன் செயற்படவும் தூண்டி வருகிறார்.

"மனமெனும் கூடு" எனும் இக்கவிதைத்தொகுப்பு நூலில், கடந்த மூன்று வருடங்களில் பத்திரிகைகளில் அஜந்தன் எழுதிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. "முதுமை" தொடக்கம் "கைம் பெண்" ஈறாக எண்பத்திரண்டு தலைப்புகளிலான கவிதைகள் எமது சமூகத்தின் வாழ்வியலை, அதன் நலிவுகளை, அண்மைக் காலங்களில் வாழ்வில் சுமந்த வலிகளை எடுத்துக் காட்டுகின்றன. இந்நூலின் பெயரில் அமைந்த "மனமெனும் கூடு" எனும் தலைப்பிலான கவிதையொன்றும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது. ஆனால் எமது வாழ்வின் அவல நிலையினால் எமது "மனம் எனும் கூடு" கொள்ளும் அலைப்புகளையும் ஏக்கங்களையும் தொகுப்பிலுள்ள கவிதைகள் பலவற்றிலும் அஜந்தன் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், எமது

வாழ்க்கையின் முரண் நிலைகளை தமது கவிதைகளில் எடுத்துக் கூறி, அவற்றின் தீர்வுக்கான எண்ண அலைகளை எம்மிடம் எழுப்பிச் செல்வதிலும் அவர் வல்லவராய் உள்ளார். கவிதைகள் எளிமை யானவையாக, அவரின் வாசகர்களை இலகுவாகச் சென்றடையக் கூடியனவாக உள்ளன.

நாம் யாருக்காக எழுதுகிறோம் என்பது ஆக்க இலக்கியத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அஜந்தன் துடிப்பான ஓர் இளைஞராக இருப்பதனாலும் தன்னார்வத்துடன் சமூக சேவைப்பணிகளில் ஈடுபடுவதனாலும் அவர் தனது கவிதை களுக்கான வாசகர்களைத் தீர்மானித்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சமூக சேவைப் பணிகளில் ஈடுபடும் ஒருவர் படைப்பிலக்கியத்துறையில் இணைந்து கொள்வது வரவேற்கக் கூடியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்பள்ளி வேலைத் திட்டம் ஒன்றில் இவரைச் சந்திக்க நேர்ந்தது. அன்று முதல், பல்வேறு சந்தர்ப்பங்களில் இவருடன் இணைந்து பணியாற்றவும் இவரின் திறமைகளை மதிப்பிடவும் வாய்ப்புக்கிடைத்தது. அஜந்தனின் சமூக சேவைப் பணியோடு, கவிதை, கட்டுரை எழுதும் பணியும் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கலை இலக்கியங்கள் வெவ்வேறு வடிவங்களை எடுக்க வல்லவை, அவற்றுள் கவிதையின் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றினும் பலரை இன்று கவிதையாக்கங்களில் ஈடுபடச் செய்துள்ள போதிலும் கவிதையின் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைதல் வேண்டும். சொல்லாட்சியும் படிவவார்ப்பும் கவிதைக்கு வீரியம் சேர்ப்பன. கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக முன் அனுபவ அறிகைத் தொகுதிகளைப் பயன்படுத்தலும் பயிற்சிக்குரியது. அஜந்தன் அவர்கள் பணியாற்றும் துறைசார்ந்து, உலக அனுபவங்களை ஆழ, அகலப்படுத்திக் கொள்வதற்கும் அவரின் அறிகை அமைப்பை (Cognitive Stucture) விரிவுபடுத்திக் கொள்வதற்கும் நல்ல சந்தர்ப்பம் உள்ளது. நல்ல இலக்கியப் பரிச்சயத்தோடு கவிதை தரும் அனுபவ தரிசனத்தைப்பெறும் வாசகன் ஒருவன் தனது வாசக நிலை அனுபவத்தை விரிவுபடுத்திக் கொள்வதோடு, உலகு பற்றிய புரிதலிலும் விழிப்புணர்வு பெறுகிறான். எனவே, அஜந்தன் இவற்றைக் கவனத்திற் கொள்ளும்போது அஜந்தனிடமிருந்து இன்னும் சிறந்த படைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த நம்பிக்கையை இவரின் முதலாவது கவிதைத் தொகுப்பான "மனமெனும் கூடு" தருகிறது.

## தெணியானின்

# “பனையின் நிழல்”

*மரணங்கள் மலிந்த பூமி இது. உயிர் இழப்புக்களின் போது ஏற்படும் துயரின் அழுத்தங்களிலிருந்து விடுபடும் நோக்கில் பெருங்குரலெடுத்துப் பிரலாபித்து, ஈற்றில் மனித வாழ்வின் நிலையாமையை எடுத்தியம்பி “தேற்றம்” கூறுதல் காலங்காலமாய் இருந்துவந்த மரபு. இம்மரபு, மனிதவாழ்வை ஆற்றுப்படுத்திவந்த ஒரு வழிமுறையும்கூட. இம்மரபுத் தடத்தில் “கல்வெட்டு” வெளியீடு உறவுகளின் புலம்பல்களின் தொகுப்பாய் அமைந்தது.*

*காலப்போக்கில், “கல்வெட்டு” வெளியீடு “நினைவு மலர்” வெளியீடாகி, பாராயணம் செய்யப்படவேண்டிய திருமுறைகளின் தொகுப்பாகவும் மாற்றம் கண்டது. இன்று நினைவு மலர் வெளியீட்டினூடாக, பயனுள்ள அறிவியற்திரட்டைத் தொகுத்து வழங்கும் போக்கும் காணப்படுகின்றது. இம்மரபின் வளர்ச்சிப் போக்கில், தனது மகளின் நினைவு வெளியீடாக, ஈழத்துக் கவிஞர்களின் தேர்ந்தெடுத்த கவிதைகளின் தொகுப்பாக அமைந்த “ஈழத்துக் கவிமலர்கள்” என்ற நூலை இரசிகமணி கனகசெந்திநாதன் அன்று வழங்கினார். இம்மரபு இன்றும் தொடர்வது, ஆக்க இலக்கியங்கள் பல இவ் வெளியீடுகளினூடாக எமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மரபின் தொடர்ச்சியில், இரசிகமணியைத் தொடர்ந்து வ.அ.இராசரத்தினம், என்.சண்முகலிங்கன், ஸ்ரீகணேசன், வளநாடன்... என நீளும் பெயர் வரிசை நினைவுக்கு வருகின்றது. இவர்கள் யாவரும் இலக்கியகாரர்.*

*இதேவேளை, தெணியானின் “பனையின் நிழல்” எனும் இந்நாவல் வெளியீடு சற்று வித்தியாசமானது. அண்மையில் அகாலமரணமெய்திய தனது மகன் மயூரனின் நினைவாக இந்நூலை*

வெளியிடும் திரு.க.மகேந்திரராஜா ஓர் இலக்கியகாரன் அல்லர்; 1984இல் "ஈழமுரசு" பத்திரிகையில் தொடராக வெளிவந்து நூலுருவாக்கம்பெறக் காத்திருந்த இக்குறுநாவலை அழகுற அச்சிட்டு வெளியிட முன்வந்திருக்கிறார். இவர் போன்ற இலக்கிய ஆர்வலர் களுக்கு இலக்கிய உலகு கடமைப் பட்டிருக்கின்றது. அதேவேளை, இந்நூல் அமைப்பின் நேர்த்தி எவ்வாறிருக்குமென கிலேசமுறாது தனது "படைப்பு" ஒன்றை நூலாக்கம் செய்ய அநுமதி தந்த கலாபூஷணம், எழுத்தாளர் தெணியானுக்கும் அட்டைப்படம் வரைந்த கலாபூஷணம், ஓவியர் ரமணிக்கும் நன்றி சொல்லவேண்டும்.

குறுக்கு வழியிலேனும் பொருளீட்டுதலும் மனம்போன போக்கில் செலவு செய்தலும் வாழ்க்கைக் குறிக்கோளாகிவிட்ட இன்றைய சமுதாயத்தில், பொருளீட்டல் நாடி வெளிநாடு செல்லும் இன்றைய வாழ்க்கைப் போக்கு விளைவிக்கக்கூடிய வாழ்வின் சிதைவைக் கருப்பொருளாகக் கொண்டு இந்நாவலினூடாக ஓர் "அபாய எச்சரிக்கை"யை இன்றைய சமுதாயத்துக்குத் தெணியான் விடுக்கின்றார். தெணியான், நாடறிந்த எழுத்தாளர்; எமது "முது சொமாக" பேணப்படவேண்டியவர். தேர்ந்தெடுத்த சொற்களினால், வரம்பு மீறாமல், விரசமின்றி இந்நாவலை வளர்த்துச் சென்றிருக் கின்றார். இந்நாவலும் நாவல் வெளியீடும் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை.

# சின்னத்தம்பி இன்பரூபனின்

# "நாடகம் – நாடகக்கலைஞர்கள்"

கலை என்பதன் முதல் வரைவிலக்கணமே அது மனிதனால் படைக்கப்படுவது என்பது தான் என்பர். மனித வாழ்க்கையிலிருந்து கலை பிறக்கிறது. கலை வடிவங்களூடாக மனிதன் தனது அனுபவ உணர்வுகளை வெளிப்படுத்துகின்றான். மனிதன் தனித்து வாழ முடியாத சமூகப் பிராணி என்பதனாலும், தனது தேவைகள் உணர்வு கள், அபிலாஷைகள் என்பவற்றை சமூகத்தில் ஓர் அங்கத்தவன் என்ற நிலையிலேயே அவனால் எய்த முடியும் என்பதனாலும், தான் கண்டு, கேட்டு அனுபவித்தவற்றை தனது சமுதாயத்துடன் பகிர்ந்து கொள்ள விழைகின்ற வேளையிலேயே கலைகள் உருவாக்கம் பெறுகின்றன.

கலை வடிவங்களுள் முதன்மை பெறுவது நாடகம் ஆகும். நாடகத்தை அளிக்கை செய்வோருக்கும் பார்வையாளருக்குமிடையே யான ஊடாட்டம் "ஒத்துணர்வு" (Empathy) என்பதனால் வெளிப் படுத்தப்படும். இந்த ஒத்துணர்வே நாடகத்தின் வாழ்க்கைப் பயன் பாடாகின்றது. இந்த ஒத்துணர்வினால் மனிதனின் மூடப்பட்ட மனச்சாட்சி விழித்துக் கொள்கின்றது. இது மனிதனை மீண்டும் மீண்டும் மனிதனாக்குகின்றது. மனிதனை உற்பவிக்கின்றது.

நாடகமானது தனிமனித உள்முரண்பாடுகளையும் தனி மனிதனுக்கும் தனிமனிதனுக்குமிடையே உள்ள முரண்பாடுகளையும் தனிமனிதனுக்கும் சமூகத்துக்குமிடையே உள்ள முரண்பாடுகளையும் கலைப்பொருள் ஆக்குகின்றது. இம்முரண்நிலையைத் தூண்டுவதும் அதன் உச்சநிலையில் அதற்குத் தீர்வு காண்பதும் நாடகத்தின் பணிகளாகின்றன.

இப்பணிகளில் நடிகனின் வகிபாகம் முக்கியமானது. நாடக ஆசிரியரால் எழுதப்பட்ட எழுத்துருவுக்கான வியாக்கியானம் நடிகர்

வழியாகவே மக்களை (பார்வையாளர்களை) சென்றடைகின்றது. எனவே நடிப்பு என்பது நடிகனுக்கு மாலைநேரப் பொழுதுபோக்காக அமைவதன்று. அது புகழ் நாட்டுவதற்கான குறுக்குவழியுமன்று. அது ஆன்மாவை மேடையில் பிழிந்து பார்ப்பது, தன்னையே அர்ப் பணிப்பது, கடுமையான உடல், மனப்பயிற்சிகளின் பின் கைவரக் கூடியது, ஒரு யோகப் பயிற்சிக்குச் சமமானது.

நாடகம் பற்றிய இப்பின்புலத்தில், சமரபாகு கலை இலக்கிய மன்றம் எடுக்கும் "நாடகக் கலைஞர் கௌரவிப்பு விழா" நோக்கப் படுவது பொருளுடையது. இவ்விழாவின் சிறப்பம்சமாக, வாழும் நாடகக் கலைஞர்களதும் வாழ்ந்து மறைந்த நாடகக் கலைஞர்களதும் கலைச் சேவைகளைப் பாராட்டி இவ்விழாவில் வெளியிடப்படவுள்ள நாடகம் "நாடகக் கலைஞர்கள்" என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது.

நாடகக்கலையின் முக்கிய அம்சமே அது அறிக்கை செய்யப் பட்டதும் மறைந்து விடுவது தான். இதனால் நடிகர்கள் குறித்த வரலாற்றுப் பதிவு அவசியமானதே. இந்நடிகர்களின் கற்றல்களையும் சிறப்புக்களையும் நேரடியாகத் தரிசனம் பெற முடியாதவிடத்து பிறர்மூலமே அவற்றை அறிந்து கொள்ள முடியும். ஆனால் இந்நடிகர் களின் நடிப்பு முறைமையும் ஆற்றுகையும் கையளிக்கப்படக்கூடியன. இக்கையளிப்பு தொடர்ச்சியாக தலைமுறை, தலைமுறையாக இடம்பெற்று வந்திருக்குமெனின், அக்கலைஞர்கள் என்றும் வாழ்வர். அவர்களின் கலைச்சேவையும் என்றும் வாழும். இன்றைய வாழ்வியற் செல்நெறியும் வாழ்க்கையும் குறிக்கோளும் மாறிப்போனதனால், நாடகக் கலையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது கடினமான பணி யாகவே தோன்றும். ஆனால், இன்று சமூகங்களில் அதிகரித்துவரும் சிக்கல்களும் முரண்பாடுகளும் தனியாள் நடத்தைப் போக்குகளும், மீண்டும் சமூகநிலை ஒருமைப்பாட்டை நிலைநாட்ட வேண்டி எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. குறிப்பாக, கிராமங்களில் நகரமய மாக்கலின் செல்வாக்கினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவு களைத் தவிர்த்துக் கொள்வதற்கு, நாடகம், கும்மி, கரகாட்டம் முதலான கிராமியக் கலைகளின் பயில்வும் பயிற்சியும். இன்று அவசிய மாகின்றன. கிராமிய, சனசமூக மன்றங்கள் இவற்றைச் செயற்படுத்த முடியும். சமரபாகு கலை இலக்கிய மன்றும் இப்பணியை முன் னெடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். இம்மன்றம் இன்று எடுக்கும் பெருவிழா அதற்கான கால்கோள் விழாவாக அமையட்டும். வாழ்த்துக்கள்!

## ஏ.எஸ்.சற்குணராஜாவின்

# "சித்திரக்கலை"

மதிப்பிற்குரிய திரு.ஏ.எஸ்.சற்குணராஜா அவர்கள் எழுதிய புதிய சித்திரக்கலை என்னும் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். புதிய சித்திரக்கலை எனும் இந்நூல் இலங்கைப் பாடசாலைகளில் தரம் 9, 10, 11 ஆகிய வகுப்புக்களின் சித்திர பாடத்திற்காக புதிய பாடத்திட்டத்தில் அமைந்துள்ளது. பிரதான பாடங்களுக்கும் அப்பால் விருப்பத்தெரிவுக்குமுரிய தொகுதிப்பாடங்களும் உள்ளன. மாணவர்களின் அழகுணர்ச்சியை யும், ரசனையையும், வளர்த்தெடுக்கவும் அவர்களின் படைப் பாற்றலையும் விருத்தி செய்யவும், சங்கீதம், நடனம், சித்திரம், ஆகிய கவின்கலைப்பாடங்கள் ஒரு தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றிலிருந்து ஒரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும். எனினும் சித்திர பாடத்தை தெரிவு செய்வதில் மாணவர்கள் பொதுவாகவே பின் நிற்கிறார்கள். இதற்கான காரணம் கண்டறியப்படவேண்டும் என கல்வி அமர்வுகளில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஏனைய பாடங்களைப் போலன்றி சித்திர பாடத்திற்குத் தேவையான பாடநூல்களும் துணைநூல்களும் போதுமான அளவில் காணப்படாமையே இதற்கு ஒரு முக்கிய காரணமாக இன்று முன் வைக்கப்படுகிறது. அது உண்மைதான். இன்றைய நாளில் சித்திர பாடச் சோதனையானது சித்திரக்கலை தொடர்பான விசேட அறிவைப் பரீட்சிக்கும் வினாக்களையும் செயன்முறை தொடர்பான பரீட்சையையும் உள்ளடக்குகின்றது. சித்திர பாடச் சோதனையில் செய்முறைப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர் களும் கூட சித்திரப்பாட அறிவை சோதிக்கும் வினாத்தாளில் குறைந்த புள்ளிகளையே பெறுகின்றனர். இதனால் சித்திர பாடத்தில் உயர்

சித்தி பெறமுடியாதென்ற அச்சம் அப்பாடத்தைத் தவிர்த்துக் கொள்ள மாணவர்களைத் தூண்டுகிறது. இந்நூலாசிரியர் இக்குறைப்பாட்டை நன்குணர்ந்தவர். க.பொ.த சாதாரண தரத்திலும் உயர்தரத்திலும் பயிலும் மாணவர்களுக்கான சித்திர பாடநூல்கள் முழுமையாக இல்லை என்பதை அவர் நன்கறிவார்.

சித்திர பாட ஆசிரியராக இலங்கையின் பல்வேறு பாகங் களிலும் சேவையாற்றக் கிடைத்த வாய்ப்பும், இவரின் தேடல் முயற்சிகளும், அனுபவங்களும் இந்நூலாக்கத்தின் உந்துசக்தியா யிருந்துள்ளன.

பின்பு சித்திர பாட ஆலோசகராக, உதவிக் கல்விப் பணிப் பாளராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப் பாளராக பதவிநிலைகளில் உயர்ந்து நிற்கும் இவர் சித்திர பாடத்தை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டவராவார். இவர் ஏற்கனவே எழுதி வெளியிட்டுள்ள புதிய சித்திரக்கலை, இந்தியக்கலை, இலங்கைக் கலை ஆகிய நூல்கள் கல்வி உலகில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இலங்கைக்கலை என்ற நூல் புதிய பாடத்திட்டத்திற்கமைவாக பல்வேறு விடய தானங்களையும், பல்வேறு விளக்கப்படங்களையும் உள்ளடக்கியிருந்தது. இது போலவே இப்போது வெளிவரும் புதிய சித்திரக்கலை என்ற இந் நூலும் பாட உள்ளடக்கத்தை முழுமையாகக் கொண்டிருப்பதோடு பல விளக்கப் படங்கள் மூலம் சித்திரக் கலையைத் தெளிவுபடுத்து கின்றது.

இற்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன் அறிவோர் கூடல் நிகழ்வில் ஏற்பட்ட சந்திப்பின் தொடர்ச்சியாக இன்றுவரை நட்பைப் பேணிவரும் இந்நூலாசிரியர் அந்நட்பின் காரணமாகவே இந்நூலுக்கான அணிந்துரையை என்னிடம் பெற்றுள்ளார். இந்நூலாசிரியரிடமிருந்து இன்னும் பல நூல்கள் வெளிவரவேண்டும் என்ற விருப்பத்தை இங்கு பதிவு செய்வதோடு இறை ஆசி துணை நிற்கவேண்டும் என்றும் இறைஞ்சுகிறேன்.

# தாட்சாயணியின்

# “ராணியம்மா”

தாட்சாயணி எனும் எழுத்தாளினிக்கு அறிமுகம் அவசிய மில்லை. இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர் இவர். “ராணியம்மா” எனும் இச்சிறுகதைத்தொகுதி இவரின் ஆறாவது சிறுகதை நூல். ஐந்தாவது சிறுகதை நூலுக்கு எழுதும் முன்னுரை எப்படி அமைய வேண்டும் என்று சிந்தித்தபோது எழுத்தாளர் பற்றிய விபரணங்களையும் மதிப்பீடுகளையும் விடுத்து, இத்தொகுப்பிலுள்ள சிறுகதைகளுக்கான சிறு குறிப்புகளை எழுதலாமே என்று தோன்றியது.

பொதுவாகவே, தாட்சாயணியின் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகளும் பெண்மையின் உணர்வுகளும் மேலோங்கி வெளிப்படும். இந்நூலிலும் கூட அது சாத்தியமாகி யுள்ளது. உணர்வுச் சுழிப்புகளின் விபரிப்பினூடாக மனித மனம் படும் துயரங்களையும் பதைப்புகளையும் இச்சிறுகதைகளில் தாட்சாயணி படம் பிடித்துக் காட்டியுள்ளார். போரும் ஆழிப் பேரலையும் மனித வாழ்வில் ஏற்படுத்திய அவலங்களும் காதலின் பிரிவு தரும் வேதனையும் பெண்மையின் ஏக்கமும் இச்சிறுகதைகளில் கருப் பொருள்களாகியுள்ளன. இத்தொகுப்பிலுள்ள பதினாறு சிறுகதை களுமே “இன்றைய மனித வாழ்வின் அவலம்” என்ற ஒரு புள்ளியில் ஒன்றையொன்று சந்திப்பனவாயும் ஒன்றோடொன்று ஒத்தோடுவன வாயும் இசைந்திருப்பது இச்சிறுகதைத் தொகுப்பின் சிறப்பம்சமாகும்.

இத்தொகுப்பில் போருக்குப் பின்பான வலி சுமந்தவாழ்வின் அவலங்களை சிறு காட்சித் துண்டங்களாக “ராணியம்மா”, “மழை விட்டும் தூவானம்”, “சூன்யம்”, “உனக்கு மட்டும் தானா” எனும் தலைப்புகளிலான நான்கு சிறுகதைகளும் சித்திரிக்கின்றன.

இச்சிறுகதைத் தொகுதிக்கான பெயரைக் கொண்ட ராணியம்மா எனும் சிறுகதை யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட இடப்பெயர்வு களும் முகாம் வாழ்க்கையும் வாழ்வின் திசையையே மாற்றியிருப் பதையும் தனது அப்பாவின் இரண்டாந்தாரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெண் தனது சிற்றன்னையான ராணியம்மா வைத் தனியே விட்டு விட்டுத் தாயிடம் வரமுடியாது படும் மன உளைச்சலையும் அழகாக எடுத்தியம்புகிறது.

போருக்குப்பின்பான மற்றுமொரு வாழ்வுக் கோலத்தை "மழை விட்டும் தூவானம்..." எனும் சிறுகதை சித்திரிக்கிறது. போரில் பெற்றோரை இழந்த இரு சிறுவர்கள் அம்மம்மாவுடன் ஒருவரும் அப்பப்பாவுடன் மற்றவரும் என வாழ வேண்டிய நிர்ப் பந்தத்தையும் ஒன்றாக வாழ்ந்து குதூகலிக்க வேண்டிய அண்ணனும் தம்பியும் ஒன்று சேரமுடியாத அவலத்தையும் இச்சிறுகதை முன்வைக்கிறது.

போரின் போது வீடுகளைத் துறந்து இடம்விட்டு இடம் பெயர்ந்து சென்றவர்கள் ஊருக்குத் திரும்பி வரலாம் என்ற நிலையில் மீண்டும் தமது வீடுகளுக்கு வந்து பயத்துடனும் பதைப்புடனும் வாழும் காட்சியை "சூன்யம்" எனும் கதையில் தாட்சாயணி சித்திர மாக்கியுள்ளார். வீடும் சூழலும் சோபை இழந்து சூன்யமாக இருப்பதை அவரின் கலாபூர்வமான வார்த்தைகளில் கண்ணில் ஈரக்கசிவுடன் தரிசிக்க முடிகிறது.

போருக்குப் பின்னர் வறுமையில் வாழும் குடும்பமொன்றின் அவலநிலையைத் தரிசனம் பெற்று, "தனது வாழ்வு பரவாயில்லை" என்று ஒருவன் எண்ணும் காட்சியைப் படம்பிடிப்பது "உனக்கு மட்டும் தானா?" எனும் சிறுகதை.

ஆழிப்பேரலையில் உயிர்களைப் பறிகொடுத்த வலியை எடுத்துரைப்பது "பலி" எனும் சிறுகதை. சுனாமி அடித்துச் சென்ற தனது தங்கையை நினைத்து ஏங்கும் அண்ணனின் துயரத்தை, வீட்டில் அப்பிள்ளைகள் முன்பு பிணங்கிக்கொண்ட காட்சி யொன்றின் பின்னணியில் இக்கதை சித்திரிக்கிறது.

காதலின் பின்னணியில் மனிதர்கள் படும் துயரத்தின் அவலத்தை தவிப்பு, காத்திருப்பு, கருகல், வலி, தொலைந்து போனவை ஆகிய சிறுகதைகள் பதிவுகளாக்கியுள்ளன. காதலனைப் பிரிந்து வாழும் ஒரு பெண், தான் பணிபுரியும் அலுவலகத்தில் தனது காதலனின் தொலைபேசி அழைப்புக்காக காத்திருக்கும் தவிப்பை "தவிப்பு" எனும் சிறுகதை சித்திரிக்கிறது. எல்லோருக்கும் தொலை பேசி அழைப்பு வரும்போது தனக்கு மட்டும் ஏன் வரவில்லை என்று

ஏங்கும் அப்பெண்ணின் ஏம்பலிப்பு இக்கதையில் நன்கு வெளிப் படுத்தப்படுகிறது.

வெளிநாட்டிலுள்ள தனது மணாளனைச் சென்றடைவதற் காகக் காத்திருக்கும் ஒரு பெண்ணின் மன உணர்வுகளைச் சித்திரிக்கும் சிறுகதை "காத்திருப்பு". வெளிநாட்டிலிருந்து வந்து திருமணம் முடித்து ஐந்து நாட்கள் காதலுடன் ஒன்றாகக் கூடித்திரிந்த கணவன் "எப்போது தன்னைக் கூப்பிடுவார் என்று காத்திருக்கும் அவலம் இக்கதையில் நன்கு வெளிப்படுகின்றது.

"கருகல்" எனும் சிறுகதை ஒரு பெண்ணின் எழுத்துகளினால் ஈர்க்கப்பட்டு அவளைக் காதலிக்கத் தொடங்கிய ஒருவர் அப் பெண்ணின் எழுத்தின் வளர்ச்சியில் பொறாமை கொண்டு, முரண் பட்டு, அவளின் காதலைத் துறந்து வேறொருத்தியை மணம் முடித்த பின்பு வாழும் வாழ்வின் அந்திம காலத்தைச் சித்திரிக்கிறது. உயிர் பிரிய இருக்கும் வேளையிலும் உணர்வு மங்காத நிலையில், முன்னையவளின் காதல் தன்னுள் "கருகலாக" இருப்பதை உணர் வதை இக்கதை படம் பிடித்துக் காட்டுகிறது.

கல்லூரிக்காலத்தில் தன் காதலை உதறித்தள்ளிய ஒருத்தியை நீண்ட காலத்தின் பின்பு சந்தித்த வேளை அவளின் நோயைத் தெரிந்து கொண்ட "டொக்ரர்" ஒருவருக்கு ஏற்படும் வலியை மையப்படுத்து வது "வலி" எனும் சிறுகதை. அப் பெண்ணிடத்து முன்பு காதல் கைகூடாத போது ஏற்பட்ட வலியை விட அப்பெண்ணின் கொடிய நோய் பற்றி அறிய நேர்ந்த போது ஏற்பட்ட வலி அதிகமானது என்ற முத்தாய்ப்புடன் இச்சிறுகதை நிறைவுறுகிறது. மேலும், காதலுக் குரியவனைத் தொலைத்துவிட்ட ஒரு பெண்ணின் அவலத்தை அவளின் உணர்வுச் சுழிப்புகளினூடாக "தொலைந்து போனவை" எனும் சிறுகதை விபரிக்கிறது.

இவை தவிர, வேறு களங்களில் "ஒரு உறவின் வெட்டு முகம்", "பாசி", "அடையாளம்", "திருப்தி" ஆகிய சிறுகதைகள் படைக்கப் பட்டுள்ளன. "ஒரு உறவின் வெட்டுமுகம்" எனும் சிறுகதை வரனுக்காகக் காத்திருக்கும் ஒரு பெண்ணின் அவலத்தை கலி யாணச் சந்தை நிலைவரம், ஆடவர்களின் கபடத்தனம் என்பவற்றின் பின்னணியில் முன்வைக்கிறது. இக்கதையைப் படிக்கும் போது,

"கற்புநிலை என்று சொல்ல வந்தாரிரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்"

என்ற பாரதியின் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

நீண்ட காலத்தின் பின்பு கருவுற்றிருந்த ஒரு பெண்ணின் கரு கலைந்த போது அவளுக்கு ஏற்பட்ட துன்பத்தையும் துயரத்தையும்

சித்திரிக்கும் சிறுகதை "பாசி". ஆற்றொணத் துயருற்றிருந்த வேளை, மீண்டும் மீண்டும் முளைக்கும் பாசியைக் கண்டு, "மீண்டும் கருவுறுவேன் தானே" என்று அப்பெண் தன்னைத் தேற்றிக் கொள்வதுடன் இக் கதை நிறைவுறுகிறது.

"ஒரு நாள் சேவை"யில் அடையாள அட்டை பெறுவதில் உள்ள சிரமங்களையும் அலைக்கழிப்புகளையும் "அடையாளம்" என்ற சிறுகதை எடுத்துரைக்கின்றது. அலுவலகங்களில் நிகழும் "இழுத்தடிப்புகள்" மக்களுக்கு ஏற்படுத்தும் மன உளைச்சல்கள் இக்கதையில் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஓர் இளைய தம்பதியினர் தமது மகனுடன் குதூகலிக்கும் ஒரு நேரப் பொழுதை அழகாகச் சித்திரிக்கிறது. "திருப்தி" எனும் சிறு கதை. இக்கதையைப் படிக்கும் போது, "வாழ்க்கை என்பது சின்னச் சின்னச் சந்தோஷங்கள் தான்" என்று எப்போதோ படித்தது ஞாபகத் திற்கு வந்தது.

தாட்சாயணியின் படைப்புகளில் மொழிநடை அவருக்கு இயல்பாகவே கைவருகிறது. எளிமையான நடையில் இயல்பான உரையாடல்களும் கலாபூர்வமான காட்சி சித்திரிப்புகளும் இவரின் சிறுகதைகளுக்கு மெருகூட்டுகின்றன. இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் அனைத்தும் கணநேரத்தில் பிடிக்கப்படும் படங்களாக (Snap shots) மிளிர்கின்றன. தாட்சாயணியின் எழுத்துலகம் இன்னும் விரிவு பெற்று இலக்கிய உலகுக்கு சிறந்த படைப்புகளைத் தரும் என்ற நம்பிக்கையை இச்சிறுகதைத் தொகுதி மேலும் உறுதிப்படுத்துகிறது. அவரின் எழுத்துப்பணி மென்மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

## கலாநிதி செ.திருநாவுக்கரசுவின்

# "எண்ணங்களும் வண்ணங்களும்"

*கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்கள் தாம் எழுதிய பல்துறைசார் கட்டுரைகளுள் முப்பதைத் தொகுத்து, "எண்ணங்களும் வண்ணங்களும்" என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளியிடு வதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூலுக்கு ; அணிந்துரை எழுத எனக்கு வாய்ப்பளித்த அவருக்கு நன்றி கூறுகின்றேன்.*

*இந்நூல் ஒரு தொகுப்பு நூல். தாம் பல்வேறு சந்தர்ப்பங் களில் எழுதி, பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும், சிறப்பு மலர்களிலும் வெளி வந்த கட்டுரைகளையும் பட்டங்களுக்காகச் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைகளின் சுருங்கிய வடிவங்களையும், இந்நூலுக்கென எழுதிய புதிய கட்டுரைகளையும் உள் ளடக்கியதாக ஆசிரியர் இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். அரசியல், கல்வி,இலக்கியம், சமயம், அழகியல் என பல்வேறு துறைகளைச் சார்ந்தனவாக இக்கட்டுரைகள் அமைந்துள்ளன. முப்பது கட்டுரைகளை உள்ளடக்கியதாக 391 பக்கங்களைக் கொண்டு வெளிவரும் இந்நூல் மாணவர்களுக்கு மாத்திரமன்றி, ஆசிரியர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும், வாசகர்களுக்கும் பயனளிக்க வல்லது.*

*இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளைத் துறைசார்ந்து பகுப்பின், இலங்கை அரசியல் வரலாற்றுக் கட்டுரையாக ஒரு கட்டுரையும், தமிழ் இலக்கியக் கட்டுரைகளாக ஆறுகட்டுரைகளும், சமயம் சார்ந்தவையாக ஐந்து கட்டுரைகளும், கல்வித்துறை சார்ந்தவைகளாக ஐந்து கட்டுரைகளும், தனியார் வரலாற்றுக் குறிப்புக் கட்டுரைகளாக பதின்மூன்று கட்டுரைகளும் உள்ளன எனலாம். இப்பகுப்பு என்னுடையது. இப்பகுப்பின்படி குறிப்பிட்ட ஒரு துறையில் அமைவதாக நான் கருதும் கட்டுரை மற்றொருவரின்*

பார்வையில் இன்னொரு துறைக்குரியதாக அமையலாம். இதுவும் கூட இக்கட்டுரைகளின் சிறப்பையே சுட்டுவதாக அமையும்.

இந்நூலின் முதலாவது கட்டுரையானது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் அமைந்தது. நூற்றி யொரு பக்கங்களைக் கொண்ட நீண்ட கட்டுரை இதுவாகும். தேசிய இனப்பிரச்சினை என்பதற்கான கல்விசார் விளக்கத்தோடு ஆரம்பிக்கும் இக்கட்டுரை, இந்த ஆய்வுப்பொருளோடு சம்பந்தப் பட்ட பல எண்ணக்கருக்களை பல்துறைசார் அறிஞர்களின் கருத்து களினூடாகத் தெளிவாக்குகிறது. இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்றை அறிமுகஞ்செய்து, அதில் இடம்பெற்றுவிட்ட பிழை யான வரலாற்று நம்பிக்கைகளையும் எடுத்துரைத்து, அரசியற் சட்டங் களும் ஒப்பந்தங்களும் எவ்வளவு தூரம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைகளை அணுக முயற்சித்தன என்பதையும் கூறி, தமிழ்த் தேசிய வாதமும் தீவிரவாதமும் முனைப்புப்பெற்றமைக்கான நிலைமைகளையும் இக்கட்டுரை முன்வைக்கின்றது. முதுகலை மாணிப்பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரையின் முதற்பகுதி என்ற வகையிலே பல சான்றாதாரங்களுடன் இக்கட்டுரை அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும். இக்கட்டுரையை இலங்கையர் ஒவ்வொரு வரும் படிக்கவேண்டியது அவசியமாகும்.

அடுத்து, கல்விசார் கட்டுரைகள் என்ற வகுதியுள் அடங்கும் ஐந்து கட்டுரைகளும் அழகியற்கல்வி, விழுமியக்கல்வி, ஆரம்ப பாடசாலைக் கலைத்திட்டம், தமிழ்மொழி கற்றலும் கற்பித்தலும், கல்விசார் பார்வையில் சினிமா ஆகிய பொருள்களில் அமைபவை. இவை பெரும்பாலும் மாணவர்களதும், ஆசிரியர்களதும் அறிவு விருத்தியை நோக்காகக் கொண்டு, கல்லூரிச் சஞ்சிகைளிலும், சிறு ஆய்வுக் கட்டுரைகளாகவும் எழுதப்பட்டவை.

தமிழ் இலக்கியத்துறை என்ற பிரிவினுள் அடங்கும் ஆறு கட்டுரைகளுள் நான்கு கட்டுரைகள் தமிழ்க்கவிதைகள் மீது நூலாசிரியருக்குள்ள பற்றையும் இரசனையையும் வெளிப்படுத்து வன. இரசனை உணர்வும் கவிதையும், தமிழ்த்திரைப் படங்கள், தமிழில் குழந்தைப்பாடல்கள் ஆகிய கருப்பொருள்கள் இக்கட்டுரை களில் துலக்கம் பெறுகின்றன.

சமயத்துறைசார் கட்டுரைகளாக அமையும் ஐந்து கட்டுரை களில் ஈழத்தில் சைவம், ஆருத்திரா தரிசனம், ஈழத்தில் ஐயனார் வழிபாடு, இலக்கியத்தில் விநாயகர், புத்தாணிடு ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி உரைக்கப்படுகின்றன. மாணவர்களுக்கான புதிய தகவல்களும் இவற்றில் இடம்பெறுகின்றன.

அடுத்து இந்நூலில் இடம்பெறும் தனியார் வரலாற்றுக் குறிப்புகள் சார்ந்த கட்டுரைகள் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றன என்றால் அது மிகையாகாது. "ஈழகேசரி" நா.பொன்னையா, டாக்டர் நந்தி, கலாநிதி சொக்கன், கவிஞர் தில்லைச்சிவன், எழுத்தாளர் டானியல், ஓவியர் மணியம், பண்டிதர் சு.வே., உடுமலை நாராயண கவி, உவமைக்கவிஞர் சுரதா, குன்னக்குடி வைத்தியநாதன், கானக் குயில் ஜிக்கி, மதுரக்குரலாள் பீ.லீலா, அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா ஆகிய பதின்மூன்று கலைஇலக்கிய வல்லாளர்கள் பற்றிய குறிப்புகளைப் படிக்கும்போது, நூலாசிரியர் ஓர் இலக்கியச் சுரங்கம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. காலத்தால் மறக்கடிக்கப்பட முடியாதவாறு மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வராலாற்றுக் குறிப்பு களின் பதிவானது ஓர் இலக்கியகாரனின் கடமையையும் அனை வருக்கும் உணர்த்துகின்றது. இக்கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் பல இன்று தேடிப்பெறுவதற்கு அரியவை.

இந்நூலின் சிறப்புக்கு வழிசமைத்த காரணங்களை இங்கு சுட்டுதல் பொருத்தமானது. முதலில் இந்நூலின் ஆசிரியரின் வாழ்க்கை வரலாறே ஏனையோருக்கு ஒரு படிப்பினையாகக் கொள்ளப்படக்கூடியது. முயற்சி திருவினை யாக்கும் என்பதற்கான ஓர் உதாரணபுருஷர் இந்நூலாசிரியர் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆவார். அவரிடத்தில் நல்ல குணமும் ஆற்றலும் முயற்சியும் திடசங்கற்பம் பூணும் ஒர்மமும் நிறைந்துள்ளன என்பதை நான் அறிவேன். இவரை எண்ணும்போது மனம்போல மாங்கல்யம் என ஒரு பழைய திரைப்படத்தின் பெயர்தான் எனக்கு ஞாபகம் வரும். இவர் மனம்போல ஆற்றல் வாய்க்கப்பெற்றவர். இவரின் மனம்கண்டு இறைவன் அளித்த வரங்கள் தான் இவர் பெற்றுக்கொண்ட பத்துக்குக் குறையாத தகைசார் பட்டங்கள்.

இவர் கல்வியாளராகவும் தமிழ் உணர்வாளராகவும் ஆன்மிகப் பற்றாளராகவும் நல்ல இரசிகராகவும் விமர்சகராகவும் சிறந்த ஆய்வாளராகவும் விளங்குவது இவரின் எழுத்துக்கள் துலக்கம் பெறுவதற்கான மற்றுமொரு காரணமாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைததிலுமே இவரின் இப்பண்புகள் இழையோடி இருப்பதைக் காணலாம்.

மேலும், இந்நூலில் இருநூற்றைம்பதுக்கும் அதிகமான புகைப் படங்கள் இடம்பெற்றிருப்பது மற்றுமொரு சிறப்பான அம்ச மாகும். கட்டுரையோடு சம்பந்தப்பட்ட பல புகைப்படங்கள் பல கட்டுரைகளில் இடம்பெறுகின்றன. உதாரணமாக, பழைய பாடல்போல..." என்ற கட்டுரையிலே, காலத்தால் அழியாத பாப

நாசம் சிவன், மதுர பாஸ்கரதாஸ், உடுமலை நாராயணகவி, அ.மருத காசி, தஞ்சை ராமய்யாதாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகிய பழைய திரைப்படப் பாடலாசிரியர்களின் புகைப்படங்களும் தரப்பட்டு, இன்றும் நினைவில் நிறைந்து நிற்கும் அவர்கள் எழுதிய பாடல் அடிகளும் குறிப்பிடப்படுகின்றன. இதேபோல, "அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா என்ற தலைப்பிலமைந்த தனியாள் வரலாற்றுக் குறிப்புக் கட்டுரையில், கவிஞர் மு.செல்லையா அவர் களின் புகைப்படத்தை மட்டு மல்லாமல், சமூக முன்னோடிகளாகத் திகழ்ந்த கா.சூரன், சி.வல்லிபுரம், க.முருகேசு, ஆ.ம.செல்லத்துரை, திருமதி.பொன்னம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் புகைப்படங் களையும் இடம்பெறச்செய்து, இவர்கள் மீதான அபிமானத்தையும் வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

அத்தோடு நூலாசிரியரின் சினிமா இரசனை உணர்வு வெளிப்பாடும் இந்நூலுக்கு அணிசெய்கின்றது. குறிப்பாக, தமிழ்த்தியாகையர் என அழைக்கப்பட்ட "பாபநாசம் சிவன் அவர்கள் சிறந்த பாடலாசிரியராகவும் இசையமைப்பாளராகவும் அந்நாளைய திரையுலகில் மிளர்ந்தவர். "வதனமே சந்திர0பிம்பமோ, ஸ்வப்பன வாழ்வில் மகிழ்ந்து, மன்மதலீலையை வென்றாருண்டோ, ராதே உணக்கு கோபம் ஆகாதடி போன்ற ஹறிற் ஆன பல பாடல்களையும் உள்ளடக்கி, 116 திரைப்படங் களில் ஏறத்தாழ 800 பாடல்கள்வரை பாபநாசம் சிவன் அவர்களே எழுதினார். நூலாசிரியர் குறிப்பிடும் இத்தகவல்கள் யாவும் மலைப்பைத் தருகின்றன.

இந்நூலின் கட்டுரைகள் அனைத்தையும் முழுமையாக அவற்றின் பார் வைப்படி அச்சுப்பிரதியில் (Proof copy) படித்தபோது, எனக்கேற்றப்பட்ட மகிழ்ச்சியோடு இந்நூலாக்கம் தொடர்பாக இந் நூலாசிரியருக்கு நான் தெரிவிக்கின்ற எனது சொந்தக் கருத்துகளை யும் இங்கு பதிவுசெய்வது பொருத்தமானது என நினைக் கின்றேன. இத்தொகுப்பு நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் அவற்றின் கருத் தாழம், கனதி, ஆய்வுத்திறன் என்பவற்றைப் பொறுத்து, வெவ்வேறு தனித்தனி நூல்களாக வெளியிடப்படவேண்டியவை. வாசகநிலை நின்று படிப்போருக்கும், ஆய்வுநிலை நின்று நோக்குவோருக்குரிய கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்துத்தருவதனால் வாசகர் களிடத்தே ஆய்வுப் பார்வையைத் தொற்றவைப்பதோடு, வாசகர் களுக்காக எவ்வாறு எழுதுவதென ஆய்வாளர்களையும் வழிப்படுத்த முடியுமெனின்,ஆய்வு போக்குநிலை சார்ந்து இங்கு இடம்பெற்றுள்ள கட்டுரைகளைத் தனிநூலாகத் தருவது பொருத்தமானது. குறிப்பாக, இந்நூலில் இடம்பெறும்முதலாவது கட்டுரையான "இலங்கையின்

தேசிய இனப்பிரச்சினைகள் முழுமையாக, இன்னும் விரிவாக வெளி யிடப்படவேண்டியது. ஆனாலும் நூலாசிரியரின் இந்த முயற்சி போற்றப் படவேண்டியது. நானூறு பக்கங்களில் தனிமுயற்சியாக ஒரு நூலை வெளியிடுவதென்பது, நிதிநிலைமைகளைச் சார்ந்தும் ஓர் அசுர சாதனை என்றே சொல்ல வேண்டும். ஆனால், இச்சாதனை கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்களுக்குப் புதிதன்று. ஏற்கனவே, அவர் "டானியலின் எழுத்துக்கள்" என்ற நூல் அது வெளிவந்த ஆண்டிலேயே விற்பனையாகியது, அண்மையில் க.பொ.த உயர்தர மாணவர்களின் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக இவர் எழுதிய தமிழ் பாடநூலின் முதற் பதிப்பின் ஆயிரம் பிரதிகளும் மிகவேகமாக விற்பனையானதன் காரணமாக, இரண்டாம் பதிப்பும் அச்சாகி அதன் பிரதிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாள ராக இருந்து கடந்த ஆண்டு ஓய்வுபெற்றுள்ள கலாநிதி செ.திருநாவுக் கரசு அவர்கள், பதவிநிலை ஓய்வுபெற்ற பின்னரும் தமிழ் இலக்கி யத்துக்காகவும் மாணவர்களுக்காகவும் உழைத்துவருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. அவர் எல்லோருடனும் இனிமையாகப் பழகுவதால் பல்வேறு மட்டத்தினராலும் விரும் பப்படுபவராக உள்ளார். எண்ணோடு அவர் கொண்ட நட்பின் காரணமாக, இந் நூலுக்கு அணிந்துரை எழுதுமாறு என்னைப் பணித்தார். நட்பினால் அவர் இடும் கட்டளை பெரும் பேறன்றோ! அவரின் நட்பும் அவரின் நூலுக்கு அணிந்துரை எழுதக்கிடைத்த வாய்ப்பும் எனக்கு கிடைத்த பெரும்பேறுகள் என்றே எண்ணுகின்றேன். இறைவன் அவருக்கு நிறைந்த ஆரோக்கியத்தையும், நீடிய ஆயுளையும் தமிழ்ப் பணியில் மேலும் மேன்மைகளையும் அருளவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# ஏழுமலைப்பிள்ளையின்

# “சதுரங்க வேட்டை”

தமிழில் நாடக ஆசிரியர்கள் அரிதாகவே காணப்படு கின்றார்கள் என்ற ஆதங்கம் எம்மிடையே உண்டு. இதனாலேயே, தமிழில் நாடகங்கள் இல்லை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. நாடக இலக்கியம் ஆழ்ந்த புலமையை வேண்டிநின்றது. பழைமை மரபுகளில் தன்னைப் பிணித்துக்கொண்டு, அது சாதாரணர்களுக்கு அந்நியமயப்பட்டதாய், அணுகமுடியாததாக இருந்தது. “இலக்கியம் என்பது உயர்ந்தோர் மாட்டே” என்ற சுலோகத்தை இறுகப் பற்றிக் கொண்டு சாதாரண மொழிகளைத் தவிர்த்துக்கொண்டு, விளங்கிக் கொள்ள முடியாத மொழியில் இலக்கியங்களாய் படைக்கப்பட்ட வேளை, மக்கள் இலக்கியங்கள் கிராமிய இலக்கியவடிவங்களாக அவற்றின் கலைவடிவங்களாக உருவாக்கம் பெற்றன. ஆனால் இந்த மக்கள் இலக்கிய வடிவங்களை செம்மொழிக் கலைகளின் சீரழிந்த வடிவங்களாக சான்றோர் பிரகடனப்படுத்தினார்.

இவ்வேளையில் தான், எட்டயபுரத்து மகாகவி பாரதி தோன்றி “எளியபதம், எளிய நடை, எளிய சந்தம்” என்பவற்றை வலியுறுத்தி தமிழன்னைக்குச் சேவை செய்ய வேண்டியவர்களின் கடமையை உணர்த்தி, “சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்ற முழக்கம் செய்து “பாஞ்சாலி சபதம்” எனும் எளிய தமிழ்க்காவியமாய் மகா பாரதத்தின் ஒர் அங்கத்தை நாடக வடிவில் தந்தான்; கவிதைப் போக்கின் திருப்புமுனையானான். பாரதியைத் தொடர்ந்து, புதுமை இலக்கியங்கள் படைக்கப்படலாயின. எமது நாட்டு “மகாகவி” உருத்திரமூர்த்தி “ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்” படைத்தளித்தார்.

இன்று நாடகப் பாடங்கள் (Texts) ஆற்றுகைக்குரிய

மொழியில் படைக்கப்பட்டு வருகின்றன. நாடக ஆசிரியர்களே நாடகப் பாடங்களுடன் அரங்கக்குறிப்புக்களையும் குறிப்பிடும் நிலைமை காணப்படுகின்றது. அதேவேளை நாடக ஆசிரியர் ஒருவர் எழுதிய நாடக பாடத்துக்கு நெறியாளர்கள் வியாக்கியானஞ் செய்து அரங்கேற்றி வருகின்றனர். எழுத்துருவில் படிப்பதற்கு அல்லது வாசிப்பதற்கு மாத்திரமே என்றிருந்த நாடகம் இன்று காண்பியக் கலையாக, ஆற்றுகைக் கலையாக உருமாற்றம் பெற்று ஆற்றுகை யாளர்களும் பார்வையாளர்களும் ஒத்துணர்வு பெற வழிவகுத் துள்ளது.

நாடக ஆசிரியர் சிவ.ஏழுமலைப்பிள்ளை அவர்களின் "சதுரங்க வேட்டை" என்ற இந்நாடகத் தொகுப்பு நூலைப் படித்த போது, மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இத்தொகுப்பில் மூன்று நாடகபாடங்கள் உள்ளன. "சதுரங்கவேட்டை" என்ற பெயருடன் அமைந்த நாடகம் மகாபாரதக் கதைக்கு மற்றுமொரு வியாக்கி யானத்தை அளிக்கிறது. பாரதியின் "பாஞ்சாலி சபதம்" அன்றைய பெண் அடிமைத்தனத்ததை குறிபொருளாய்க் கொண்டது போல, "சதுரங்கவேட்டை" இன்றைய அரசியல் சதுரங்க ஆட்டத்தை குறி பொருளாய்க்கொண்டு மகாபாரதக்கதைக்கு வியாக்கியானம் அளிக்கின்றது.

இரண்டாவது நாடகமான "இராமவீரம்" இராம காவி யத்தையே கேள்விக்குள்ளாக்குகின்றது. வாலியை இராமன் மறைந்து நின்று கொன்றது நியாயம் தானா என்ற ஐயம் இதுவரை தீர்க்கப் படாமலேயே உள்ளது. ஆனால், ஏழுமலைப்பிள்ளை அவர்கள் அது தவறானது என்றே உறுதியாகச் சொல்கிறார். வாலிவதைப்படலத்தை கருப்பொருளாகக்கொண்டு தமது நாடகபாடத்தை எழுதியிருக்கும் நூலாசிரியர் "இராமவீரம்" என எள்ளலாக அதற்குத் தலைப்பிட்டி ருப்பதே இராமவீரம் கறைபட்டிருப்பதை எடுத்துக் காட்டவே என்று கொள்ளலாம்.

மூன்றாவதான "மருது பாண்டியர்கள்" நாடகம் சிவகங்கைச் சீமையில் நிகழ்ந்த சம்பவங்களின் வரலாற்றுத்தொகுப்பாக உள்ளது. தமிழர்கள் ஒருபோதும் ஒற்றுமையாக இருந்ததில்லை. காட்டிக் கொடுப்புக்களும் துரோகத்தனங்களும் தான் தமிழர் வாழ்வைச் சிதைத்தன, சிதைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை இந் நாடகத்தின் குறிபொருளாகக் கொண்டு எமக்கு ஏற்பட்ட அவலத்தை இந்நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

மொத்தத்தில், நாடகம் என்பது நாட்டு நடப்புக்களை எடுத்துரைப்புச் செய்வதாக அமைய வேண்டும் என்ற இலக்குடன்

பழைய கதைமரபுகளிலும் கூட புதுப்பொருள் காணும் நோக்கில் இந்நாடகங்களை எழுதியிருக்கின்றமை நாடக ஆசிரியர் ஏழுமலைப் பிள்ளை அவர்களின் மொழிப் புலமையையும் வரலாறு பற்றிய தெளிவான பார்வையும் எடுத்துக் காட்டுவதாகும்.

இந்நாடகங்களில் இடம்பெறும் உரையாடல்களும் கதைப் போக்கின் தொடர்ச்சியான தன்மையும் எவ்விதப் பிசிறுமின்றி இடம் பெற்றிருப்பதை இவற்றைப் படிப்போர் உணர்வர். இலக்கியமாகப் படிப்பதற்கும் நாடகமாக அரங்களிக்கை செய்வதற்கும் பொருத்த மானவையாக இந்நாடகப் பாடங்கள் (text) அமைந்திருத்தல் இந்நாடகங்களின் சிறப்பம்சமாகும். இந்நாடக பாடங்களில் எவ்வித மாற்றமும் செய்யாமலே அரங்களிக்கைக்கான நாடகப்பிரதிகளாக/ நாடக எழுத்துருக்களாக (Scripts) இந்நாடக பாடங்களை நெறி யாளர்கள் பயன்படுத்த முடியும்.

இவ்வகையில் "சதுரங்க வேட்டை" நாடகத்தொகுப்பு நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்தும் அவர் பணிகள் சிறப்பாக இடம்பெற அவருக்கு இறைவன் நல்லாசி அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

# எம்.எஸ்.கமலநாதனின்

# “மன உயிர்ப்புகள்”

அமரர் எம்.எஸ் கமலநாதன் அவர்களின் “மன உயிர்ப்புக்கள்” என்ற நூலுக்கு முன்னீடாகச் சில வரிகளை எழுதுவது இக்குறிப்பின் நோக்கமாகும்.

இந்நூலில், “எம்.எஸ்.கமலநாதனின் மன உயிர்ப்புக்கள்” என்ற சுயசரிதைக் குறிப்புக்கள் அடங்கிய கட்டுரையும் இரு சிறுகதைகளும் 18 பாடல்களும் “சின்னமாமியே உன் சின்னமகளெங்கே?” என்ற “பொப்” இசைப்பாடலின் உரிமையாளர் தொடர்பாக உதயன், தினகரன், வீரகேசரி, மெற்றோ நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் வெளி வந்த குறிப்புக்களும் “வொலி சொக்கர்” என்ற புதியவிளையாட்டுப் பற்றிய அறிமுகக் குறிப்புக்களும் எம்.எஸ்.கமலநாதன் அவர்களின் 75 ஆவது அகவை நிகழ்வின் போது வழங்கப்பட்ட பாராட்டுக் கவிதையும் இடம்பெற்றுள்ளன.

எம்.எஸ்.கமலநாதனின் மன உயிர்ப்புக்கள் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரையானது ஒரு தனிநூலாக விரிவுபடக்கூடிய சுருக்கமான சுய சரிதைக் குறிப்புக்களைக் கொண்டமைந்தது. இவ்வா றான சுயசரிதை நூல்கள் மேற்கத்தைய நாடுகளின் பெரிதும் விரும்பப் படுவன. வெவ்வேறு துறை சார்ந்தவர்களின் சுயசரிதை நூல்களைப் படிப்பதில் அந்நாட்டு வாசகர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் தமிழில் இவ்வாறான சுயசரிதை நூல்களின் வருகைக்கு அதிகம் ஊக்கமளிக்கப்படுவதில்லை.

ஒரு சுற்று வாழ்க்கை வட்டத்தை வாழ்ந்து முடித்த மனித னொருவன் காய்தல் உவத்தலின்றி தனது வாழ்வனுபவங்களை எழுதிச் செல்கின்ற போது வாசகர்களுக்கும் பல்வேறு தரிசனங்கள் கிடைக் கின்றன. இத்தரிசனங்கள் வாசகர்கள் தம் வாழ்வில் இலட்சியங்களை உருவாக்கிக் கொள்ளவும் தமது வாழ்க்கைப்போக்கைச் செப்பனிட

வும் உதவவல்லன. அமரர் எம்.எஸ்.கமலநாதன் அவர்களின் சுய சரிதைக் குறிப்புகளும் வாசகர்களில் சிந்தனைகளைக் கிளர்த்தவல்லன.

அமரர் எம்.எஸ்.கமலநாதன் அவர்களை என் மாணவப் பருவத்திலேயே பார்த்துச் சிலாகித்திருக்கிறேன். கச்சிதமாக அவர் அணியும் சீருடை எல்லோரையும் கவர்ந்திழுக்கும். எமது அல்வாய் ஊரில் சித்திரா பூரணைக் காலங்களில் இடம் பெற்ற உதை பந்தாட்டப் போட்டிகளில் மத்தியஸ்தராக மைதானத்தில் அவர் பிரவேசிப்பதே தனி அழகாக இருக்கும். அவரின் விசில் சத்தம் கணீரென்று ஒலித்து அக்கணமே வீரர்களுக்குப் பணிப்புக்களை வழங்கிக் கொண்டிருக்கும். ஒவ்வொரு ஆட்ட நிலைமைகளும் ஒவ்வொரு விதமாக விசில் ஒலிக்கும். மைதானத்தில் வீரர்களோடு சேர்ந்து இவரும் துரிதமாக இயங்கிச் செயற்பட்டுக்கொண்டிருப்பார். ழகக ளனைந  இல் வீரர் ஒருவர் பந்தை நெருங்கும் போது, அவ் வீரருடன் ஒரே நேர்கோட்டில் இவரும் நின்று விசிலை ஒலிக்கச் செய்வார். இதனால் "ஓவ் சைட்" தொடர்பாக இவரின் மதிப்பீடு தவறானதென ஒருவருமே குறை கூறியதில்லை.

எம்.எஸ்.கமலநாதன் சிறந்த ஒப்பனை கலைஞரும் கூட. ஒரு முறை வதிரியில் ஐந்து ஊரவர்களின் ஐந்து நாடகங்கள் ஒரே மேடை யில் அரங்கேறின. எனது தந்தை எங்கள் ஊர்ப்பிள்ளை களைக் கொண்டு "சகுந்தலை" நாடகத்தை அம்மேடையில் அரங்கேறச் செய்தார். ஐந்து நாடகங்கள் என்பதனால் நடிகர்களின் எண்ணிக்கை யும் அதிகமாக இருந்தது. ஆயினும் ஒப்பனைக் கலைஞர் வேலாயுதம், எம்.பி.அண்ணாசாமி, எனது தந்தை ச.தம்பிஜயா ஆகியோருடன் இணைந்து எம்.எஸ்.கமலநாதனும் மிகத் துரிதமாக நடிகர்களுக்கு ஒப்பனைகள் செய்து முடித்து உரிய நேரங்களில் நாடகங்கள் மேடையேற்ற உதவினார்.

எம்.எஸ்.கமலநாதன் எழுதிய இரு சிறுகதைகளும் அவர் ஓர் ஆக்க இலக்கியகர்த்தாவாக மிளிர்திருக்க வேண்டியவர் என்பதற்குச் சான்றுகளாக அமைகின்றன. ஆனால் விளையாட்டுத்துறையில் இவருக்கிருந்த அதீத அக்கறை இவர் இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொள்ளாததற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும்.

சிங்களப் பிரதேசங்களில் "பொப்" இசை பிரபல்யம் பெற்றிருந்த காலத்தில் எம்.எஸ்.பெர்னாண்டோவின் மெட் டொன்றின் அடிப்படையில் ஈழத்தின் முதலாவது "பொப்" இசைப் பாடலான "சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே" என்ற பாடலை எம்.எஸ்.கமலநாதன் அவர்களே எழுதி, இசையமைத்துப் பாடி யிருந்தார் என்ற செய்தியை, இந்நூலில் இடம்பெறச் செய்யப்பட்ட

வெவ்வெறு பத்திரிகைக் குறிப்புகள் தெரிவிப்பதோடு மட்டு மல்லாமல் ஈழத்துத் தமிழ்ப் பொப் இசைப்பாடல்களின் பிதாமகர் அமரர் எம்.எஸ்.கமலநாதன் அவர்களே என்பதையும் நிரூபணமாக்கி யுள்ளன.

அமரர் எம்.எஸ்.கமலநாதன் அவர்கள் உருவாக்கிய "வொலி சொக்கர்"பற்றிய குறிப்புக்களைப் படித்த போது,இந்த ஆட்டம் பின்பு பிரபல்யப்படுத்தப்படாமற்போனதற்கு நாட்டின் யுத்த நிலைமைகள் காரணமாயிருக்கக்கூடும் என்ற எண்ணமே எழுந்தது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களைப்படிக்கின்ற போது எம்.எஸ்.கமலநாதன் அவர்களின் இறைபக்தியையும் மனித நேயத்தின் மீது அவர் கொண்டுள்ள உறுதியான பற்றினையும் காண முடிகின்றது. இப்பாடல்களிற் பல உருப்படிகளாக, கீர்த்தனங்களாக எழுதப்பட்டுள்ளன. இவை இசை அமைத்துப் பாடப்பட வேண்டும்.

பல்துறை ஈடுபாடும் திறமையும் கொண்ட ஒருவர் தமது ஆன்மாவைப் பிழிந்து எழுதிய எழுத்துக்களாகவே இந்நூலில் உள்ள கட்டுரைகளும் அமைகின்றன. என் அம்மாவின் தாய் மாமன் மகளான அழகேஸ்வரியை எம்.எஸ்.கமலநாதன் மணம் முடித்தவர் என்ற வகையில் எப்போதும் எனக்கு அவர் மீது உறவு கலந்த மதிப்பும் மரியாதையும் இருக்கின்றது.பொருத்தமான சூழலும் பின்னணியும் இருந்திருந்தால் அவரின் திறமைகளும் மதிப்பும் இன்னும் உயர் ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்பட்டிருக்குமே என்ற எனது ஆதங்கத்துடன் இந்த முன்னீட்டுக் குறிப்புகளை எழுதக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்த மன நிறைவையும் இங்கு பதிவு செய்து கொள்கிறேன்.

## கவிகலியின்

# "இன்னுமொரு தேசம்"

இன்று உள்ள நவீன தொழில்நுட்ப சாதனங்களின் பெருக்கம் அச்சுப்பதிப்பை இலகுவாக்கியுள்ள சூழ்நிலையில், ஆரம்பகால எழுத்தாளர்கள்கூட தமது படைப்புக்களை நூல்களாகத் தொகுத்து வெளியிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நூலை விரைந்து வெளிக்கொணர வேண்டும் என்பதில் இவர்கள் காட்டும் ஆர்வம் படைப்புக்களைச் செம்மைப்படுத்துவதில் குவிக்கப்படுமாயின் நல்ல படைப்புகள் எமக்குக் கிடைக்கக்கூடும். எழுதுவன யாவும் "எழுத்தாகி" விடுவதில்லை, இதனால் இன்றைய வசதிகளும் வாய்ப்பு களும் வகைதொகையின்றி அச்சாகும் நூல்களின் பெருக்கத்திற்குக் காரணமாகி விடுவது குறித்துச்சினம் கொள்ளும் விசனம் நியாயபூர்வ மானதே.

இப்பின்னணிச் சூழலில்தான் "கவி கலி" என்ற புனைபெயரில் கவிதைகளை எழுதிவரும் கவிஞர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் அவர்களின் "இன்னுமொரு தேசம்" கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகளுக்கான அறிமுகக் குறிப்பை எழுதவேண்டியுள்ளது. கவிஞர் க. கணேசலிங்கம் பள்ளிப்பருவத்திலிருந்தே கவிதைகளில் நாட்டம் கொண்டிருந்தவர். இளங்கோ சனசமூக நிலையத்தின் கையெழுத்துச் சஞ்சிகையான "சிலம்பொலி"யின் ஆசிரியராக விளங்கியவர். பதின்ம வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கி யவர். இலங்கையின் யுத்த அனர்த்தச் சூழலில் புலம்பெயர்ந்து ஐரோப்பாவின் சுவிஸ் நாட்டில் தற்போது வசித்துவரும் இவர் இலக்கியத்தில் ஈடுபாடுகொண்டு அவ்வப்போது கவிதைகளை எழுதி வருகிறார். அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தமது பிறந்த கிராமம்மீது நிறைந்த பற்றுக்கொண்டவர். நீண்ட காலமாக கவிதைகளை எழுதி வரும் இவர், மிகவும் நிதானமாகத்

தனது முதலாவது கவிதைத் தொகுதியான "இன்னுமொரு தேசம்" எனும் இந்நூலை வெளியிடுகின்றார்.

கவிஞர் கணேசலிங்கம் அவர்களின் கவிதைகளை ஒரு தொகுப்பு நூலாகப் படிக்கும்போது, அவரின் கவியுள்ளமும் மானுட நேயமுமே துலாம்பரமாக வெளித்தெரிகின்றன. எனது பேனா என்ற கவிதை மூலம் தனது கவிநோக்குப் பற்றிப் பிரகடனம் செய்யும் அவர், இன்றைய நடப்புகளைத் தமது கவிநோக்குக்கு அமைவாகவே நோக்குகிறார். பாடுபொருளாக இயற்கையைக் கொள்ளினும் இந்த இயற்கையிலும் மனித வாழ்வு குறித்த யதார்த்தத்தையே இவர் பதிவு செய்கிறார். இவ்வகையில் "இயற்கை" என்ற உபபிரிவில் அடக்கக் கூடிய "மீண்டும் ஒரு வசந்தம்", "ஒற்றைப் பனைமரம்", "தும்பி", "உறைபனி", "நெடுஞ்சாலை", "கற்றல் கற்பித்தல்", "மரங் கொத்தியும் புல்லாங்குழலும்", "நரை - திரைமூப்பு" ஆகிய கவிதைகள் ஆழமான வாசிப்பை / பதித்தலை வேண்டி நிற்பன ஆகும்.

இவர் தொழிலாளர் மீதும் தொழிலாள வர்க்கத்தின் மீதும் கொண்ட ஈர்ப்பும் "தேன் கூடும் தேயிலைக் கூடையும்", "மே-1", "இயந்திரமயம்", "விடுதலைக்கூலி" போன்ற கவிதைகளினூடாக வெளிப்படுத்தப்படுகின்றன. புலம்பெயர்ந்த தேசத்தில் வாழும் எழுத் தாளர்களுக்கும் கொள்கைப்பற்று அவசியம் என்பதை முன்னிறுத்தி எழுதிய கவிதைகளாக "திருத்தி எழுதுங்கள்", "விலைபோன புலமை", "வாக்கு + உறுதி = வாக்குறுதி", "பக்தி - முத்தி" ஆகிய கவிதைகள் விளங்குகின்றன.

"வேற்றுக்கிரகவாசி", "மனிதறோபோக்கள்" ஆகிய கவிதை களினூடு கவிஞர் கணேசலிங்கம் சொல்லும் செய்திகள் இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் அச்சுறுத்தலைச் சுட்டு கின்றன. "பாரதி நீ பாவமடா", "சோடிக் காலணி", "அந்தரப் பயணம்" ஆகிய கவிதைகள் கவிஞரின் இரக்க உணர்வைக் கவிதைகளாக வெளிப்படுத்துவன ஆகும். "காணும் தெய்வம்" என்ற கவிதை அன்னைமீது இவர் கொண்ட பற்றையும் "அன்பு ஒர் ஆயுதம்" கவிதை உயிர்த்த ஞாயிறிலும் இவர் காட்டும் அக்கறையையும் "கவிதைக் காதலி" எனும் கவிதை இவரது காணவிரும்பும் காதலியின் இயல்பை யும் வெளிக்கொணர்வன. அண்மையில் நடைபெற்ற மிகக்கொடூர மான வன்புணர்வுக்குள்ளாகிய "வித்தியா" மீதான தமது கரிசனையை யும் கவிஞர் "காமபக்தர்கள்" என்ற கவிதையில் வடித்துள்ளார். புலம்பெயர்ந்த நிலையிலும் உறவுக்காக ஏங்கும் இவரது உள்ளம் "நிலமும் புலமும்" கவிதையில் கவனிக்கப்படுகின்றது. "புலம் பெயர்வு" எனும் கவிதைச் சிறுகதை புலம்பெயர்வில் அனுபவிக்கும்

*துன்பங்களையும் புலம்பெயர்ந்த பின்பு உள்ள யதார்த்த நிலைமை யினையும் புலப்படுத்துகின்றது.*

*மொத்தத்தில் மனிதம் முகிழ்ப்புறும் கவிதைகளால் “இன்னு மொரு தேசம்” எனும் இக்கவிதைத் தொகுதி தொகுக்கப்பட்டுள்ள தெனலாம். கவிதைகளின் பாடுபொருளும் கவிதை உத்தியும் படிமங் களும் கவிதைகளுக்கு அழகுசேர்க்கின்றன. கவிஞரிடமிருந்து தரமான படைப்புகள் மேலும் வெளிவரும் என்ற நம்பிக்கையை இத்தொகுதி தருகிறது.*

# இ.இராஜேஸ்கண்ணனின்

# “போர்வைக்குள் வாழ்வு”

*“போர்வைக்குள் வாழ்வு”, இராஜேஸ்கண்ணனின் பன்னிரு கவிதைகளின் தொகுப்புநூல். 1997முதல் 2007வரை உள்ள காலப் பகுதியில் இவை எழுதப்பட்டவை; வார வெளியீடுகளிலும் சஞ்சிகை களிலும் பிரசுரமானவை. காலவரிசைப்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இக்கவிதைகளில் ஒரு தசாப்தகால நடப்புகளின் சிறுவெட்டுமுகம் தெரிகிறது.*

*இத்தொகுப்பிலுள்ள கவிதைகளின் சாரமாய் வெளித் தெரிபவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:*

*கண்காட்சிப் பொருளான புலம்பெயர் வாழ்வு*

*மனிதத்தின் “சுயம் இழந்த கையறுநிலை”*

*அறிவியலையும் விஞ்சிய மானுடத்தின் வீழ்ச்சி*

*மிடுக்கொழிந்து திசைமாறிப்போன வாழ்க்கை*

*அந்நியத்தின் அநாவசிய “மூக்கு நுழைப்பு”*

*காலம் கடந்தும் நிற்கும் காணிச்சண்டை*

*ஒளிகுன்றிய “ஊரடங்கு வாழ்வு”*

*ஒட்டாத காதற் களிப்பு*

*எதிர்கால வசந்தங்களைத் தொலைத்த “சிறுவர் ஊழியம்”*

*வளமிழந்த அகதிநிலை*

*“அற்றைத் திங்களான” இற்றைச் சோகங்கள்*

*படைத்தவனுக்கே படிப்பினை காட்டும் சமூகநீதி.*

*ஆனால் இவ்வெளிப்பாடுகளுக்கும் அப்பால் இக்கவிதைகள் யாவற்றினதும் உள்ளார்த்தமாய் விளங்குவது போர்வைக்குள்*

முடங்கிப்போன வாழ்வன்று; வாழ்வின் முடக்கமுற்ற சோகமே. "கவிதை என்றால் என்ன?" என்ற வினாவுக்கு வரையறையுள்ள விடையொன்றைக் கொடுக்க முடியாதென உரைப்பர். ஆயினும், "குறிப்புணர்த்தல்" கவிதையின் அடிநாதம். கவிதை வெளிப்படையாக ஒன்றைச் சொல்லினும் அது வேறொன்றை அர்த்தப்படுத்துகிறது. கவிதை குறித்த இந்தத் "தெரிநிலை" (awareness) கவிதையைப் படைப்போர்க்கும் அதனைப் படிப்போர்க்கும் ஏற்படாதவிடத்து கவிதை "தன்னிலை" இழக்கும்.

இராஜேஸ்கண்ணனிடத்து கவிதை பற்றிய தெரிநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம், அண்மைக்காலக் கவிதைகளில், "குறிப்புணர்த்தும்" நிலையில் மெல்ல மெல்லத் தொனிக்கிறது. இத்தொனிப்பு செழுமையுற இராஜேஸ்கண்ணனின் "அறிகை அமைப்பு" (Cognitive structure) விரிவுபடவேண்டும். இதற்கான வாய்ப்புகள் இராஜேஸ்கண்ணனுக்கு நிறையவே உண்டு. ஏனெனில். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் சிறப்புப் பட்டதாரி மானுடவியலை ஒரு பாடமாகப் பயின்று பட்டப்படிப்பு நிலையில் சில வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றியவர் இன்று யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆசிரியர் "முதுசொமாக" என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதி மூலம் அடையாளம் பதித்தவர். (இவரின் சிறுகதையொன்று தரம் 10- தமிழ் இலக்கிய பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது). மேலும், இலக்கியம், பண்பாடு, சமூகவியல் என்பன குறித்து கட்டுரைகள் எழுதிவருபவர் இவர். தற்போது பட்டப்பின் படிப்பு "கல்வி டிப்ளோமா" நெறியைப் பயின்று வரும் இராஜேஸ்கண்ணன் அப்பயிற்சி நெறியில் "உளவியலையும் ஒரு பாடமாகப் பயின்று வருகின்றார். இவை யாவும் "இராஜேஸ்கண்ணனிடமிருந்து சிறந்த படைப்புகளை எதிர் பார்க்கலாம்" என்ற நம்பிக்கையைத் தருகின்றன. அந்த நம்பிக்கை "மெய்ப்பட வேண்டும்" என்று வாழ்த்துகிறேன்.

## த.ஜீவராஜாவின்

# “தமிழ் இலக்கியச் சாரம்”

தமிழ் இலக்கிய வரலாறு ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பரந்த காலவீச்சை உள்ளடக்கியது. இப்பரந்த காலவீச்சில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் தமிழ் இன வரலாற்றுடனும் வளர்ச்சி நிலைகளுடனும் சம்பந்தப்பட்டனவாய், அக்கால மக்கள் வாழ்க்கைப் போக்கையும் சுட்டுவன. இதனாலே தான் “காலத்தின் கண்ணாடி” என இலக்கியத்தைக் குறிப்பிட்டார்கள் போலும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ச்சி கண்டு வரும் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றைப் பல பிரிவுகளாக வகுத்து அக்காலப் பிரிவுகளில் எழுந்த இலக்கியங்களின் பொதுப்பண்பு களையும், சிறப்புப் பண்புகளையும், பொருள் மரபுகளையும் விளக்குவதும் வெவ்வேறு இரு பிரிவுகளில் இலக்கியப்பண்புகளும் பொருள் மரபுகளும் வேறுபடுமாற்றை ஒப்பியல்நோக்கில் ஆராய்வதும் வழக்கம். தமிழ் இலக்கிய வரலாறானது அரசியலை அடிப்படையாகக் கொண்டும் இலக்கியங்கள் உணர்த்தும் மக்கள் வாழ்க்கை நெறிப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டும் காலகட்டங்களாக வகுத்துநோக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் இலக்கிய வரலாற்றினைத் தமிழ்நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளின் பின்புலத்தில் எடுத்துக்கூறிய முதற் பாடநூல் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் எழுதிய “தமிழ் இலக்கிய வரலாறு” எனும் நூல் என்பதோடு, கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புப்பாடநூலாக அங்கீகரிக்கப்பட்டு, இன்றும் அது பயிலப் பட்டு வருகின்றது. கலைமாணிப் பட்டப்படிப்பு மாணவர்களும் முது கலைமாணி பட்டப்பின் படிப்பு மாணவர்களும் கூட, அந்நூலையே தமிழ் இலக்கிய வரலாறு கூறும் அடிப்படைநூலாகக் கொள் கின்றனர். ஆனாலும், மாணவர்க்கென எழுதப்பட்ட ஆரம்பநூல்

என்பதால், அந்நூலில் விரிவான ஆராய்ச்சிகள் இடம்பெற முடிய வில்லையென அந்நூலின் ஆசிரியர் அவர்களே குறிப்பிட்டுள்ளார்.

உயர் கல்விப் பாடநெறிகளில் தமிழை ஒரு பாடமாகக் கொள்வோருக்கு "தமிழ் இலக்கிய வரலாறு" முக்கியமான ஒரு பாட அலகாக உள்ளது. தமிழ் இலக்கிய வரலாறு குறித்த வினாக்களுக்கு உதாரணங்களுடனும் சான்றாதாரங்களுடனும் பகுப்பாய்வு நிலையில் விடையளிக்கவேண்டியது அவசியமாகும். ஆனால் பல்வேறு இலக்கியங்களையும் மூலநூல்களாகவே படித்து, அவற்றை ஆய்வுநிலையில் பகுத்தாராய்ந்து, தொகுத்து, விடையாகப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலும் பொறுமையும் கால அவகாசமும் எல்லா மாணவருக்கும் இல்லை என்றே கொள்ளவேண்டும். இந்நிலையில், விரிவுரைகளிலும் கூட பல்வேறு இலக்கியங்களையும் விரிவாக எடுத்துரைப்பதற்கும் கால அவகாசம் போதாது. வெளி வாரிப் பட்டநெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விரிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு மேலும் அருகியே காணப்படுகின்றது. ஆராய்ச்சிநெறி மாணவர்களின் நிலைவேறு. எல்லா மாணவர்களும் ஆராய்ச்சிநெறி மாணவர்களாகி விடவும் முடியாது.

இவ்வாறான ஒரு நிலையைக்கொண்டே "தமிழ் இலக்கிய வரலாற்றுச் சாரம்" எனும் இந்நூல் எழுதப்பட்டதெனக் கருதப்பட வேண்டியுள்ளது. பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் காட்டிய பாதையிலேயே இந்நூலாசிரியர் தமிழ் இலக்கிய வரலாற்றினை நோக்குகிறார். சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்வர்காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு என பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் வகுத்துக்கொண்ட அதே காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்களையும் அவற்றின் செல்நெறிகளையும் இலக்கியப்பண்புகளையும் பொருள்மரபுகளை யும் பரந்தளவிலான உதாரணங்களுடனும் சான்றாதாரங்களுடனும் இந்நூலாசிரியர் விபரிக்கின்றார். உயர் கல்வி நெறித்தேர்வுகளில் வினாவப்பட்ட வினாக்களையும் வினாவப்படக்கூடிய வினாக் களையும் ஆதாரமாகக் கொண்டு அவ்வினாக்களுக்கான விடைகளி னூடாக தமிழ் இலக்கிய வரலாற்றினை ஆற்றொழுக்காக, நல்ல மொழிநடையில் ஆசிரியர் தருவது வரவேற்கப்படவேண்டியது. இவ்விடைகளைத் தயாரிக்கும்போது மூலக்கருத்துகள் பெறப்பட்ட நூல்களையும், நூலாசிரியர்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டிருப்ப தானது. இந்நூலாசிரியரின் புலமை நாட்டத்தையும் ஆய்வுப்

பண்பாட்டின் வழி ஒழுகும் பண்பையும் வெளிக்காட்டுவதாகும். வினாவிடை உத்தி என்பது தமிழ் பயிற்றுநெறிமுறையில் காலங் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஒன்றாகும். இந்த உத்தியை இந்நூலாக்கத்தில் நுட்பமாக இந்நூலாசிரியர் பயன்படுத்தியுள்ளார். வினாக்கள் ஒழுங்கமைக்கப்பட்ட முறை இதனை வெளிப் படுத்துகிறது.

தமிழ் மாணவர்கள் அனைவருமே தமிழ் இலக்கிய வரலாற்றினை அறிந்திருக்கவேண்டும். அறிவியல் நெறிகளும் தமிழ் மொழியிலேயே பயிலப்படும் இன்றைய காலகட்டத்தில், தமிழ் மொழியிலேயே அறிவியல் நூல்களைத்தருவதற்கும், தமிழ் மொழியை நுட்ப மாகப் பயன்படுத்துவதற்கும் அறிவியலாளர் வரலாற்றுணர்வு மிக்கவர்களாக விளங்கவேண்டும். தமிழ்மொழியின் தொன்மையையும் வளத்தையும் அறிந்துகொண்டு நவீன தொழில் நுட்பத்தைப் படைக்க முனையும் போதே, பாரதி கூறியது போல "பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்" வல்லமை தமிழ் மொழிக்காகும். ஆனாலும், தமிழை ஒரு பாடமாகக்கொள்ளாத, அறிவியல் நெறி களைப் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய வரலாற்றினைத் தொகுத்து, எளிய வழங்கக்கூடிய வாசிப்பு நூல்கள் இன்று பெருமளவில் இல்லை என்றே கொள்ளவேண்டும். இப் பின்னணியில், தமிழ் இலக்கிய வரலாற்றினை எல்லோரும் படிக்கக் கூடியமுறையில் வழங்கிய வகையில், சிறந்த ஒரு வாசிப்புநூலாகவும் இந்நூல் விளங்குகின்றது.

இந்நூலைப் படித்து முடித்தபின்பு, இந்நூலாசிரியரைப்பற்றி அறிய நேர்ந்தபோது, இந்நூலின் மீதும் இதன் ஆசிரியர் மீதும் உயர்வான மதிப்பு ஏற்படுகிறது. கல்விக்கல்லூரியல் பயின்று, அதன் பின்பு வெளிவாரி மாணவனாகப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு, மதுரை காமராஜர் பல்கலைக்கழக முதுமாணி மாணவ னாக விளங்கி, ஆசிரியராக இன்று கடமையாற்றும் இந்நூலாசிரியன் இந்நூலாக்க முயற்சி கல்விப்புலம் சார்ந்தோர் அனைவராலும் போற்றப்பட வேண்டியதாகும். நானூற்றிருபத்தொன்பது பக்கங் களில் அமைந்த இந்நூலை அன் நூலாக்கச்செலவைத் தாங்கி, தனியாளாக நின்று வெளிக்கொணர்வதே ஒரு சாதனையாகும். இந்நூலாசிரியரின் இம்முயற்சியை ஊக்குவிக்கும் வகையில், பாட சாலைகளும், நூலகங்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் இந் நூலை வாங்கி ஆதரவளிக்கவேண்டியது அறிவார்ந்த சமுதாயத்தின் கடமையாகும்.

நிறைவாக இந்நூலாசிரியருக்கான ஒரு பணியைச் சுட்டுவது இங்கு பொருத்தமாகும். இந்நூலில் இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சி விரிவாக நோக்கப்படவில்லை என்றே கொள்ளவேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் அரைநூற்றாண்டு கழிந்த நிலையில், 1951இல் வெளிவந்த, பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களின் "தமிழ் இலக்கிய வரலாறு" எனும் நூலில் பதிவு செய்யப் பட்டுள்ள செய்திகள் அந்நூலுக்குப்போதுமானவையாக இருக்க லாம். ஆனால் அதன் பின்பான, ஏறத்தாழ ஆறுதசாப்த காலங்களில் ஏற்பட்டுள்ள தமிழ் இலக்கிய வளர்ச்சியை விரிவாகப் பதிவு செய்ய வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். இந்நூலிலேயே அப்பதிவை மேற்கொள்வது சாத்தியமற்றதாயினும், இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியையே ஒரு தனிநூலாகக் கொண்டு வருவதற்கு இந்நூலாசிரியர் முயற்சிக்கவேண்டும். அதற்கான ஆற்றலும், துணிவும், அறிவுத்தேட்டமும் இந்நூலாசிரியரிடத்துக் காணப்படுவதையே இந்நூலாக்க முயற்சி வெளிப்படுத்துகிறது. அவரின் முயற்சிகள் மேலும் வளம்பெற வேண்டும் எனவும் வெற்றிபெற வேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

## க.பேர்ணாட்டின்

# “இலங்கையின் கல்விப் போக்குகள்”

ஒரு நாட்டின் அனைத்துத் துறைகளினதும் வளர்ச்சியைத் திசைப்படுத்தும் முக்கிய காரணியாக விளங்குவது கல்விஆகும். இதன் காரணமாகவே கல்வியை வழங்கும் பொறுப்பு அரசுக்குரியதாகிறது.. பாடசாலைகளினூடாக பொதுக்கல்வியை வழங்கும்போது, கல்விக் கான கொள்கைகளைத் திட்டமிடுவதும் வகுப்பதும் அரச ஆளுகைக் குட்பட்டவை.

இலங்கையின் கல்வி வரலாற்றை நோக்கும்போது, காலத்துக் குக் காலம் கல்விக் கொள்கைகளிலும் கல்வி நடைமுறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே வந்திருப்பதை நோக்கமுடியும். நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசின் கொள்கைகளை ஒட்டியதாயும் உலகக் கல்விப்போக்குகளை ஒட்டியதாயும் இம்மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே வந்துள்ளன.

இன்று ஆசிரியத் தொழில் ஓர் உயர் தொழிலாக அல்லது வாண்மையாகக் (profession) கொள்ளப்படும் நிலையில், ஆசிரியர் களுக்கு வலுவூட்டல்(Empowerment of teachers) என்பது சகல ஆசிரியர் பயிற்சித் திட்டங்களினதும் முக்கிய குறிக்கோளாகும். இதற்கமை வாக, இலங்கையின் கல்வி வரலாற்றையும் கல்விப்போக்குகளையும் தெளிவுற அறிந்து கொள்ள வேண்டியது ஆசிரியர்களின் கடமை யாகும்.

இவ்வகையில், வவுனியா தேசிய கல்வியிற் கல்லூரின் முன்னாள் பீடாதிபதியான திரு.க.பேர்ணாட் அவர்கள் எழுதியுள்ள “இலங்கையின் கல்விப் போக்குகள்” என்ற நூலானது, இலங்கையின் கல்வி வரலாற்றையும் கல்விப் போக்குகளையும் எளிமையாக எடுத் துரைக்கின்றது. முக்கியமான விடயதானங்களைக் குறித்து எழுதப் பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக அமையும் இந்நூல் ஆசிரியர்

*களால் மாத்திரமன்றி ஏனையோராலும் வாசிக்கப்பட வேண்டிய ஒரு நூலாகும்.*

*இந்நூலின் ஆசிரியரான திரு.க.பேர்ணாட் அவர்கள் கல்வித் துறையில் நீண்ட கால அனுபவமுடையவர். எறத்தாழ 30 வருட கால கல்வி அனுபவமுள்ள இவர், பல்வேறு பதவி நிலைகளை வகித்தும் வந்துள்ளார். பட்டதாரி வணிக ஆசிரியர், இலங்கை அதிபர் சேவை (தரம் 1), இலங்கை கல்வி நிர்வாக சேவை (வகுப்பு* III), *உதவிக் கல்விப்பணிப்பாளர்(வர்த்தகம்), இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை(வகுப்பு 1), விரிவுரையாளர், இணைப்பாளர், உபபீடாதிபதி, பீடாதிபதி என வரிசைப்படுத்தப்படக்கூடிய பல்வேறு பதவி நிலைகளினூடாகவும் திரு பேர்ணாட் அவர்கள் பெற்றுக் கொண்ட பட்டறிவு இந்நூலாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை அக்கட்டுரைகள் எடுத்தியம்புகின்றன.*

*இதை தவிர, திரு பேர்ணாட் அவர்கள் பெற்றுக் கொண்ட உயர் கல்வித்தகைமைகளும் கூட இவரின் அறிவுப் புலத்தை விரிவு படச் செய்துள்ளமைக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாகும். திரு.பேர்ணாட் அவர்கள் இது போன்ற பல நூல்களை எழுத வேண்டும். அதற்கு வேண்டிய இறையாசி இவருக்குக் கிட்ட வேண்டும். நிறைந்த ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் கைவரப் பெற்று, திரு பேர்ணாட் அவர்களின் பணி தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன். இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் மட்டற் மகிழ்ச்சியடைகின்றேன்.*

## சோ.கிருஷ்ணதாஸின்

# "அட்சரகணிதம்"

கணித எண்ணக்கருக்களின் அடுக்கமைவினூடாக கட்டி யெழுப்பப்படும் பாடம் கணிதம் ஆகும். அடிப்படை எண்ணக்கருக் களை விளங்கிக் கொள்ளாதவரை கணிதத்தில் தொடர் கற்றலானது பொறிமுறைப் பாங்கானதாகவே விளங்கும். இன்று "எல்லோர்க்கும் கணிதம்" என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மகுட வாசகமாகும். வாழ்வியலின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாக விளங்கும் கணிதத்தை விருப்புக்குரிய பாடமாக மாற்றுவதில் எல்லோரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். குறிப்பாக பெற்றோர்களும் ஆசிரியர் களும் இணைந்து தம்பிள்ளைகளின் கணிதக் கற்றற் செயற்பாடு களுக்கு ஊக்கமும் ஆதரவும் அளித்தல் அவசியமாகும். பல்வகையான கணித அனுபவங்களை வழங்குதலில் இவர்களின் வகிபாகம் பெறுமதி மிக்கது. இந்த அனுபவங்களோடு "நெட்டுருவும் பயிற்சி யும்" என்பதும் கணிதத்தில் வேண்டப்படுவதாகும். புதிய பாடத் திட்டத்திற்கமைவாக 9, 10, 11 ஆகிய தரங்களுக் குரிய கணிதப் பயிற்சி நூலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் திரு.சோ.கிருஷ்ண தாஸ் அவர்கள் வெளியிடும் முயற்சியானது பாராட்டப்பட வேண்டி யதும் ஆதரவளிக்கப்பட வேண்டிய தாகும். சுயகற்றல் முயற்சிகளுக்கு தரக்கூடிய வகையில் கணித எண்ணக்கருக்கள் பற்றிய சுருக்கமான விளக்கங்களை வழங்கி, பல உதாரணக் கணக்குகளையும் இந்நூலில் அவர் இடம் செய்துள்ளார். ஒவ்வொரு எண்ணக்கரு விளக்கத்தின் இறுதியிலும் பல பயிற்சிகளையும் வழங்கியிருப்பது, மாணவர் தமது விளக்கத்தைப் பரிசீலித்துப் பார்க்க உதவும். இம் முயற்சி வெற்றிகர மாக அமைந்ததா என்பதை அநபந்தமாகத் தரப்பட்ட பயிற்சிக்கான உறுதி செய்யும். இவ்வகை யில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட இந் நூலைத் தந்த ஆசிரியரை வாழ்த்துவதோடு அவரிடமிருந்து மேலும் பலநூல்கள் வெளிவந்து மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டுமென இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

## கண.எதிர்வீரசிங்கத்தின்

# “சிறுவர் கவிச்சரம்”

சிறுவர் பாடல் எழுதுதல் எளிதான பணியன்று. சிறுவரின் உளவிருத்திப் பருவம் நோக்கி, பொருத்தமான சொல் தேர்ந்து, ஓசை நயத்துடன் சந்த நடையில் சிறுவர் பாடல்கள் எழுதப்பட வேண்டும். சிறுவர்களின் வாழிடச் சூழலினல், அவர்கள் ஊடாடும் பொருள்கள், குடும்ப உறவினர், பிராணிகள், விளையாட்டுகள், விருப்பத்திற் குரியவை என பல்வேறு அம்சங்களும் பாடு பொருளாய் அமைய லாம். வகுப்பறைகளிலும், பிள்ளைகள் கூடும் இடங்களிலும் பாடி மகிழத்தக்கனவாக சிறுவர் பாடல்கள் அமையின், அப்பாடல்களைப் பாடி, ஆடி மகிழ்தல் சிறாரின் நாளாந்த வாழ்வின் ஓர் அங்கமாகும். சிறுவர் கதைப் பாடல்களோவெனின், பாடல், ஆடல் என்ற நிலைகளைக் கடந்து, நடித்தல் எனும் பரிமாணமாகவும் விரியும்.

உளநூல் கூறும் நெறி ஓர்ந்து, எளிய நடையில், அழகு தமிழ்ப் பாடல்கள் தருவோர் சிறுவர் இலக்கியத்துக்குப் பங்காற்றியோர் ஆவர். இலங்கையில் இன்று சிறுவர் இலக்கியம் படைப்போர் விரல்விட்டு எண்ணப்படக் கூடிய சிறு தொகையினரே. ஆனால் வாழ்ந்து மறைந்த கவிஞர்கள் சிலர் விட்டுச் சென்ற சிறுவர் பாடல்கள் சில, சிரஞ்சீவியாய் சாகாவரம் பெற்று இன்றும் எம் நெஞ்சில் சித்திரமாய் நிழலாடும். வித்துவான் வேந்தனாரின் காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா“ என்ற பாடலும், “சும்மா இருந்த சந்திரனைத் துண்டாய் வெட்டினதாரம்மா” என்ற கவிஞர் மு.செல்லையாவின் பாடல் அடிகளும், “சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம் சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம் என்ற, மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்னின் கதைப்பாடலும் ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்ற சோமசுந்தரப் புலவரின் பாடலும்

நவில்தொறும் நயம் தருபவை.

நண்பர் வதிரி கண.எதிர்வீரசிங்கம் அவர்கள் அண்மைக் காலங்களில் கவிதையின்பால் காட்டிவரும் நாட்டம் கவனத்துக் குரியது. பூவற்கரையானின் புகழ் கூறும் அருட்பாடல்களை யாத்த இவர், தாம்வாழும் சமூகத்தின் அவலங்களையும் கவிதைகளாக, இலங்கையின் முன்னணிச் சஞ்சிகைகளில் எழுதி வருகிறார். இன்று சிறுவர் பாடல்களின் மீது இவரது கவனம் குவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அம்மா, அப்பா, குரு, தெய்வம், தாத்தா, வகுப்பறை, ஆலயம், காலைப்பொழுது, மாலைப்பொழுது, பள்ளி செல்லல், வீடு தரும் பல, விளையாட்டு, பகிர்ந்துண்ணல், துயிலும் பொழுது என பதினான்கு தலைப்புகளில் இவர் தரும் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. சிறுவர்க்காய சொற்களஞ்சியத்தி லிருந்து தேர்ந்தெடுத்த சொற்களும் பாடல்களின் துள்ளல் நடையும் பாடுபொருள்களின் பொருத்தப்பாடும் இச்சிறுநூலின் சிறப்புகள். சிறுவர் பாடல்கள் குறித்த அறிகையும் (Cognition) சிறுவர் உளவியல் (Child Psychology) அறிவும் ஆழ வேர்கொள்ளும்போது, மேலும் சிறப்பான சிறுவர் பாடல்களை இவரிடமிருந்து எதிர்பார்க்க முடியும் என்ற நம்பிக்கையை இந்நூல் தருகிறது.

# கலைஞான வாரிதி மாணிக்கம் செல்லத்தம்பி அவர்களின் கலை உலக வாழ்வு

அல்வாய்க் கிராமத்தின் பெருமைக்குரிய நாடகக் கலைஞர்களுள் முக்கியமான ஒருவர் திரு.மாணிக்கம் செல்லத்தம்பி அவர்கள். மாணிக்கம் - நாகமுத்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனான இவர், எமது கிராமத்தின் கலை வரலாற்றில் என்றும் பெருமையுடன் பதிவு செய்யப்பட வேண்டியவர்.

பாடசாலைக் கல்விக் காலத்தில் கலை விழாக்களில் மேடை யேற்றப்பட்ட நாடகங்களிலும் மூத்த நாடகக் கலைஞர்களால் பழக்கப்பட்ட சமூக நாடகங்களிலும் இசை நாடகங் களிலும் முக்கியமான பெண் பாத்திரங்களை ஏற்று, பாடி நடித்து வந்தவர்; சிவராத்திரி தினங்களில் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் அரங்கில் எனது தந்தை அண்ணாவியார் எஸ்.தம்பி ஐயா அவர்களால் மேடையேற்றப்பட்ட முழு இரவு நாடகங்களான சீமந்தினி நாடகத்தில் சீமந்தினியாவும் பவளக்கொடி நாடகத்தில் பவளக்கொடியாகவும் நடித்த இவரின் நடிப்பு அந்நாளில் பலராலும் விதந்து பேசப்பட்டது.

பாடசாலை நாடகங்களிலும், சமூக நாடகங்களிலும் நடித்து வந்த இவரை நல்லதொரு இசைஞானமுள்ள இசைநாடகக் கலைஞராக அடையாளப்படுத்தியதில் இவ்விரு இசை நாடகங் களுக்கும் பெரும் பங்குண்டு. திரு மா.செல்லத்தம்பி அவர்கள் இன்னும் பல காலம் உடல் நலத்துடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

## மா.சின்னராசாவின்

# "ஞான தீபம்"

*மானிட வாழ்வு அற்புதமானது.*
*இத்தாவர சங்கமத்துள் மனித்தப் பிறவியின்*
*மேன்மை உணர்த்துவது.*

*வாழ்வியற் கோலங்கள் பல.*
*"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்னாது*
*மானிட வாழ்வின் கடமை உணர்த்திச் சென்ற*
*அனுபூதிமான்கள் பலர்.*

*அனுபூதி வெறும் பட்டறிகின்று;*
*பிரமாணங்களைக் கொண்டு பெற்ற அனுமா அது.*
*ஆயினும்,*
*இன்னதென விபரிக்க முடியாதது.*

*அனுபூதியர் உணர்ந்தவை உணர்த்தும் நூல்கள் பல.*
*அவற்றுள் ஒரு சிலவற்றின் தொகுப்பு இந்நூல்.*
*தந்தை - மனைவி - பிள்ளை என்று தொடரும் பந்தத்தில்*
*"தன்கடன்" முடித்த தந்தையை மனங் கொண்டு*
*தனயர்கள் தம் கடமை இதுவென உணர்ந்து*
*தருகின்ற "ஞானதீபம்"*
*மனித வாழ்வின் சாரம் உணர்த்தும் உண்மைகள் பொதிந்தது;*
*பேணிப் பாதுகாக்க வேண்டியதும்*
*பாராயணம் செய்வதும்*
*எம் கடன்.*

### பேராசிரியர் மா.கருணாநிதியின்

# நினைக்கப்பட வேண்டிய ஆளுமை அமரர் க.மார்க்கண்டு அவர்களின் சிறு வரலாறு

*ஒரு சமூக வரலாறு என்பது அச்சமூகத்திலுள்ள மறக்கப்பட முடியாத ஆளுமைகளின் வரலாற்றுத் தொகுப்பே என்பர். ஆளுமை மிக்க அந்த வரலாற்று நாயகர்களின் வரலாற்றுத் தொகுப்பானது அவர்கள் காலத்து முக்கிய நிகழ்வுகளினதும் செயற்பாடுகளினதும் பதிவுகளாக அமைவதோடு மட்டுமல்லாது சமூக மாற்றத்தின் விமரிசனமாகவும் விளங்குவதாகும். இதனாலே தான் இன்றைய அறிவு வளர்ச்சிப் பாதையில் வரலாற்றை எவ்வாறு எழுதுவது என்பதும்* (Historiography) *எனும் இத்துறையானது வரலாற்று நிகழ்வுகளை நேரடியாகக் கற்பதன்று. இந்நிகழ்வுகளுக்கான மாற்றமுறும் வியாக்கியானங்களை வரலாற்றாசிரியர்களின் பார்வைகளினூடாக பரிசீலனை செய்து வரலாற்றை விளங்கிக் கொள்ளலே இதுவாகும்.*

*உண்மையில் எமது சமூக வரலாறு, குறிப்பாக ஒடுக்கப்பட் சமூகத்தின் வரலாறு, வரலாறெழுதியலின் அடிப்படையில் இன்னமும் பதிவு செய்யப்படவில்லை என்றே கூற வேண்டும். அவ்வகையிலே தான் சமூக மாற்றங்களை வியாக்கியானம் செய்யும் வகையில் எமது கிராமத்தின் வரலாறும் எழுதப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எம்மிடம் இருந்து வந்த வரலாற்றுப் பதிவு முயற்சி என்பது எம்மவர்களின் அமரத்துவம் குறித்து வெளியிடப்படும் நினைவு மலர்கள் மாத்திரமே. ஆனால் வரலாற்றாசிரியர்கள், ஒருவரின் அமரத்துவத்தின் போது நினைவு மலரில் வெளியிடப்படும் புகழுரைகளைக் கவனத்திற் கொள்வ தில்லை. ஆனாலும், ஒரு வரலாற்றாசிரியனுக்கு "வெளிச்சம் போட்டுக் காட்டுக்கூடிய" "பொறிகள்" சில நினைவுமலர்களில் இருக்கக் கூடும் என்பதையும் மறுப்பதற்கில்லை.*

இப்பின்னணியிலேயே எமது கிராமத்தின் சமூக வரலாறும், கல்வி வரலாறும், கலை வரலாறும் இன்னமும் எழுதப்படவில்லை என்றே கூற முடியும். எழுத்தறிவுப் பாரம்பரியம் ஒன்று எவ்வாறு எமது கிராமத்தில் வேர் கொண்டது என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியது. எமது எழுத்தறிவுப் பாரம்பரியம் பற்றிய தெளிவுடனேயே எமது சமூகவரலாறும் கலை வரலாறும் கூட நோக்கப்பட வேண்டும். உதிரிகளாக காலமுரணுடன் தெரிவிக்கப்படும் செய்திகளும் கருத்துகளும் எமது கிராமத்தின் உண்மை வரலாறு ஆக முடியாது. எமது கிராமத்தின் சமூக, வரலாறு எமது கிராமத்தின் வரலாறு மட்டுமன்று. அது எமது நாட்டில் ஒடுக்கப்பட்ட சமூகங்களின் வரலாற்றின் ஓர் அங்கமும் ஆகும். எமது கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினதும் கலைபாரம்பரியத்தினதும் மூலவேர்களை நாம் இன்னும் தேடிக் கண்டுபிடிக்கவேயில்லை.

இவ்வேளையில், அமரர் க. மார்க்கண்டு அவர்களின் வாழ்க்கை வரலாறு ஒரு நூலாக வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது உண்மையில் க. மார்க்கண்டு அவர்கள் நினைக்கப்பட வேண்டியவர்; எமது கிராம வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டியவர். அவரைப்பற்றிய பல செய்திகள் கால, தேச வர்த்தமானப் பின்னணியில் இந்நூலில் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பல எமது இளைய தலைமுறையினர்க்குத் தெரியாதவை. இந்நூல் வெளிவராவிடின் அமரர் மார்க்க்ணடு அவர்கள் ஒரு சீவல் தொழிலாளியாக மாத்திரமே அறியப்பட்டிருப்பார். அக்காலத்திலேயே ஏறத்தாழ ஏழு தசாப்தங்களின் முன்பு சிரேஷ்ட இடைநிலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (S.S.C.) சிறப்புச் சித்தி பெற்ற இவர், ஓர் ஆசிரியராக வர முடியாத சமூக அவலம் இவரின் வாழ்க்கை வரலாற்றில் தொக்கி நிற்பதை இந்நூலைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ளலாம். அவ்வாறான கல்வியில் திறமைசாலியாக விளங்கிய ஒருவரை கைதூக்கி விடக் கூடிய எவரும் எம்மிடையே அக்காலத்தில் இருக்கவில்லை என்பதே நிதர்சனமாகும். ஆனாலும் அமரர் மார்க்கண்டு அவர்கள் இதனால் துவண்டுபோய் விடவில்லை. குத்தகைக்காரர்களுக்கு "கணக்குப் பிள்ளையாகவோ" அல்லது ஒரு பஸ் நடத்துநராகவோ இருப்பதிலும் பார்க்க, நிரந்தர சீவனோபாயமாக விளங்கக் கூடிய சீவல் தொழிலை அவர் மேற்கொண்டமையே தொழிலை மதிக்கின்ற ஒருவராக, ஒரு புரட்சியாளராக, ஒரு முன்னோடியாக அவரை எம்முன் நிறுத்துகின்றது.

பொதுவாக, துறைசார் நூலொன்று வெளிவருகின்றபோது

அந்நூல் யாரால் எழுதப்பட்டது என்பது நோக்கப்படுவது வழமை. நூலாசிரியர் துறைசார்ந்த ஒரு விற்பன்னரா என நோக்குவது ஆய்வு வழிப்பட்ட பார்வையில் தவிர்க்கப்பட முடியாதது. அமரர் மார்க்கண்டு அவர்களின் வரலாற்றைக் கூறும் இந்நூலை எழுதியிருக்கும் பேராசிரியர் மா. கருணாநிதி அவர்கள் ஒரு கல்விப் பேராசிரியர் மாத்திரமல்லாது, கல்விச் சமூகவியலை துறைபோகக் கற்றவர்; அத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். இதுவே இந்நூலுக்கு ஒரு பெறுமானத்தைத் தருகிறது. அமரர் மார்க்கண்டு அவர்களின் வரலாறை எழுதிச்செல்லும் இந்நூலாசிரியர் சமூக மாற்றம், சமூக அசைவியக்கம், சமூக இயங்கியல் என்பவற்றின் பின் புலத்தில் எவரையும் நோகடிக்காத முறையில், மிகவும் நாகரிகமாக, காரண - காரிய நியாயங்களுடன் அவ்வரலாறைக் கூறியிருக்கிறார். ஆழமான, பூடகமான பல விடயங்கள் மிகவும் நாசூக்காக இங்கு தெரி விக்கப்பட்டுள்ளன. அமரர் மார்கக்ண்டு அவர்களின் ஜனனத்தின் நூறாவது ஆண்டின் நினைவாக ஒரு சிறு நூலாக இந்நூல் வெளியிடப் பட்டிருக்கிறதெனினும், எமது கிராமத்தின் சமூக வரலாற்று நூலின் தொடக்கமாகவும் அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பாகும்.

இந்நூலை எழுதியிருப்பவர் ஒரு பேராசிரியர் என்பதனால் மாத்திரம் இந்நூல் சிறப்புப் பெறுவதன்று. அல்வாய்க்கிராமத்தில் பேராசிரியராக முதன் முதலில் வந்த பேராசிரியர் கருணாநிதியின் இடைநிலைக் கல்வியில் வழிகாட்டியாகவும் கண்காணிப்பாளராக வும் இருந்த அமரர் மார்க்கண்டு அவர்களின் வரலாற்றை அவர் எழுதி யிருப்பதனாலும் இந்நூல் முக்கியத்துவமுடையதாகின்றது. மார்க் கண்டு அவர்கள் சீவல் தொழில் செய்து கொண்டு, இடைநிலைக் கல்வி மேற்பார்வை செய்ததன் பேறாக எமது கிராமம் கல்விப் பேராசிரியர் ஒருவரைப் பெற்றிருக்கின்றது என்பது அமரர் மார்க் கண்டு அவர்களுக்கு மாத்திரமன்றி எமது கிராமத்துக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

எமது அல்வாய்க் கிராமத்தவர்கள் எல்லோரும் உறவினர் களே. இந்த உறவின் பேரால் எம்மவர்கள் இயங்கிக் கொண்டி ருந்தமையே எமது கிராமத்தவர்களை, கிராமத்தை வாழ வைத்தது என்பதை எம் இளைய தலைமுறையினர் உணர்ந்து கொள் வேண்டும். அமரர் மார்க்கண்டு அவர்கள் எனது தந்தையின்(திரு ச. தம்பிஐயா) இனிய நண்பர் மட்டுமல்லர், நெருங்கிய உறவினரும் கூட. அமரர் மார்க்கண்டு அவர்கள் எனது தந்தையை அத்தான் என்றே அழைத்து வந்தார். நாங்களும் அவரை மாமா என்றே அழைத்து வந்தோம்.

கருணா அண்ணையும்(பேராசிரியர் கருணாநிதி) மாமா என்றே அழைத்து வந்தார்.

மார்க்கண்டு மாமாவின் ஆளுமையை நான் நன்றாக அறிவேன். எனது தந்தையின் நண்பராக அவர் விளங்கியமையால் அவரைப்பற்றி அறிவதற்கான வாய்ப்பும் இருந்தது. அவர் அரசியல் ஞானம் உள்ளவர். எமது சனசமூகநிலையத்தின் கூட்டங்களிலும் வேறுபல கூட்டங்களிலும் அவர் உரையாற்றும் போது, உலக வரலாற்று நிகழ்வுகளை நினைவு கூர்வார். வரலாற்று நாயகர்களாக விளங்கி வீழ்ச்சியுற்ற ஹிட்லர், முசோலினி போன்றோரை உதாரணங் களாகச் சுட்டிக்காட்டி, நாம் செல்ல வேண்டிய சரியான பாதையை எடுத்துரைப்பார். இதனால் இவரைப் பலர் "அரசியல்" என்றே மறை முகமாகக் குறிப்பிட்டு வந்தார்கள். எனது தந்தையும் மார்க்கண்டு மாமாவும் கொண்டிருந்த நட்பின் ஆழத்தை நான் அறிவேன். இந்த நட்புக் காரணமாகவே எனது தந்தைக்கு துடக்குக் காரணமாகவும் வேறு வசதியீனங்கள் காரணமாகவும் காத்தவராயர் கோயிலுக்கு பூஜை செய்ய முடியாமற்போன வேளைகளில் அமரர் மார்க்கண்டு அவர்கள் காத்தவராயர் கோயிலின் பூசகர் ஆனார். காத்தவராயர் மீது அவர் கொண்ட பக்தி காரணமாகவே தமது இரண்டாவது மகன் கலாநிதி அவர்களின் திருமணத்தை காத்தவராயர் கோயிலிலேயே நடைபெறச் செய்தார். கலாநிதி அவர்கள் நெதர்லாந்தில் இன்று சிறப்புற வாழ்ந்து கொண்டு காத்தவராயர் கோயிலின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவராக விளங்குகிறார். மூத்த மகன் நகுலேஸ்வரனின் மகனாக சர்வநிதி(செட்டி) அவர்கள் காத்தவராயர் ஆலய 5 ஆம் திருவிழாத் தலைவராகவும், ஆலயத்தின் நித்திய அடியாராகவும் தொண்டராகவும், மேம்படுத்துநனராகவும் இருக்கின்றார். இவையாவும் அமரர் மார்க்கண்டு அவர்கள் காத்தவராயர் மீது கொண்ட பக்தியின் பேறுகளே. 1987 இல் குண்டு வீச்சில் மார்க்கண்டு மாமாவும் அவரின் மகன் நகுலேஸ்வரனும் பேர்த்தி குமுதாவும் ஒன்றாக எமது உறவினர்களுடன் சேர்ந்து அவலச் சாவைத் தழுவிக் கொண்டபோது என் தந்தை அடைந்த வேதனையினூடாக எனது தந்தையும் மார்க்கண்டு மாமாவும் கொண்டிருந்த நட்பின் ஆழத்தை நான் அறிந்து கொண்டேன். அவ்வகையில் மார்க்கண்டு மாமா அவர்களின் வரலாற்று நூலுக்கு முன்னீடாக இச்சிறுகுறிப்பை எழுதுவது எனக்கு நிறைந்த ஆறுதலையும் திருப்தியையும் தருகிறது. இந்நூலை வெளியிட முன்னின்று உழைத்த செல்லக்குட்டி கணேசன் மற்றும் உறவினர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

## வே.த.தணிகாசலத்தின்

# “தணியாத தாகம்”

அமரர் வே.த.தணிகாசலம் அவர்கள் நாற்பதுகளின் பிற்பகுதியிலும் ஐம்பதுகளின் முற்பகுதியிலும் சிறுவர்க்கென எழுதியவற்றுட்சில இங்கே தொகுக்கப்பட்டுள்ளன இவற்றுள் அநேகமானவை அக்காலப் பத்திரிகையான “ஈழகேசரி”யில் வெளியானவை. சிறந்த சிறுவர் இலக்கியங்கள் எனச்சிலாகிப்புப் பெற்றுக்கொண்ட சில சிறுவர் நூல்களிற் காணப்படாதவொரு பரிமாணத்தைக் கூட இவற்றில் என்னாற் காணமுடிந்தது.

இத் தொகுப்பிலுள்ள படைப்புகளையே அழகியலைக் கருத்திற்கொண்டு கவர்ச்சிகரமான ஒரு நூலாக வெளியிட்டு வைக்க முடியும் ஆனால், பிரசுர நிறுவனங்களே பின் தங்கி நிற்கும் இக்காலத்தில் தனிமுயற்சியாக நூலொன்றை வெளியிடுவதென்பது இயலாததொன்று. ஆயினும் இலக்கியத்தின் அருமை தெரிந்த அமரரின் மனைவியும் பிள்ளைகளும் அவரின் படைப்புகள் சிலவற்றையும் இந் நினைவு மலரில் சேர்க்க வேண்டுமென விரும்பியமை அமரர் செய்த பாக்கியமே.

அமரத்துவம் அடைந்த ஒருவரைப்பற்றி நினைவு மலர்களில் எடுத்துரைப்பது நமது மரபாகிப் போய்விட்டது. ஆனாலும் மனித நேயமுள்ள ஒரு படைப்பாளியின் ஆத்மாவை அவரின் இலக்கியங் களினூடாகவே தரிசிக்கலாம். எமது சமூகத்தின் மத்தியில் தோன்றிய ஆரம்பகால எழுத்தாளர்களின் எழுத்துக்களை நாம் தரிசிக்க போய் விட்டமை எமது சமூகத்துக்கேயுரிய ஒரு சாபக்கேடுதான். உதிரி களாக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியவற்றைச் சேகரித்து வைக்காமையும், அவற்றைத் தொகுத்து ஒருநூலாக வெளியிட முடியாமற்போனமையையும் கூட ஈழத்து இலக்கிய உலகில் எமது சமூகத்துப்படைப்பாளிகள் மறக்கடிக்கப்பட்டமைக்

கான காரணங்கள் தான். மறைந்து போன நமது படைப்பாளிகள் சிலரின் ஆக்கங்களைத் தொகுத்து நூலாக வெளியிடுவோம் என்று கூறப்பட்ட சில உறுதி மொழிகள் காற்றோடு காற்றாய்க் கலந்து விட்டன என்பது குறித்து விசனமடையாதிருக்க முடியவில்லை.

அமரர் வே.த.த. இன் வேறுபடைப்புகள் பல்கலைக்கழக நூலக களஞ்சியத்தில் உள்ளபோதும், அவற்றைப் பெற முடியாத கால நிலை காரணமாக, அவர் வசமிருந்த படைப்புகளில் சிறுவருக்கான சிலவற்றையே தொகுக்கலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. சிறுவர் இலக்கியம் பற்றிப் பிரஸ்தாபிக்கும் விமர்சகர் எவரும் இத் தொகுப்பிலுள்ள படைப்புகளைப் புறக்கணித்து விட முடியாது என்ற நம்பிக்கை எனக்குண்டு.

*07.01.1988*

## ஜே.எஸ்.ராஜ் இன்

# "உயிர்த்தெழும் வலிகள்"

*ஜே.எஸ்.ராஜ் அவர்களின் கவிதைத் தொகுதியான "உயிர்த்தெழும் வலிகள்" என்ற நூலுக்கு முன்னீடு வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*இளையோரிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்ற இலக்கிய வகைமையாக இன்று கவிதை இருந்து வருகின்றது. கவிதைகளைப் படிப்பதிலும் படைப்பதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அநேகமாக, இன்றைய தலைமுறையினரின் இலக்கியப் பிரவேசம் கவிதையினூடாகவே நிகழ்கிறது. இதற்குக் காரணம், கவிதை தனது மரபுத்தளைகளையெல்லாம் களைந்து விட்டு புதுக்கவிதையாக நிற்பது தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.*

*கவிதையின் கூறுகளாக பலவற்றை உரைப்பர். பாடுபொருள், கையாளப்படும் சொற்கள், ஓசை நயம், அணிகள், உருக்காட்சி, படிமம், கற்பனை, கவிதையின் நோக்கு, கவிஞனின் ஆளுமை, கவிதைக்கும் சமுதாயத்துக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்பு என்றவாறாக கவிதையின் உட்கூறுகள் பலவாக இருக்கின்ற போதும், உணர்வினதும் அறிகையினதும் இணைவு கவிதையில் முக்கிய மானது. கவித்துவ உள்ளம் உணர்நிலையையும் உணர்ச்சியையும் இணைத்து கவிதையாக வெளிப்படுத்த முனைகின்ற போதும், அறிகை பற்றிய தெளிவை ஏற்படுத்துவதையே முக்கிய நோக்காகக் கொள்ள வேண்டும். இதனால், கவிதை வழியாகக் கிளம்பும் உண்மைகள் மிக வலுவானவை. கவிதையில் உளப்படிம வார்ப்புக்களுடன் மொழி ஒன்றிணைக்கப்படுகின்ற போதே, கவிஞனின் அறிகையை கவிதை உணர்த்தும்.*

*உளப்படிம வார்ப்புகளும் மொழியும் ஒன்றிணைக்கப்படும்*

அளவுக்கு அறிகை நேர்விகித சமமானது என பய்வியோ (Paivio) தனது இரட்டைக் குறியாக்கக் கொள்கையில் குறிப்பிட்டார். கவிதையின் தொனியும் சொற் சிக்கனமும் குறிப்புணர்த்தலும் குறைவான சொற்களில் அனுபவ வெளிப்பாடும் கவிதையை உச்சத்துக்குக் கொண்டு செல்வன. கவிதை புனைதலில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வதன் மூலமும் உலகியல் அனுபவங்களைப் புலக்காட்சி (Perception) பெறுவதன் மூலமுமே கவிதைப்புனைவு வளம்பெறும்.

இக்கவிதைத் தொகுப்பில் பல உண்மைகளை ஒளிவு மறைவின்றிக் கூறும் பணிபு மலிந்து கிடக்கின்றது. இதுவே இக் கவிதைகள் சத்தியமானவை என்பதை உணர்த்துகின்றது. உண்மை களை உள்ளபடி உரைத்தலும் படிமம் வார்ப்புச் செய்தலும் இன்றைய இளம் தலைமுறையினர்க்குக் கைவரப் பெற்றனவாக உள்ளன. இந்நூலின் ஆசிரியரிடத்தும் இவை முனைப்புப் பெற்றிருப்பதை இந்நூலிலுள்ள கவிதைகள் எடுத்துரைக்கின்றன. இவரின் கவிதை ஆற்றல் மேலும் வளம்பெற வேண்டும், இன்னும் பலவற்றை இவர் சாதிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

## ச.அமிர்தலிங்கத்தின் 'நவீன கல்விப்பிரயோகங்கள்'

*திரு.சதாசிவம் அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக அர்ப்பண சேவை ஆற்றி வருகின்றார். ஆரம்பக்கல்வியை யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்திலும், இடைநிலை, உயர்தரக்கல்வியை யா/வேலணை மத்திய கல்லூரியிலும் பெற்றுக்கொண்ட இவர் தமது விருதானமாணி (கணிதம்) சிறப்புப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணிதத் துறையில் மூன்றுவருடங்கள் போதனாசிரியராகக் கடமையாற்றிய இவர், தொடர்ந்து நு/ஹட்டன் ஹைலன்ஸ் மத்திய மகா வித்தியால யத்திலும், யா/வேலணை மத்திய கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றி அதன்பின் கணிதபாட ஆசிரிய ஆலோசகராகவும் சேவை புரிந்தார்.*

*இவர் அதிபர் தர போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றதன் மூலம் யா/புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயத்தின் அதிபரான தோடு 1995ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையிலும் சித்தியடைந்தார். 1996 இல் ஸ்ரீபாத தேசிய கல்வியி யற் கல்லூரியில் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் 2 -* II *இல் சிரேஷ்ட விரிவுரையாளராக சேவையைத் தொடங்கிய இவர் 2004 இல் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் 2 -* I *இற்கு பதவி உயர்வு பெற்று உபபீடாதிபதியானதோடு 28.04.2013 முதல் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். தற்போது இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் 1 நிலையை அடைந்துள்ளார்.*

*இலங்கை கல்வி அமைச்சின் புலமைப்பரிசில் பெற்று தாய்லாந்து ஆசிரிய தொழில் நுட்பக் கல்லூரியில் (*AIT*) தகவல் தொழில்நுட்ப* MSC *கற்கைநெறியைப் பூர்த்தி செய்த திரு.அமிர்த லிங்கம், பிரயோகப் புள்ளி விபரவியல்* MSC *பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்பின் பின்னான*

முகாமைத்துவ டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் பெற்றுக் கொண்டார்.

தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, திறந்த பல்கலைக் கழகம், வவுனியா வளாகம் என்பவற்றின் வருகை விரிவுரையாளராக வும் தேசிய கல்வி நிறுவக MEd பாடநெறி இணைப்பாளராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றி வரும் இவர் பல கல்வியியற் கட்டுரைகளையும் ஆய்வுக் கட்டுரைகளையும் தொடர்ந்து எழுதி வருகின்றார். இச்சந்தர்ப்பத்தில் “நவீன கல்விப் பிரயோகங்கள்” எனும் இந்நூல் வெளிவருவது பொருத்தமானது. இவரின் அறிவுப்புலத்தையும் ஆற்றலையும் இந்நூல் வெளிக் கொணருமென நம்புகின்றேன். மேலும், இவரின் சேவை தொடரவும் அரிய நூல்கள் பல வெளியிடவும் வாழ்த்துக்களைத் தெரிவித்து இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

## செல்லக்குட்டி கணேசனின் அடையாளம்

*நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்த செல்லக்குட்டி கணேசன் இன்று அகவை அறுபதை நிறைவு செய்கிறார். சமூகச் சிந்தனையும் புரட்சிகரமான எண்ணங்களும் கொண்ட கணேசன் இன்று ஒரு கவிஞராக அடையாளப் படுத்தப்பட்டிருக்கிறார்.*

*எமது சமூகத்தின் கல்விக்கண் திறந்த யுகபுருஷரான பெரியார் கா.சூரன் அவர்களுக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியிலேயே சிலை நிறுவிய பெருமை கணேசனுக்குரியது. அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா அவர்களின் "வளர்பிறை" (1952) எனும் கவிதைத் தொகுதியை ஐம்பது ஆண்டுகளின் பின் 2002 இல் மீண்டும் நூற்பதிப்புச் செய்து வெளியிட்டார்.*

*அண்மைக்காலங்களில் தாம் எழுதிய கவிதைகளைத் தொகுத்து "ஒரு புள்ளியில் ஓடும் முட்கள்" என்ற கவிதை நூலை வெளியிட்டதன் மூலம் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகமான செல்லக்குட்டி கணேசன், இன்று இலக்கியத் தொடர்புகளை வளர்த்துக் கொண்டு வருபவருமாவார். இதனை இந்த நூல் நன்கு பதிவு செய்கிறது.*

## இராஜினிதேவி சிவலிங்கத்தின் பல்துறைசார் கட்டுரைகள்

*அண்மைக் காலங்களில் திருமதி இராஜினிதேவி சிவலிங்கம் படைப்புகள் கவனத்திற்குள்ளாகி வருகின்றன. இலக்கிய சஞ்சிகை களிலும் வார மஞ்சரிகளிலும் இவரது சிறுகதைகள், கட்டுரைகள் இன்று அடிக்கடி வெளியாகி வருகின்றன. இவரது சிறுகதைகள் பெரும்பாலும் மனித நேயத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. சமூக ஊடாட்டத்தினூடு வெளிப்படும் மனித நடத்தைகளை, அவற்றின் பலங்களுடனும் பலவீனங்களுடனும் இவரது சிறுகதைகள் பதிவு செய்கின்றன. இவர் யாழ்.கோப்பாய் கிறஸ்தவ கல்லூரியில் உதவி அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றவர். மாணவர்களின் தேவைகளை அறிந்து அவர்களின் தேடல்களுக்கு வழிகாட்டி வரும் இவர், உயர் கல்வி பயிலும் மாணவர்களின் பல்துறை சார் அறிவு விருத்திக்காக "பல்துறைசார் கட்டுரைகள்" என்ற இந்நூலை வழங்கியுள்ளார். மாணவர்களுக்கு மாத்திரமன்றி பொதுவான வாசகர்களுக்கும் இந்நூல் பயன் தருவது. நூலாசிரியரது பல்துறைசார் அறிவு இந்நூலில் வெளிப்படுகின்றது.*

## இராஜகிருபனின் இரவின் எதிர்ப்பூக்கள்

*அல்வாய் வடக்கு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தங்க வடிவேல் கிருபாகரன், "இராஜ கிருபன்" என்ற புனைபெயர் பூண்டு, கவிதைகளை எழுதி வந்தவர். உயர்கல்வி பயின்ற காலத் திலேயே பல்துறை ஆற்றல் கொண்டவராய். இலக்கியத்தேடலில் ஈடு பாடுள்ளவராய் விளங்கினார். எழுத்துலகில் தனது கவிதைகளினூடு கால் பதிக்க விழைந்தவர். சமூக யதார்த்தத்தை தன் கவிதைகளினூடு வெளிப்படுத்த முயன்றார். அங்கொன்றும் இங்குமொன்றுமாய் இக்கவிஞரின் கவிதைகள் தொடர்ந்து பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் பிரசுரமாயின. எதிர்பாராதவிதமாக உடலியற் கூறுகளில் ஊறு நேர்ந்தது. இவரின் கைகள் இயங்க மறுத்தன. இவர் துவண்டு போய்விடவில்லை. பிள்ளைகளினதும் பிறரின் உதவியுடன் தன் தரிசனப் பார்வையை தன் சிந்தனை வெளிப்பாட்டினூடாகக் கவிதைகளாகப் பதித்துக் கொண்டார். உடல் நலக் குறைவை. வலியை தனது கவிதைகளினூடு மறக்க முனைந்தவரை "காலதூதன்" விட்டு வைக்கவில்லை. இவரின் மரணம் இவரை அறிந்தவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. எனது நல்லதொரு மாணவனை இழந்த துயரம் எனக்கும் உண்டு. ஆனால், தெரிந்தெடுத்த சில கவிதைகளின் தொகுப்பாக அமையும் இந்நூலில், கவிதை வரிகளில் கவிஞன் இராஜகிருபன் வாழ்கின்றான்.*

## வெ.துஷ்யந்தனின் வெறிச்சோடும் மனங்கள்

*ஜீவநதியின் துணை ஆசிரியரான வெற்றிவேல் துஷ்யந்தன் கவிதைத் துறையில் காலடி பதிக்க வேண்டும் என்ற நாட்ட முடைய வர். பாடசாலைக் காலத்திலிருந்தே பத்திரிகைகளில் கவிதைகளை எழுதத் தொடங்கிய இவரின் கவிதைகள் அண்மைக் காலத்தில் ஈழத்தின் முன்னணிச் சஞ்சிகைகளில் பிரசுரமாகி வருகின்றன. எந்தவித ஆரவாரமுமின்றி தனது கவிதைகளை எழுதிச் செல்பவர் வெ.துஷ் யந்தன் என்பதால், இன்றைய "சலசலப்பு"களுக்குள் அகப்படாதவர் இவர். இன்றைய உளவியல் ஆய்வுகள், சிறந்த மனித ஆளுமையில் பிறப்புரிமைக் காரணிகளின் செல்வாக்கையும் சூழற் காரணிகளின் வளமாக்கலையும் வலியுறுத்துகின்றன. அவ்வகையில், வடமராட்சி யின் சிறந்த கலைப் பாரம்பரியத்தின் ஒரு விழுதாகவும் வெ.துஷ் யந்தன் விளங்குகிறார். இவரின் தந்தைவழிப் பேரன் வே.பாலசிங்கம், தாய்வழிப் பேரன் நா.கிருஷ்ணபிள்ளை வடமராட்சியின் சிறந்த இசைநாடகக் கலைஞர்களாக கணிக்கப்பட்டவர்கள். பிரபல நாவலாசிரியர் கே.டானியல் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் "துருவன்" இசைநாடகத்தில் வே.பாலசிங்கம் அவர்களின் நடிப்புத் திறமை குறித்துக் குறிப்பிட்டிருந்ததும் கவனத்திற்குரியது.*

*மரபுவழிக் கலைகளின் எதிர்காலம் பற்றிய விவாதங்கள் இடம்பெற்று வரும் இந்நாளில், இசைநாடகங்களிலும் துஷ்யந்தன் ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. பழைய மரபுவழி இசைநாடகங்களில் கதாநாயகன் பாத்திரமேற்று, சிறப்பாகப்பாடி நடித்துவரும் இவர் வடமராட்சியின் "எதிர்கால இசைநாடக நடிகர்" என்ற நம்பிக்கையையும் மக்களிடையே விதைத்து வருகிறார்.*

*"வெறிச்சோடும் மனங்கள்" என்ற இக்கவிதைத் தொகுதி, கடந்த ஐந்து ஆண்டுகளில் துஷ்யந்தன் எழுதிய கவிதைகளின் தொகுப்பாகும். இக்கவிதைகளினூடே பயணிக்கும்போது, அண்மைக் காலங்களில் இவர் எழுதிய கவிதைகளில் வெளிப்படும் "தொனிப்பொருள்" எதிர்காலத்தில் சிறந்த கவிஞராகவும் இவர் விளங்குவார் என்ற நம்பிக்கையையும் தருகிறது.*

## அ.பௌநந்தியின் இன்னபடி முரணிலை

*அமிர்தலிங்கம் பௌநந்தி அவர்கள் தமிழைத் துறைபோகக் கற்றவர். தமிழில் இளமாணி சிறப்புப் பட்டமும் முதுதத்துவமாணிப் பட்டமும் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளராக கடமையாற்றும் இவர், பழந்தமிழ் இலக்கியங் களிலும் நவீன இலக்கியங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடுகாட்டி வருபவர். அவர் கவிதை, நாவல் ஆகிய துறைகளிலேயே தமது பட்டங்களுக் கான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். சிறந்த விமர்சகராகவும் விளங்கும் பௌநந்தி அவர்கள் குறிப்பாக பெண் கவிஞர்களின் கவிதை வெளிப்பாடு குறித்து தமது விமர்சனத்தை ஆழமாக முன்வைப்பவர். "இன்னபடி முரணிலை" எனும் இத்தொகுப்பில் ஐந்து பெண் கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் பெண்ணியச் சிந்தனைகள் குறித்தும் இரு பெண் கவிஞர்களின் கவிதைகளில் மேலோங்கியுள்ள இனவிடுதலை உணர்வு குறித்தும் தமது விமர்சனங்களை நேர்மையாக முன்வைத்துள்ளார். ஆய்வரங்குகளில் முன்வைக்கப்பட்ட கட்டுரை களையும் உள்ளடக்கியுள்ள இந்நூலானது படைப்பாளிகளாலும் ஆய்வாளர்களாலும் வகை மாதிரியாகக் கொள்ளத்தக்கது.*

## அல்வாய் மனோகராக் கவிஞர்கள்

*அல்வாய்க் கிராமத்தைச் சேர்ந்த நாற்பத்தினான்கு பேரின் கவிதை களைக் கொண்ட தொகுப்பு நூல் இது. இக்கவிதைகள் யாவும் அறுபதாண்டு காலப்பகுதியிலே மூன்று தலைமுறைகளைச் சேர்ந்தவர்களால் படைக்கப்பட்டவை என்பது ஆச்சரியத்திற் குரியது. இத் தொகுப்பில் எமதூரில் வாழ்ந்த இன்னும் சிலரின் கவிதைகள் விடுபட்டுப் போயிருக்கலாம். அதற்குக் காரணம் அவை பதிவுகளாக இல்லாமையே. ஆவணப்படுத்தலின் அவசியத்தை உணர்ந்து "நாங்கள்" எனும் ஆவணப் பத்திரிகை வெளி வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இப்பத்திரிகையில் இடம்பெற்ற நாற்பத்தினான்கு பேரின் கவிதைகளைத் தொகுத்து "ஜீவநதி" பதிப்பகம் கவிதை நூலாக வெளியிடுவது நல்ல முயற்சி. இக்கவிதை களினூடாக இக்கிராமத்தின் ஆத்மாவையும் கவி உள்ளங்களையும் தரிசிக்க முடிகிறது.*

# பின் இணைப்பு:

## நோயாளிகளின் நம்பிக்கையாய் விளங்கிய மருத்துவர் விக்கினேஸ்வரா!

(சுன்னாகத்தில் நீண்ட காலம் மருத்துவ சேவையாற்றிய டாக்டர். விக்கினேஸ்வராவின் இரண்டாம் ஆண்டு (22.02.2022) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

*டாக்டர். ப. விக்கினேஸ்வரா அவர்கள் கற்றறிந்த அறிஞரும், தொழில் வல்லுநர்களின் மிகவும் புகழ்பெற்ற பரம்பரையின் புகழ்பெற்ற வாரிசு ஆவார். 1968இல் அரசுப் பணியை துறந்து தனியார் மருத்துவ பயிற்சியில் இறங்கினார். அவரது தொழில்முனை திறன்கள், அமைதியான இயல்பு, பொறுமை ஆகியவை அவரை ஒரு செழிப்பான நடைமுறை வாழ்வை நிறுவ உதவியது.*

*யாழ்ப்பாணத்தில் பரவலான அரசியல், சமூக எழுச்சி மற்றும் போர் இருந்தபோதிலும், அவர் தனது மருத்துவ சேவையை காலையிலேயே ஆரம்பித்து விடுவார். அவரது உன்னத குணங்கள், மறக்கமுடியாத பொறுமை, மற்றும் பெருந்தன்மை ஆகியவை என்றென்றும் போற்றப்பட வேண்டியவை.*

*அத்துடன் அவரது திறமை, அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் நோயாளிகளின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் திறன் ஆகியவை அவரது மகத்தான வெற்றிக்கு அடிப்படையாக இருந்தன. அவரது பெயர் அன்பான குணங்களைக் கொண்ட ஒரு நபரின் நினைவை என்றும் தூண்டுகிறது.*

*அவரது மருத்துவ சேவைகள் கிராமப்புறத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மகத்தான நிவாரணத்தை அளித்தன. டாக்டர்.ப.விக்கினேஸ்வரா, எனது சகோதரர் மறைந்த டாக்டர். வி.கேதாரநாதன், மருத்துவக் கல்லூரியில் சமகாலத்தில் கற்றவர்கள்.*

*தற்போது கற்பித்தல் மற்றும் மருத்துவத் தொழில்கள் மக்கள் சேவைகளை ஒழுங்கமைப்பதை கடினமாக்கும் பெரும் தொழில்களாக*

*மாறிவிட்டன. எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் சுன்னாகத்தில் உள்ள ஒரே மருத்துவ நிலையத்திற்கே செல்வேன்.*

*அவரது மருத்துவ கைராசி பதற்றத்தைத் தணிக்கவும் நோயாளியின் நம்பிக்கையைப் பெறவும் உதவியது. பல காலமாக அவர் எங்கள் குடும்ப மருத்துவராக இருந்தார். அவரது சிறந்த சேவையை ஆழ்ந்த நன்றியுடன் பாராட்ட விரும்புகிறோம்.*

*உன்னதமான தொழில்களில் பலர் இடைவிடாது இலாபம் தேடும் வேளையில் டாக்டர்.பி.விக்னேஸ்வரா வசதி குறைந்தவர் களுக்கு சேவை செய்வதிலும், அவர்களின் துன்பங்களைப் போக்குவதி லும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.*

*நீண்ட, அற்புதமான சேவைக்குப் பிறகு, அவர் 22.02.2022 அன்று சிட்னியில் இறைவனடி சேர்ந்தார். அவரது வாழ்க்கையின் அந்திம காலங்களில் அவரைக் கவனித்துக் கொள்ளும் பாக்கியம் அவருடைய குழந்தைகளுக்கு இருந்தமை பெருங்கொடையே. அவர் விட்டுச் சென்ற நல்நினைவுகள் என்றென்றும் பொக்கிஷமாக இருக்கும். மேலும் பல தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும்.*

வி.ஏகாம்பரநாதன்.
ஓய்வுபெற்ற கல்வியியல் அதிகாரி,
உடுவில்.



தமிழ் உலகிற்கு கலாநிதி தம்பிஜயா கலாமணி ஆற்றிய இலக்கிய, நாடகப் பணி வரலாற்றில் முக்கியமானது. இலக்கியப்பணியை ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் செய்த அவரின் வாழ்வும் பணியும் காலங்காலமாக போற்றப்பட வேண்டும்.

தலைமுறை தலைமுறையாக செய்யவேண்டிய நாடக வழி முறைகளையும், அதனால் கிடைக்கிற பிரதிபலன்கள் அனைத்து மக்களிடம் கிடைக்க வேண்டுமென்கிற ஆர்வம்தான் கலாநிதி தம்பிஜயா கலாமணியின் வாழ்நாள் சாதனையாக மிளிர்கிறது.

பல்வேறு காலகட்டங்களில் கலாநிதி கலாமணி எழுதிய முன்னுரைகள் ஒரு நூலின் உள்ளடக்கத்தை, தெளிவான பார்வையை வாசிக்கும் வாசகர்களுக்கு உத்வேகமூட்டியது. ஓர் நூலுக்கு பல நூறு புத்தகங்களிலிருந்து தரவுகள் எடுக்கப்பட்டாலும், ஆசிரியரின் கருத்தை அப்படியே சொல்லவேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தி முன்னுரை வரைவதில் கலாநிதி கலாமணி யின் எழுத்து வண்ணம் அழகானதாகும்.

ISBN 9 789550 958559
9 789550 958559